# ஆலய அபிஷேக விழா

# சிறப்பு மலர்






**புனித செபமாலை அன்னை ஆலயம்**

**இரணைமாதா நகர், இரணைதீவு**

**10.05.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பொது நூலகம்
இரணைதீவு, பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய அபிஷேக விழா

# சிறப்பு மலர்



**புனித செபமாலை அன்னை ஆலயம்**

**இரணைமாதா நகர்**

**இரணைதீவு**

**10.05.2023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரணைமாதா நகர் ஆலய அபிஷேக விழா சிறப்பு மலர்

பதிப்புரிமை: © மலர்க்குழு
வெளியீடு: ஆலய அருட்பணிச்சபை
முதற்பதிப்பு: மே 2023
நூல் வடிவம்: ஜே. எஸ். பிறின்ரேஸ், பண்டத்தரிப்பு.
பக்கங்கள்: 105
அளவு: B5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# The Holy Father Francis

cordially imparts the requested Apostolic Blessing to

**Rev. Sr. Emil Rajeswaran Paul and all the Saithful**

**of St. Mary's Church, Iranaimatha Nagar**

on the occasion of the Open Ceremony of the New Church

and through the intercession of the Virgin Mary
invokes an abundance of Divine graces

10th May 2023

*Ex Aedibus Vaticanis, die 17.06.2017*

+ Konrad Krajewski


*Archiepiscopus Eleemosynarius Apostolicus*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருத்தந்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது ஆயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செபமாலை அன்னை விருத்தம்

பரலோக பூலோக அரசியாய் பன்னிரெண்டு
விண் நட்சத்திரங்களைத் தலையில்
முடியாய் சூடி மோட்ச சிம்மாசன
அலங்காரியான செபமாலை அம்மா!
முத்தலங்காரி உயர் கற்பலங்காரி வான்
மோட்ச முடி பெற்ற அலங்காரி இ. இ. இ
அன்பின் வளர் பொன்மணி அருளின் வளர்
கண்மணி அன்பு உயர் பொற்பூமணி!

வாராயோ அம்மணி! அருமைமிகு பொன்மணி!
பரவர் குல வங்கிசாரணி!
பாராயோ எப்பதியில் சீரான வாழ்வு
நெறி நேராக நின்றிலங்க
தாராயோ உன்பாதம் சேவைபுரி
மீனவர் மாருத அன்பு நெறியில்
தளாத செல்வநிலை மேலாக ஓங்கிடத்
தற்பரனை வேண்டுமம்மா!

கருணையோடு எமதூர் வறுமை பிணி தீர்த்திடுமே
கன்னிகுமர் கற்பு நெறியில்
காலமுயர் சீல நெறி வாலிபர் இணைந்துமே
கல்யாண மேன்மை பெறவும்
வளர்மிகுந்திரு புத்திரபாக்கியம் மேலோங்கவும்
உயர்கலை ஒளி வீசவும்
உம்பரன் தாழ் பணிந்தென்றுமே நம்பினோர்
உயர்வு நிறைவு வாழ்வு பெறவும் அருளுமம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழுவின் உள்ளத்திலிருந்து...

கிளிநொச்சி மாவட்டத்தில் பழம்பெரும் கிராமமாம் இரணைதீவு. தொன்மைகளின் அடையாளமாக விளங்குகின்ற இக்கிராமத்திலிருந்து, 1992களில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்து, பூநகரி பிரதேசத்தில் 'இரணைமாதா நகர்' என்னும் நாமம் சூட்டி குடியமர்ந்த மக்கள், கத்தோலிக்க விசுவாசத்தின் அடையாளமாய் விளங்கும் ஆலயம் அமைத்து திறப்பதற்கான ஏற்பாடுகளை நீண்ட காலமாக மேற்கொண்டு இன்று அதை விழாவாக கொண்டாடுவதையிட்டு எமது கிராமமே விழாக்கோலம் பூண்டு நிற்கின்றது. இருபது ஆண்டுகள் உருண்டோடி இப்பொன்னாலாகிய வனப்பு மிகு அன்னையின் ஆலயத்திறப்பு விழா சிறப்பிதழ் உங்கள் கைகளில் தவழுகின்ற போது கடந்துவந்த பாதையில் உள்ள எமது சமூகத்தின் அர்ப்பணிப்புகளுக்கு தலைசாய்த்து மலர்க்குழு என்ற வகையில் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம்.

தங்கள் கைகளில் தவழும் இம்மலருக்கு ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்திகளுடன் திறப்பு விழா சிறப்பு மலர் என்ற வகையில் வானுயர எழுந்து நிற்கும் அவ்வாலய பார்வை என்கின்ற வரலாற்று அறிக்கையையும் எமது பூர்வீக மண்ணாம் இரணைதீவும் அதன் தொன்மை பற்றிய ஆய்வுக்கட்டுரையும் மேலும் தற்போதைய கிராமமாம் இரணைமாதா நகர் கிராமம் தோன்றியதும் அதனுடன் அதன் வளர்ச்சிப் போக்கு பற்றிய வரலாற்று அறிக்கையும் மேலும் எமது சமூக உட்கட்டமைப்புக்களான கடற்றொழில் சங்கம், சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம், கலை பண்பாட்டு விழுமியங்கள், பக்திச் சபைகள் போன்றவற்றின் கள ஆய்வு அறிக்கைகள் அடங்கியதாகவும் இரணைதீவின் பெயர் சொல்ல வைத்த இரு மாபெரும் போராட்டங்கள் தொடர்பான மனப்பதிவுகளும் இரணைதீவின் இயற்கை வனப்பும் அதன் பெருமைகள் தொடர்பாக விளக்குவதாக கட்டுரையும் மேலும் அன்னையின் அற்புதங்கள் என்ற சிறப்பு பார்வையும் நன்றி நவிலல் உரையும் இந்நூல் தாங்கி நிற்கின்றது.

மேலும் இந்நூலின் பிரதான நோக்கமாக அமைவது பல நூற்றாண்டுகளாக தொன்மை வரலாற்றைக் கொண்டமைந்த சமூகம் வரலாற்று ஆவணமின்றி பயணிப்பது மன வேதனை தருகின்றது. எனவேதான் வான்தொடும் அளவிற்கு பிரமாண்ட ஆலயம் அமைக்கும்போது எமது சமூகம் யார்? அவர்களின் தோற்றுவாய் எங்கிருந்து அமைகின்றது? அதுமட்டுமல்லாது நாற்புறமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவில் பண்பாட்டு விழுமியங்களோடும், இறை விசுவாசத்தோடும் பயணிக்கின்ற எமக்கு எமது சமூகத்தின் ஆரம்பகால வரலாற்று சிறப்புக்களை அடுத்த தலைமுறைக்கு கையளிக்க வேண்டிய தேவையும் கடப்பாடும் உண்டு என்பதை தெளிவூட்டவே இந்நூல் ஒரு வரலாற்று ஆவணமாக வெளியிடப்படுகின்றது. எனவேதான் இம்மலருக்கான வேலைகளை ஆரம்பிக்கும்போது இம்மலர் சிறப்பானதாக அமைய வேண்டுமென உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றியை தெரிவித்து நிற்கின்றோம். இம்மலரானது எட்டுத்திக்கும் மணம் வீச ஆசிச்செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் ஆக்கத் தொகுப்புக்களையும் வழங்கிய அத்தனை உள்ளங்களுக்கும் நன்றியுடன் கூடிய வாழ்த்துக்களை கூறிநிற்கின்றோம்.

காலச்சூழ்நிலை காரணமாக சில வரலாற்று ஆதாரங்கள் பெறமுடியாமல் போனாலும் குறுகிய காலத்திற்குள் தேவைப்பட்ட ஆக்கத் தொகுப்புக்களை துரித வேகத்தில் தொகுத்து தந்ததன் விளைவாக ஓரளவுக்கு இந்நூல் தரவேற்றம் செய்ய முடிந்துள்ளது. இன்னும் தேவையான தேடல்கள் நடைபெற்றுக்கொண்டே இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றோம்.

எவ்வாறாயினும் மலர் வெளியீடு எமது கிராமத்தின் ஒரு வரலாற்றுப் படைப்பாகவே பார்க்கிறோம். எனவே பிழைகள், தவறுகள் நேர்ந்திருக்கலாம். ***"நேர்கொண்ட சிந்தனையாளர் பொறுத்திடுவீர்"*** என்ற திடமான நம்பிக்கையோடு இரணைதீவு, இரணைமாதா நகர் கிராம மக்கள் எல்லா வளமும் பெற்று செல்வச் செழிப்புடனும் உடைந்துவிடா சமூக ஒற்றுமையுடனும் அனைவரும் செயற்பட புனித செபமாலை அன்னையின் ஆசீரை வேண்டி இம்மலரினை சமர்ப்பணம் செய்கிறோம்.

**– மலர்க்குழு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்க் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட ஆயரின் ஆசிச்செய்தி



இரணைமாதாநகர் புனித செபமாலை மாதா புதிய ஆலய திறப்பு விழாவை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஆசியுரை வழங்குவதை முன்னிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த புதிய ஆலயத்தின் கட்டிட பணியை நிறைவு செய்ய பாடுபட்டு உழைத்த குருக்கள், துறவிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இரணைமாதாநகர்பழமைவாய்ந்த,தொன்மையானபரம்பரியங்களுடன்,கத்தோலிக்க திருமறையினை பின்பற்றுகின்ற, ஒரு கத்தோலிக்க கிராமம் ஆகும். புனித செபமாலை அன்னை ஆலயமானது இரணைதீவின் பிரதான ஆலயமாக இருந்து வந்திருக்கின்றது. காலத்தின் நியதியால் கணத்த இதயத்தோடு, கண்ணீர் மல்க, 1992 இல் தம் முன்னோர் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த தம் சொந்த மண்ணை விட்டுவிட்டு முழங்காவில் பகுதியில் புதிய குடியேற்ற கிராமமாகிய இரணைமாதா நகரில் குடியமர்த்தப்பட்டார்கள். இல்லிடம் மாற்றம் அடைந்தாலும் அன்னையின் பிரசன்னம் எப்போதும் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தமது கிராமத்தில் செபமாலை அன்னைக்கு ஒரு ஆலயத்தை அதே ஆண்டிலேயே தற்போதய திருக்குடும்ப கன்னியர்மட காணியில் முதல் முறையாக அமைத்தார்கள். 1996 இல் தற்போதைய ஆலய காணியில் இடப்புற பாலை மரத்தடியில் இரண்டாவது முறையாக ஆலயம் அமைத்தார்கள். பின்பு 2003 ம் ஆண்டில் தற்போதைய புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டு இன்று கிட்டதட்ட இருபது வருட நிறைவில் பலரது அயராத உழைப்பினால் இந்த அழகான, பிரமாண்டாமான ஆலயம் அமைக்கப்படிட்டுக்கின்றது.

இன்று எமது மறை மாவட்டத்தில் பல ஆலயங்கள் புதிதாக அமைக்கப்படுவதுடன் புனரமைப்புப் பணிகளும் முன்னெடுக்கப்படுகின்றன. பெரும்பாலான பங்குகளில் புலம்பெயர் நாடுகளில் வாழும் எம் உறவுகளின் பங்களிப்பு இன்றி இத்தகையை வேலைகளை முன்னெடுப்பது என்பது சாத்தியமற்ற ஒரு விடயமாக இருக்கின்றது. ஆனால் இந்த பிரமாண்டமான ஆலயத்தின் பெரும்பாலான பகுதியினை உள்ளூர் மக்களின் கடின உழைப்பாலும், உதவியாலும், செய்து முடித்திருப்பது பாராட்டபட வேண்டிய ஒரு விடயமாகும்.

எனவே, இந்த பிரமாண்டமான புதிய ஆலயத்தை கட்டிமுடிக்க உழைத்த பங்கு தந்தையர்கள், அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு, இறை ஆசீரையும் வழங்கி நிற்கின்றேன். உங்கள் முயற்சிகள் தொடரவும், உங்கள் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் வெற்றிபெறவும், ஒற்றுமையாக உழைக்கின்ற பங்கு திரு அவையாக மென்மேலும் வளர்ச்சி பெறவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்**

யாழ். ஆயர்.

+ Gnanapragasam

Rt. Revd. Dr. Justin B. Gnanapragasam
Bishop of Jaffna



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு முதல்வரின் ஆசிச்செய்தி



இரணைமாதா நகரில் புதிதாக கட்டி எழுப்பப்பட்ட மரியன்னை ஆலய திறப்பு விழாவின் பொழுது இறையாசீர் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் அடிக்கல் நாட்டப்பட்டு இப்பங்கில் பணியாற்றிய பல குருக்களுடைய அயராத முயற்சியினாலும் பங்கு மக்களுடைய தாராளமான பங்களிப்பினாலும் இந்த பிரமாண்டமான ஆலயம் அழகாக கட்டி எழுப்பப்பட்டுள்ளது. இங்கு வாழும் மக்கள் மரியன்னை மீது ஆழமான பக்தி கொண்டவர்களாகவும் இறைவனில் எளிமையான விசுவாசமுள்ள மக்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள்.

தமது வாழ்வில் பல நெருக்கடிகள், கவலைகள், இழப்புகள் வந்த பொழுதும் இறைவன் மீது கொண்ட ஆழமான விசுவாசத்தில் தளர்ச்சியுறாமல் எப்பொழுதும் நேர்மையோடும் துணிவோடும் இந்த புதிய ஆலயத்தை அமைக்கும் முயற்சியிலே அவர்கள் ஈடுபட்டு வெற்றி கண்டிருக்கின்றார்கள்.

தமது பாதுகாவலியான அன்னை மரியாளுக்கு இவர்கள் அளித்துள்ள இந்த மகத்தான அழகான அன்புப் பரிசையிட்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளார் முதல் அருட்தந்தை எமில் போல் அடிகளார் வரை இப்பங்கில் பணியாற்றி இவ் ஆலயத்தின் வளர்ச்சிக்கு உதவிய அனைத்து பங்குத்தந்தையர்களையும் நாங்கள் பாராட்டுகின்றோம்.

நீங்கள் சிறப்புற கட்டி முடித்த இந்த ஆலயத்தில் குடிகொண்டிருக்கும் அன்னை மரியாள் உங்கள் எல்லோருக்கும் அமைதியும் ஆறுதலும் மகிழ்வும் நிறைவும் நிறைந்த வாழ்வைத் தன் திருமகனாகிய இறைவனிடமிருந்து பெற்றுத்தருவாராக.

**அருட்பணி. ப. யோ. ஜெபரட்ணம்**
குரு முதல்வர்,
யாழ். மறைமாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.ம.தி. மாகாண முதல்வரின் ஆசிச்செய்தி



இரணைமாதா நகரின் பாதுகாவலிக்கு ஆலயம் அமைத்து அன்னை மரியாளின் அன்பிலும் ஆதரவிலும் வாழ்ந்து சிறப்புறும் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் மற்றும் இறைமக்களுக்கு வாழ்த்துக்களையும் ஆசிகளையும் வழங்குவதில் மகிழ்ச்சி .

கற்களினால் வீடுகள் கட்டப்படுகின்றன. உள்ளங்களினால் இல்லங்கள் அமைக்கப்படுகின்றன. ஆலயங்களோ இறை அருளினால் கட்டப்படுகின்றன. இன்று அழகும் பொலிவுமாய் வானளாவ உயர்ந்து நிற்கும் இரணைமாதா நகரின் அன்னை மரியாளின் ஆலயம் இறை ஆசீர்வாதத்தின் அடையாளம். மரித்தாயின் பரிந்துரையின் சாட்சியம். இறைமக்களின் நம்பிக்கையின் வெளிப்பாடு. குருக்கள், துறவிகளின் உடனிருப்பின் உத்தரவாதம்.

இரணைமாதா நகரின் மக்கள் மண்ணை நேசிக்கின்ற மாந்தர்கள். தங்கள் கத்தோலிக்க நம்பிக்கைப் பாரம்பரியத்தில் நிலையூன்றி விசுவாசத்தில் வளரும் இறைகுல குழுமம். தன் மண்ணைப் பிரியவேண்டியிருந்தாலும் தன் நம்பிக்கையை இழந்து விடாமல் புது மார்க்கங்களை கண்டுபிடித்து பயணிக்கும் திரு அவையாக முன்னேறி வளருவது நமக்கும் நம்பிக்கை தருகிறது.

அமதிக் குருக்களின் பிரத்தியேகப் பணித்தளமாக இருந்து வந்திருக்கிறது இரணைதீவு பணிக்களம். இறை பணியாளர்களை வரவேற்பதில் மாத்திரமல்ல இறைபணிக்கு சிறந்த ஊழியக்காரர்களையும் இது பிறப்பித்துக் கொண்டிருப்பது வரலாறு. வரலாற்றின் இறைவனுக்கு இத்தருணத்தில் நன்றி கூறுவது எம் கடமை எனக்கருதுகிறோம்.

இறைவனே கட்டி எழுப்பினார். நீங்கள் அவர் கரங்களில் நல்ல கருவிகளானீர்கள். மனத்தாலும் பணத்தாலும் ஆண்டவர் உங்களை வலுப்படுத்தினார். ஆண்டவரின் தாய் உங்களின் பரிந்துரையாளராக, பாசத்தின் தாயாக, பாதையின் விளக்காக, வழிநடத்தும் பாதுகாவலியாக உடன் இருக்கின்றார். இனியும் இறையாசீரும், அன்னை மரியாளின் பாதுகாவலும் உங்களோடும் உங்கள் குடும்பங்களோடும், உங்கள் பிள்ளைகளோடும் என்றும் தொடர்ந்து இருக்கும். அன்னை மரியாளுக்கு நீங்கள் எழுப்பி இருக்கும் அழகிய ஆலயமும் உங்கள் பங்குச் சமூகமும் வரலாற்றில் உயர்ந்திருக்க வாழ்த்துகின்றோம்.

**அருள் திரு போல் ஜெயந்தன் பச்சேக் அ.ம.தி**
யாழ் மாகாண முதல்வர்,
அமலமரித் தியாகிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குடும்ப யாழ் மாகாணத்தலைவியின் ஆசிச்செய்தி



மண்ணுலகில், வைக்கோலிலே மானிடக் குழந்தையாகப் பிறந்த இறைமகன் இயேசுவைக் கருவில் சுமந்த அன்னை மரியாளைப் போற்றுகின்ற பக்தர்கள் மட்டிலே, இரணைதீவு மக்களும் உள்ளடங்குகின்றனர். தமது பாதுகாவலியாக புனித செபமாலை அன்னைக்கு விண்ணுலகைத் தொடுமளவிற்கு வானுயரக் கோபுரம் எழுப்பி, அழகுக்கு மேல் அழகு சேர்க்கின்ற மிகவும் பிரமாண்டமான ஆலயத்தைக் கட்டி முடித்த இரணைமாதா நகர் புனித செபமாலை அன்னையின் பங்கு மக்களையும், பங்குத் தந்தையர்களையும் மனமார வாழ்த்தி பாராட்டுகின்றேன். அழகான ஆலயத்திற்கு அழகிற்கு மேல் அழகு சேர்க்கும் விதமாக ஆலயத் திறப்பு விழாவைச் சிறப்பிக்க திறப்பு விழா மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்கின்றேன். ஒரே குடும்பமாக ஒன்றுபட்டு செயற்பட்ட இப்பங்கின் தலைவர்கள், பெரியவர்கள், ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், இளம் யுவதிகள், பாடசாலைச் சிறார்கள், குழந்தைகள் அனைவரையும் மனமகிழ்வுடன் வாழ்த்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

மிகவும் பழமை வாய்ந்த முழுமையான கத்தோலிக்கரைக் கொண்ட இரணைதீவு பங்கின் மக்கள் தமது ஒன்றுபட்ட வாழ்வினாலும், செபமாலை அன்னை மீது கொண்ட அளவில்லாத நம்பிக்கையினாலும் 1992ம் ஆண்டிலே இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்து, தற்போது எமது திருக்குடும்பக் கன்னியர் இல்லம் அமைந்துள்ள வளாகத்துக்குள் தமது முதலாவது ஆலயத்தைக் கட்டியெழுப்பி, தமது சந்ததியினரிடையே இறைநம்பிக்கையை வளர்த்து, திருவழிபாட்டிலே பங்கெடுத்து, அன்னை மரியாளின் பாதுகாவலில் தமது குடும்பங்களை ஒப்புக்கொடுத்து ஆழமான விசுவாச வாழ்வை வாழ்ந்ததன் வரலாற்றை எமது திருக்குடும்ப கன்னியர்கள் நன்கு அறிந்துள்ளனர். 1996ல் தற்போதய ஆலயக் காணியில் இரண்டாவது ஆலயமும், 2000ம் ஆண்டிலே தண்டவாளங்கள் கொண்டமைத்த ஒரு சிற்றாலயமும் இவ்வாலயத்தின் வரலாறாக அமைகின்றன. 2003ம் ஆண்டிலே எமது யாழ் மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு இப்பங்கு மக்களின் கடின உழைப்பாலும், மக்களின் தாராளமான கையளிப்பினாலும் கட்டி முடிக்கப்பட்டு இன்று 2023ம் ஆண்டிலே எமது யாழ் மறைமாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய ஜஸ்டின் பேனார்ட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்படுவதை எண்ணி உள்ளம் பூரிப்படைகின்றேன்.

இரணைதீவிலே ஆலயத்திற்கடியில் கட்டப்பட்டுள்ள நிலக்கீழ் மழை சேகரிப்புத் தடாகம் பற்றியும், இரணைதீவு பற்றியும் எம் அருட்சகோதரிகள் அடிக்கடி பேசுவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறக்கபடாத உண்மைகளில் ஒன்றாக உள்ளது. பழமை வாய்ந்த இரணைதீவிற்கும், புதுமை பொருந்திய இரணைமாதா நகருக்குமிடையே இணைப்பை ஏற்படுத்தியுள்ள இக்கிராமத்து மக்களது விடாமுயற்சியையும் புதிய ஆலயத்தினூடாக தமது பாரம்பரியத்தை தமது சந்ததிக்கு கடத்துகின்ற இவர்களது முயற்சிகளையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இரணைதீவிலே பங்குப்பணி, கல்விப்பணி, மருத்துவப்பணி, எனப் பலவிதமான பணிகளோடுமக்களின்அன்றாடவாழ்வில்இரண்டறக்கலந்துவாழ்ந்தஎமதுஅருட்சகோதரிகள், இடப்பெயர்வின் போதும் காடு வெட்டி, வீடமைத்து பணி தொடர்ந்துள்ளனர்.

இந்நந்நாளிலே அருட்சகோதரிகளையும், குருக்களையும் விஷேடமாக அருட்பணியாளரும் திருக்குடும்ப துணைக் குருவுமாகிய ஜே. பெனடிக்ற் தேவராஜா அவர்களையும் நன்றியோடு நினைக்கின்றேன். செபமாலை அன்னையின் ஆசீர்வாதமும், அருளும் உங்கள் அனைவருடனும் இருக்க வேண்டுகின்றேன். 'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு' என்பதை உயர்ந்து நிற்கின்ற இவ்வாலயம் எமக்கு எடுத்துச் சொல்கின்றது. இரணைதீவிலிருந்து இடம் பெயர்ந்து இன்று இதர இடங்களிலும் பரந்துபட்டு வாழுகின்ற அனைத்து மாந்தர்களையும் உங்கள் ஊரின் பாதுகாவலி என்றும் ஆசீர்வதிப்பாராக. இறையரசின் விழுமியங்களை வாழ்ந்து திருக்குடும்பத்தின் புண்ணியங்களை நாலா திசைகளிலும் தூவி கிறிஸ்தவ வாழ்வை வாழவும், கல்வியறிவிலும், தொழில் முயற்சிகளிலும், உடல் உள தேவைகளிலும் புனித செபமாலை அன்னை பரிந்து பேசுவாளாக.

முறையோடு செபமாலை தினம் ஓதுங்கள்
குறையாத நலன் யாவும் பெறலாமென்றீர்
கரையேறும் வழிதன்னை எளிதாய்ச் சொன்ன மரியாளே
உமதன்பின் பெருமை சொல்ல ஒரு நாவு போதாதம்மா

**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
திருக்குடும் மாகாண தலைவி,
யாழ் மறைமாவட்டம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி



ஒரு மனிதனுடைய வாழ்வில் ஆன்மீகம் என்பது பெரும் பங்காற்றுகின்றது. ஆன்மிகம் நன்றாக இருந்தால்தான் முழுமனித வாழ்வும் ஆரோக்கியமாகவும் மகிழ்வாகவும் அமையும்.

இறைவன் எம்மைத் தம் சாயலாகவும் பாவனையாகவும் படைத்தார். எனவே நாம் இறைவனை தேடுவதும், நாடுவதும், இயல்பானதே. அந்த வகையில் ஆலயங்கள் நாம் இறைவனோடு ஒன்றிக்கவும், அந்த ஒன்றிப்பின் மூலம் அன்பையும், ஒருமைப் பாட்டையும், சகோதரத்துவத்தையும் வளர்க்க தூண்டுகோலாக இருக்கின்றன.

ஆன்மிக, சமூக இறை விசுவாசத்தில் இரணைமாதா நகர் மக்களை ஒன்றிணைக்கும் ஆலயமாக செபமாலை அன்னை ஆலயம் விளங்குகின்றது.

1992ம் ஆண்டு இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் புதிதாக வாழ்வை கட்டியெழுப்பிய மக்களுக்கு அவர்கள் வழிபடுவதற்கு ஆலயம் ஒன்று தேவை என்பதை கருத்தில் கொண்டு 2003ம்ஆண்டு முன்னாள் பங்குதந்தையாக இருந்த அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் தற்போதைய ஓய்வுநிலை ஆயர் அதிவணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு ஆரம்பிக்கப்பட்டது.

இரணைமாதா நகர் கத்தோலிக்க மக்களின் ஆரம்பகால வாழ்வை இப்பகுதியில் தொடங்கிய போது நோய்நொடிகள், வேலையில்லா பிரச்சனைகள், பொருளாதார நெருக்கடிகள் போன்ற பல சவால்களை வெற்றிகொள்ள அவர்களின் விசுவாச வாழ்வும் சிறப்பாக செபமாலை அன்னையினுடைய பரிந்துரையும் பெரும் உதவியாக அமைந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

இப்பங்கிலே பணியாற்றிய பங்குதந்தையர்களின் அயராத முயற்சியினாலும், பங்கு மக்களின் சொந்த உழைப்பினாலும், கடின பணியாலும் இவ்வாலயம் வானுயர எழுந்து பிரமாண்டமாக காட்சி அளிக்கின்றமை இம்மக்களின் விசுவாச எழுச்சியை எடுத்துக் காட்டுகின்றது.

எனவே இவ்வாலயத்தினைச் சேர்ந்த அனைத்து கத்தோலிக்க மக்களுக்கும் இதயம் நிறைந்த நன்றிகளையும் ஆசிகளையும் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இரணைமாதா நகர் புனித செபமாலை அன்னை ஆலயம் புதிதாக திறக்கப்படுவதையிட்டு கிளிநொச்சி மறைக்கோட்ட முதல்வர் என்ற ரீதியில் மட்டற்ற மகிழ்ச்சியடையும் அதேவேளை இந்த பாரிய முயற்சியில் ஈடுபட்டு உழைத்த அனைவருக்கும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**அருட்பணி. R.H. சகாயநாயகம் அடிகளார்**
மறைக்கோட்ட முதல்வர்,
கிளிநொச்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி



"ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப் படுகிறது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது."

வரலாற்றுச் சிறப்புமிக்க இரணைதீவு மக்கள், இன்று தாம் வாழும் இரணைமாதா நகரில் புதிய ஆலயம் அமைத்து தூய செபமாலை அன்னைக்கு மகிமை சேர்த்து மகிழும் வேளையில் பங்குத்தந்தையாகிய நானும் மகிழ்ந்து புனித மரியாவின் வார்த்தையில் ஆண்டவரைப் போற்றிப் புகழ்கின்றேன்.

நம்முடைய வாழ்வின் மையமாக ஆலயம் அமைந்திருப்பதை உணரலாம். ஆலயம் என்று குறிப்பிடுகின்றபோது முதல் அது மரத்தாலும், மண்ணாலும் கட்டப்பட்டிருக்கும் கட்டடத்தை குறித்து நிற்கின்றது. இது எம்முடைய விசுவாசத்தின் வெளி அடையாளமாகவும் திகழ்கின்றது. இது நம்முடைய கிறிஸ்தவ சமூக ஒருமைப்பாட்டின் வளர்ச்சிக்கும், விசுவாச முதிர்ச்சிக்கும் அவசியமானது என்று கூட கூறலாம்.

மேலும் நாங்கள் ஒவ்வொருவரும் திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக் கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய், ஆலயமாய் திகழ்கின்றோம் என்பதை விவிலியம் கோடிட்டுக் காட்டுகிறது. (எபே *2:20*) ஆகவே கல்லாலான புதிய ஆலயத்தை அமைத்து விசுவாசத்தை வெளிப்படுத்துவது போல, உயிருள்ள ஆலயங்களாக திகழ்கின்ற நாம் நம்முடைய நம்பிக்கை வாழ்வை வளர்த்து தூய ஆவியில் புதுப்பிக்கப்பட்டு ஒன்றுபட்ட இறைமக்கள் குழுமமாக தொடர்ந்து வளர்வோம், வாழ்வோம்.

இத்தருணத்தில் இவ்வாலயம் கட்டியெழுப்ப கனவுகண்டு உழைத்த முன்னைநாள் பங்குத்தந்தையர்கள், கட்டடப்பணி குழு உறுப்பினர்கள், கட்டட கலைஞர்கள், உபகாரிகள், பங்குமக்கள், ஆலய அருட்பணிச் சபையினர், அனுமதி தந்து அடிக்கல் நாட்டிய முன்னைய நாள் ஆயர் பேரருள் தந்தை தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, இன்று புதிய ஆலயத்தை திறந்து ஆசீர்வதித்த எம் ஆயர் பேரருள் தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை ஆகிய அனைவரையும் நன்றியுடன் நினைக்கின்றேன்.

அதேவேளை இச்சிறப்பு மலர் வெளிவர உழைத்த மலர்க் குழுவினரையும், ஆசிச்செய்தி, வாழ்த்துச் செய்தி தந்த அனைவருக்கும் எம் வாழ்த்துக்களையும் ஆசிகளையும் கூறுகிறேன். இவ்வாலயம் புதுப்பொலிவுடன் திகழும் இச்சந்தர்ப்பத்தில் மரியன்னையின் பிள்ளைகளாகிய நீங்கள் தொடர்ந்து அன்புச் சமூகமாய் பயணிக்க தூய செபமாலை மாதா என்றும் துணைதந்து காத்திடுவாராக.

**அருட்பணி. எமில் ராஜேஸ்வரன் போல்**

பங்குத்தந்தை, முழங்காவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



வன்னி மண்ணின் புகழ்பூத்த கிளி. மாநகரின் பூநகரி பிரதேச செயலகர் பிரிவு பலநூறு ஆண்டுகள் வரலாறு கொண்ட தமிழ் மணக்கும் பிரதேசமாகும். இப்பிரதேசத்தில் எழுப்பப்பட்டுள்ள பல ஆலயங்கள் தொன்மையான, பிரசித்திபெற்றவையாகும். அவ்வாறே இரணைமாதாநகர் எனும் பதியினில் கோவில்கொண்டு எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்வழங்கும் தூய செபமாலை அன்னையின் ஆலயமானது 1992 இடப்பெயர்வின் பின் உருவாக்கப்பட்டதாயினும் கத்தோலிக்க கிராமமாக உருவாக்கப்பட்ட இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்து இக்குடியிருப்பில் வாழும் மக்களின் விசுவாசம் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் காலத்திலிருந்து கட்டியெழுப்பப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

மேலைநாடுகளிலிருந்து வருகைதந்த கத்தோலிக்க குருக்களாலும், அமலமரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த குருக்கள், சுதேச குருக்கள் மற்றும் திருக்குடும்ப கன்னியர்சபை அருட்சகோதரிகளின் பணிகளாலும் ஆன்மிகம் அடித்தளமிடப்பட்டது. இம்மக்களின் கல்வி வளர்ச்சியானது திண்ணைப் பாடசாலை முறையிலிருந்து மிஷனரிப் பாடசாலையாக வளர்ந்து அரச பாடசாலைக் கல்வி முறையில் பரிணாமம் பெற்றுள்ளது.

2003 ஆம் ஆண்டில் அடித்தளமிடப்பட்டு, இடப் பெயர்வுகள் இழப்புக்களைக் கடந்து பத்தொன்பது ஆண்டுகள் அரும் முயற்சியில் இன்று திறப்புவிழாக்காணும் இவ் ஆலயத்தை நிர்மாணிப்பதில் உழைத்த ஆயர்கள், குருக்கள், பங்குமக்கள் அனைவரினதும் காத்திரமான பணிகளும் பாராட்டத்தக்கவை. கிறிஸ்தவ மத அலுவல்கள் திணைக்களத்தின் நிதிப் பங்களிப்பும் சிறுதுளியாக இவ் ஆலய நிர்மாணிப்பில் கலந்துள்ளமை மாவட்டச் செயலகமாக எமக்கும் பெருமையளிக்கும் விடயமாகும்.

ஆலயமில்லா ஊரில் குடியிருத்தலாகாது என்ற முதியோர் வாக்கிற்கிணங்க அழகுற அமைக்கப்பட்டுள்ள இவ்வாலயம் அதன் ஆன்மிகப் பணிகளை நிறைவுசெய்வதாக அமையும். அதற்காக உழைத்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் இறையாசி கிடைக்கவும், ஆலயத்தை அண்டி வாழும் மக்களின் வாழ்வு, தொழில் துறைகள், கல்வி நிலைகள் உயர்வடையவும் உளமார வாழ்த்துகின்றேன்.

**திருமதி றூபவதி கேதீஸ்வரன்**
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்
மாவட்ட செயலகம்
கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



நீர் வளமும் நிலவளமும் கொண்டமைந்துள்ள பூநகரி பிரதேசத்தில் இரணைதீவு, ஒரு தொன்மையான பாரம்பரியங்களைக் கொண்டுள்ள அழகிய தீவாகும். கத்தோலிக்கரான இத்தீவு மக்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக 1992 காலப்பகுதியில் இங்கிருந்து இடம்பெயர்ந்து தற்போது வசித்துவரும் இரணைமாதா நகர் கிராமத்தில் குடியேறினர்.

ஆரம்ப காலத்தில் பொருளாதார ரீதியாக பின்னிலையில் காணப்பட்ட இக்கிராம மக்கள் தற்போது தங்கள் கடல் வளத்தைப் பயன்படுத்தி குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதாரத்தில் வளர்ச்சி கண்டுள்ளார்கள்.

தொன்றுதொட்டே சமயப் பாரம்பரியங்களை சரிவரக் கடைப்பிடித்து வந்தவர்கள் தங்கள் குலதெய்வமான தூய செபமாலை அன்னைக்கு ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் தற்போது வெற்றி கண்டுள்ளார்கள். அன்னையின் ஆலயத் திறப்புவிழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்வடைகிறேன்.

அன்னையின் ஆலயக் கட்டுமானப் பணிகளை சிறப்பாக நிறைவேற்ற அரும்பாடுபட்ட இக்கிராம மக்களுக்கு எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், இக்கிராம மக்களின் பண்டைய வரலாறு, கலாசாரப் பண்பாடுகள் மற்றும் சமூக விழுமியங்கள் என்பவற்றை எடுத்துக்கூறும் இச்சிறப்பு மலர் வெளிவருவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மலர்க்குழுவினருக்கும் எனது நன்றிகளும் பாராட்டுக்களும் உரித்தாகட்டும்.

**திரு. த. அகிலன்**
பிரதேச செயலர்,
பிரதேச செயலகம்,
பூநகரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



இரணைமாதாநகர் புனித செபமாலைமாதா புதிய ஆலயத் திறப்பு விழாவினை முன்னிட்டு அதன் ஓர் அங்கமாக அக்கிராம மக்களால் வெளியீடு செய்யப்படுகின்ற சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மேற்குப் பகுதியில் பூநகரிப் பிரதேச செயலகத்திற்குட்பட்டதும், மிகவும் தொன்மையானதும், இறை விசுவாசத் திலும், ஒழுக்க விழுமியங்களிலும் உயர்ந்து காணப்படுகின்றதுமான ஒரு பிரதேசமே இரணைமாதா நகர் கிராமம் ஆகும்.

இக்கிராமத்தில் 80 அடி உயரமான கலங்கரை விளக்கம் மற்றும் பழமையும், எழிலும் கொண்டமைந்த இரண்டு மணிக்கோபுரங்கள், மற்றும் சுண்ணாம்பும் சீமெந்தும் கொண்டு கட்டப்பட்ட மிகப்பெரிய ஆலயம் ஒன்றும் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

இங்கு ஆரம்பத்தில் திண்ணைப் பாடசாலையாகவும் பின்னர் மிசனரிப் பாடசாலையாகவும் காணப்பட்ட கல்விச் செயற்பாடுகள் தற்போது அரச பாடசாலையாக மாற்றம்பெற்று அங்குள்ள கல்வி, கலை, ஆக்கம், விளையாட்டு என மாணவர்களை கல்விச் செயற்பாடுகளில் மிளிர வைத்துள்ளது.

இவ்வாறான கிராமத்தில் மக்களிடையே ஆன்மிக செயற்பாட்டினை விரிவுபடுத்தும் நோக்கில் கிராம மக்களின் பங்களிப்புடன் நிர்மானிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளமை அக்கிராம மக்களுக்கு இறையருளால் கிடைத்த பாக்கியமாகவே நான் பார்க்கின்றேன்.

மேலும் இவ் ஆலய நிர்மானப் பணிக்காகவும், திறப்பு விழா நிகழ்விற்காகவும் உழைத்த இரணைமாதா நகர் ஆலயத் திருச்சபையினர் மற்றும் அக்கிராம மக்களுக்கும், இத்திறப்பு விழாவில் அதன் ஓர் அங்கமாக வெளியீடு செய்யப்படுகின்ற சிறப்பு மலர் வெளியீட்டிற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மலர்வெளியீட்டுக் குழுவினருக்கும் இந்த நேரத்தில் எனது மனப்பூர்வமான நன்றிகளையும், வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. கி. கமலராஜன்**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி தெற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டக் கல்வி அதிகாரியின் வாழ்த்துச் செய்தி



தொன்மையும், வரலாற்றுப்பெருமையும் கொண்ட கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேசத்தின் தென்மேற்கு பகுதியில் அமைந் துள்ள இரு தீவுகளைக்கொண்ட இரணை தீவில் பல்லாண்டுகளாக அருள்பாலிக்கும் புனித செபமாலை மாதா 1992ம் ஆண்டு நாட்டின் அசாதாரண நிலைமை காரணமாக தன் மக்களோடு நகர்ந்து, முழங்காவில் பிரதேசத்தின் இரணைமாதா நகரில் பள்ளி கொண்டுள்ள அன்னையின் ஆலய திறப்பு விழா சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை அன்னையின் அருளே என எண்ணி பெருமை கொள்கிறேன்.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற சான்றோரின் வாக்கிற்கிணங்க கோவில்கள், தேவாலாயங்கள், மசூதிகள் என அனைவரையும் அணைத்துச் செல்லும் முழங்காவில் பிரதேசத்தில் வானுயர்ந்து நிற்கும் அன்னையின் அருளாட்சி குறைவின்றி யாவருக்கும் கிடைக்க செபமாலை மாதாவை வேண்டுவதுடன். இவ் ஆலயத்தை அமைக்க கடினமாக உழைத்த அப்பிரதேச வாழ் மக்களையும், அருட்பணியாளர்களையும் வாழ்த்துவதோடு, இவ் ஆலயம் மேலும் அபிவிருத்தி அடைய இறைவனை வேண்டுகிறேன்.

"எல்லாம் வல்ல இறைவன் உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக"

**திரு. நா. கணேஸ்வரநாதன்**
கோட்டக்கல்விஅலுவலர்
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Congratulations from the Presentation Brothers



The Presentation Brothers sends warmest congratulations to the Parishioners and people of Iranamathanagar. It is a wonderful achievement that you have completed your parish church with great determination and belief as a community. This is great testimony and witness of your faith in God and your communion as a people.

May your church be at the heart of the people of Iranamathanagar, where God love, and blessings flows. May it be a symbol of your faith in God and a place of worship for generations to come.

You should be proud that one of your son of Iranamathanagar, Brother Sahayampillai, Anthony, is a Presentation Brother. Thank you for sharing him with us. I thank you all for your welcome and love shown to the Presentation Brothers over the years. Thanks to the people of Iranamathanagar for your generous donation of the land that we hope to develop for the people and especially young people of your community.

I congratulate you again and wish you every blessing as you bless and open your new church. May God bless you all.

**Brother Barry Noel**
Presentation Brothers.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



யாழ் மறைமாவட்டத்தின் கிளிநொச்சி மறைக் கோட்டத்தின் முழங்காவில் பங்கில் இரணைமாதா நகரில் கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் புனித செபமாலை அன்னை ஆலயம், இறைவனின் மாபெரும் ஆசீர்வாதத்திலும் பங்குச் சமூகத்தின் அயராத உழைப்பிலும் கம்பீரமாகப் புதுப்பொலிவுடன் காட்சிதரும் இவ் ஆலயத்தின் உருவாக்கம்! கால தேவனின் பல தடைகளையும், சவால்களையும் தாண்டி இன்று கம்பீரமாக செபமாலை அன்னையின் பேரிரக்கத்தை எமக்குத் துல்லியமாகப் படம் போட்டுக் காட்டுகின்றது.

யாழ் மறைமாவட்டத்தில் கத்தோலிக்க மக்களை மட்டுமே கொண்ட இவ்வாலயத் திரு அவையில், 2000 - 2005 வரையான காலப்பகுதியில் பங்குத்தந்தையாகப் பணியாற்ற இறைவன் திருவுளம் கொண்டார். இக்காலப் பகுதியில் ஓய்வுநிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களால் இவ் ஆலயம் அடிக்கல் நாட்டப்பட்டது. போரும் இயற்கை அனர்த்தமும், இடப்பெயர்வும் ஆலயம் கட்டிமுடிக்க முட்டுக்கட்டையாக இருந்த போதிலும், இறைநம்பிக்கை வாழ்விலும், சாட்சிய வாழ்விலும் நீங்காத இடம் பிடித்திருப்பதும் மறுக்க முடியாத உண்மை.

எளிமையான வாழ்க்கை முறையும், ஆலயத்தை மையமாகக் கொண்ட செயற்பாடுகளும் ஒன்றிணைந்த ஆதிக்கிறிஸ்தவ வாழ்க்கை முறையாலும், ஒருவரை ஒருவர் மன்னித்து வாழும் சகோதர உறவு வாழ்வால் இவர்கள் கோபுர தீபங்களாக சுடர் விடுகின்றார்கள். திரு அவையின் பணியாளர்கள் மேல் அன்பும் மதிப்பும் கொண்ட இவர்களின் பங்கில் இருந்து குருக்கள் துறவிகள் பலர் இன்று திரு அவைத் தோட்டத்தை அலங்கரிக்கிறார்கள்.

மேலும் தம் பங்கின் பாதுகாவலியாம் புனித செபமாலை அன்னைக்கு ஆலயத்தைக் கட்டி முடித்துள்ளார்கள் என அறிந்து நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். பல்வேறு பணிகளின் நிமித்தம் இப்பங்குத் திரு அவையை சந்திக்கவும், இறைமக்களோடு உறவை ஆழப்படுத்தவும், இன்றுவரை பல சந்தர்ப்பங்கள் கிடைத்துள்ளன. இவ் ஆலயம் பூர்த்தி ஆவதற்கு உழைத்த தற்போதைய பங்குத் தந்தையையும் பாராட்டி நிற்கின்றேன். இப்பங்கின் அருட்பணி சபையோடு கைகோர்த்து பணியாற்றும் அனைத்து, பக்தி சபைகளின் உடன் உழைப்பாளர்களையும் மனம் நெகிழ்ந்து பாராட்டுகின்றேன். இறைவன் இவர்களுக்கு கொடுத்த நம்பிக்கை எனும் தீபத்தை குன்றில் ஏற்றி அனைவருக்கும் ஒளி கொடுக்க இறை அரசைப் பரப்பும் பணியில் விடாமுயற்சியோடு பயணிக்க இறையாசீர் வேண்டி நிற்கின்றேன்.

**அருட்பணி. X. W. ஜேம்ஸ்**
இயக்குனர், மறைக்கல்வி - இளையோர் ஆணைக்குழு
மறைக்கல்வி நிலையம், யாழ் மறைமாவட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி



இரணைமாதா நகர் கிராமம், 1992 ஆம் ஆண்டு இரணைதீவு வாழ் மக்கள் குடிபெயர்ந்து வந்து முழங்காவில் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டது. இரணைதீவு மக்களின் நம்பிக்கை வாழ்வு மெச்சத்தக்கது, வியப்புமிக்கது, ஆழமானது. இங்கு வாழும் மக்களின் இதயம் புனித செபமாலை அன்னை ஆலயம் என்றால் மிகையாகாது.

இவர்களின் பங்குத்தந்தையாக ஆறு வருடங்கள் பணியாற்ற எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. பல சிரமங்கள் மத்தியிலும் வறுமையின் பிடியிலும் வாழ்ந்த இம்மக்களின் உள்ளத்தில் தமது ஆலயம் கட்டிமுடிக்கப்பட வேண்டும் என்பது ஒரு தணியாத தாகமாக இருந்ததை நான் நன்கு உணர்வேன். இம்மக்கள் தமது வாழ்வுக்கென ஓர் பிரமாண்டமான, அழகான ஆலயத்தை நிறைவு செய்து மகிழ்ந்து நிற்கின்றனர். அவர்களைப் பாராட்டிவாழ்த்தி நானும் மகிழ்ந்து நிற்கின்றேன். இம் மக்களின் ஆன்மீக, பொருளாதார, சமூக வாழ்வு சிறக்க எனது செபங்களையும் தெரிவித்து நிற்கின்றேன். புனித செபமாலை அன்னை உங்கள் எல்லோருக்காகவும் பரிந்து பேசுவாளாக.

**அருட்பணி. சாள்ஸ் ஜஸ்ரீன்**
பங்குத்தந்தை,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி



இரணைமாதா நகர் கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித செபமாலை அன்னை ஆலயம் ஆசீர்வதிக்கப்பட்டு திறக்கப்படவுள்ளதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்து வந்து முழங்காவில் பகுதியில் புதிதாக இரணைமாதா நகர் எனும் கிராமத்தை உருவாக்கி. அக்கிராமத்தின் பாதுகாவலியாக புனித செபமாலை அன்னையையே கொண்டு வாழ்ந்து கட்டப்பட்டிருந்த மண் ஆலயத்தை நிரந்தரமான ஆலயமாக்க வேண்டும் என்கின்ற உங்கள் கனவு இறைவன் அருளால் நிறைவு கண்டுள்ளதையிட்டு இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

எம் இனம் சந்தித்த பாரிய இடப்பெயர்வும், இனவழிப்பிற்கும் முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலய வேலைகள் பல தடைகளைச் சந்தித்தபோதும் மீண்டும் ஊர்களிற்கு செல்வோமா என்கின்ற ஆதங்கத்துடன் வவுனியா நலன்புரி நிலையங்களில் பல துன்பங்களை சந்தித்து வாழ்ந்த உங்களை மீண்டும் செபமாலைத்தாயின் பரிந்துரை மூலமாக சொந்த கிராமம் வந்து குடியேறிய போது நீங்கள் வாழ்ந்த இல்லங்கள் சேதமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் கிராமம் சுடுகாடாகிக் கிடந்தபோதும் பழைய ஆலயமும் புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருந்த ஆலயமும் அப்படியே இருந்ததை அறிந்து உடனடியாக பழைய ஆலயத்தைத் திருத்தி வழிபாடுகளை மேற்கொள்ள நீங்கள் துன்பத்திலும் இழப்பிலும் காட்டிய அக்கறை உங்கள் விசுவாசத்தின் வெளிப்பாடாக இருந்ததை நான் நன்கு அறிவேன்.

பல கசப்பு அனுபவங்களை போரின் தாக்கம் தந்த போதும் உங்கள் பங்குத்தந்தையர்களோடு இணைந்து ஆலயத்தை கட்டி முடித்த இறைமக்களாகிய உங்களை பாராட்டி வாழ்த்துகின்றேன். ஆலயம் என்பது இறைமக்களும் இறைவனும் சந்திக்கும் இறைமனித சந்திப்பின் கூடலும், இங்கேதான் உயிருள்ள ஆண்டவர் நற்கருணையில் எமக்காக காத்திருக்கும் இடமுமாகும். எனவே அவ்வாலயத்தில் எந்தவித நான், நீ என்கிற வேறுபாடுகளற்ற ஒரு தாயின் பிள்ளைகள் என்னும் மனநிலையோடு ஆதிக்கிறிஸ்தவ வாழ்வும் கூட்டொருங்கியக்கத் திரு அவையின் பிள்ளைகள் என்பதையும் இப்புதிய ஆலயத்தின் எல்லா செயற்பாடுகளிலும் ஒன்றிணைந்து செயற்பட செபமாலை அன்னையிடம் உங்களை ஒப்படைத்து இறைவனின் நிறைவான ஆசீர்வாதங்களால் இரணைமாதா நகர் மக்களாகிய நீங்களும் அன்னையிடம் வரும் அனைத்து பக்தர்களும் அமைதியிலும், இறைவிசுவாத்திலும் நிலைத்து வாழ வாழ்த்துகின்றேன்.

**அருட்பணி. எ. செ.வி. மரியதாஸ்**

பங்குத்தந்தை, மாங்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பங்குத் தந்தையின் ஆசிச்செய்தி



யாழ் அடைக்கல அன்னை ஆலயத்திலிருந்து இரணைமாதா நகரின் செபமாலை அன்னையின் மக்களுக்கு ஆசீர் கூறுகின்றேன்.

பல தலைமுறையின் நீண்ட நாள் கனவும் உழைப்பும் அன்னைக்கு ஓர் அழகான ஆலயம் அமைக்கும் பணி பூரணமடைந்துள்ளது. மகிழ்ச்சி, வாழ்த்துக்கள்.

அன்னையின் பிள்ளைகள், ஆண்டவரின் விசுவாசத்தில் வளர செபித்து, உழைக்க வேண்டுகின்றேன்.

நன்றி

கிறிஸ்துவில்
**அருட்பணி. சி.ம.ப. ஆனந்தகுமார்**
புனித அடைக்கல அன்னை ஆலயம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



காற்றோடும் கடலோடும் போராடி, கடின உழைப்பிற்குத் தம்மைப் பழக்கி, ஆரவாரமற்ற எளிமை வாழ்வுடன், இறை நம்பிக்கையில் கூர்மையடைந்த 'இரணைதீவு மக்கள்' கால நிர்ப்பந்தத்தால் புலம்பெயர்ந்து இங்கு வந்து குடியேறியது வரலாறு.

ஐரோப்பிய குருக்களின் பயிற்சியும் - மறைமாவட்ட குருக்கள், திருக்குடும்ப கன்னியரின் அர்ப்பணிப்பான பங்களிப்பு - வழிகாட்டல்களும், மக்களின் தன்னம்பிக்கை முயற்சிகளும் இறைவனின் அளப்பரிய கிருபையும் 'இரணைதாமாதா நகர்' மக்களைச் செதுக்கியது எனலாம்.

செபமாலை அன்னை ஆலயத்திற்கெனப் பரந்த இடத்தைத் தூர நோக்கில் ஒதுக்கியதும் பலத்த பொருளாதாரப் பின்புலமற்ற நிலையிலும் பிரமாண்டமான அழகிய ஆலயத்தைச் சிறுகச்சிறுக சேமித்துக் கட்டி முடித்ததும் இவர்களின் ஆழ்ந்த இறை நம்பிக்கையைக் காட்டுகிறது.

கல்லால் கட்டப்பட்ட இவ்வாலயம் போன்று இங்குள்ள ஒவ்வொரு குடும்பமும் உயிருள்ள ஆலயங்களாக இறை - பிறரன்பில் ஆழப்பட ஆசித்து நிற்கின்றேன்.

வசீகரிக்கும் இவ்வாலயம் போன்றே உங்கள் வாழ்வும் மிளிரட்டும்

**அருட்பணி. சீ. அ. அருட்செல்வன்**
பங்குத்தந்தை,
உடுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



மகிழ்ச்சி பொங்கும் இரணைமாதா நகர் புனித செபமாலை அன்னை ஆலய திறப்பு விழா நன்நாளில் உங்களை இறையருளால் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இவ்வாசியுரையை எழுதும் பொழுது எனது மனம் மகிழ்ச்சி அடைகின்றது. அதே வேளையில் எனது எண்ணங்கள் எல்லாம் உங்கள் மண்ணில், கடலில், இரணைதீவில் இடம் பெற்ற நினைவுகளையெல்லாம் மீட்டிப் பார்க்கின்றது. அவை ஒரு பசுமையான அனுபவம், சந்தோசமான காலம், வீர செயல்களை, பெரும் வேலைத் திட்டங்களை செய்வதற்கு இறைவன் தந்த அருமையான வல்லமைக்காக நன்றி சொல்லுகின்றேன்.

உங்கள் விசுவாசவாழ்வு, ஒரு வரலாறு. துன்பங்கள் பல நிறைந்திருந்த போதிலும், தாழ்மையோடும், ஆழமான விசுவாசத்தோடும் நம்பிக்கையோடும் குருக்கள், துறவிகளை மதிப்பதில் உங்கள் மனநிலையை இட்டு பெருமையோடு வாழ்த்துகின்றேன். உங்கள் ஆலயமும், கடலும் (க.தொ.ச) உங்கள் வாழ்வின் இரு கண்கள். இரணைதீவு அனுபவம் இரட்டிப்பான மகிழ்ச்சி. உங்களை வளர்த்த மூத்த குருக்களை நன்றியோடு நினைக்கின்றேன். ஆன்மீக காரியங்கள் மட்டுமல்லாது கல்வி, கலை, விளையாட்டுத்துறை என்பவற்றில் ஆர்வத்துடன் ஈடுபடுவது உங்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்துள்ளது. இவற்றினூடாக உங்கள் மண்ணுக்கு நீங்கள் பெருமை சேர்ப்பதில் நான் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பங்கில் பணியாற்ற கிடைத்த சந்தர்ப்பத்தை இறைவனின் கொடையாக எண்ணி நன்றி சொல்லுகின்றேன். ஆலய கட்டுமானப் பணியை அதிவேகமாக்க முற்பட்ட வேளையில் இடையில் மாற்றலாகி சென்றது கவலையாகத்தான் இருந்தது. ஆனாலும் தவிர்க்க முடியாதது. ஆண்டவரின் திட்டம் எதுவோ அதுதான் நடக்கும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு உண்டு. இப்பங்கு திரு அவை மென்மேலும் சிறந்து செபமாலை அன்னையின் பரிந்துரையால் உங்கள் வாழ்வும் விசுவாச வாழ்வும் வளம் பெற இந்நன்நாளில் ஆசித்து நிற்கின்றேன்.

**அருட்பணி. ம.பத்திநாதர்**
பரிபாலகர்/பங்குத்தந்தை,
புனித பற்றிமா அன்னை யாத்திரைஸ்தலம்,
பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயர் பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



இரணைமாதா நகரில் எழுந்தருளியிருக்கின்ற புனித செபமாலை மாதா ஆலய கட்டுமானப்பணி நிறைவு பெற்று திறப்பு விழா மலருக்கு ஆசீர் கூறுவதில் நான் பெருமகிழ்வு கொள்கின்றேன். இரணைதீவு மிகவும் பழமையான தொன்மை வாய்ந்த பாரம்பரியங்களுடன் கூடிய முழுமையான கத்தோலிக்க கிராமமாகும்.

இக்கிராமத்தின் வரலாறு முழுமையாக கத்தோலிக்க வெள்ளைக்கார குருக்களாலும், மறைமாவட்ட குருக்களாலும், அமலமரித் தியாகிகளாலும், திருக்குடும்ப கன்னியர்சபை அருட்சகோதரிகளாலும் இறை விசுவாசத்திலும், ஒழுக்கத்திலும், கல்வியிலும், கிறிஸ்தவ விழுமியங்களிலும் வளர்க்கப்பட்ட ஒரு கிராமமாகும்.

இரணைதீவு மூன்று சிற்றாலயங்களைக் கொண்ட பங்காகும். இங்கு ஒல்லாந்தர் காலத்திற்குட்பட்ட 80 அடி உயரமான கலங்கரை விளக்கம் ஒன்று உள்ளது. மற்றும் ஆங்கிலேயர் கால நிலக்கீழ் மழை நீர் சேகரிப்பு தடாகம் ஒன்று ஆலய நிலக்கீழ் தரையில் அமைந்துள்ளது.

இவ்வாறு இயற்கை வளங்களும் அழகும் கொண்ட இக்கிராமத்தின் அழகை மேம்படுத்தும் முகமாக அழகாக வடிவமைக்கப்பட்டுள்ள புனித செபமாலை அன்னை ஆலயம் இறைவேண்டலுக்கு மட்டுமல்ல மாறாக மன அமைதியையும், மகிழச்சியையும் நிறைவாக கொடுக்கும் அளவிற்கு அழகுற வடிவமைக்கப்பட்டுள்ளது பாராட்டத்தக்கது. இவ்வாலயம் 2003ம் ஆண்டு முன்னாள் பங்குத் தந்தை அருட்திரு ஜேம்ஸ் அடிகளார் தலைமையில் தற்போதைய ஓய்வு நிலை ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டது.

பல சிரமங்களுக்கு மத்தியிலும் பங்கு மக்களின் ஒத்துழைப்பும், கடும் உழைப்பும், பங்குத்தந்தையின் முழு முயற்சியும் இவ் ஆலயம் இவ் ஊரின் மத்தியில் உயர்ந்து எழுந்து நிற்கின்றது.

இவ் ஆலயம் புதுப்பொலிவுடன் மக்கள் அனைவரும் ஒன்றித்து வழிபடவும் விசுவாசத்தில் ஆழப்படவும் வித்திட்ட ஒவ்வொருவரையும் இதயபூர்வமாக வாழ்த்தி ஆசீத்து நிற்கின்றேன். ஆலய முற்றத்தில் இறைவனின் அருகில் நாம் உறைந்திடுவோம். இறைவனின் திட்டத்தை அறிந்திடுவோம். புனித செபமாலை அன்னையின் ஆசீரும் அருளும், பாதுகாப்பும் நிறைவாகப் பெற்றிட ஆசித்து செபித்து நிற்கின்றேன்.

**அருட்பணி. அன்ரனிதாஸ் லியான்ஸ்**

புனித அன்னம்மாள் ஆலயம், வலைப்பாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயற் பங்குத்தந்தையின் ஆசிச்செய்தி



இறைவன் வாழுகின்ற இல்லம் ஆலயம் எனப்படுகின்றது.

இரணைமாதா நகரிலே பிரமாண்டமானதும் மிகவும் அழகிய முறையிலே காட்சியளிக்கின்ற புனித செபமாலை மாதா ஆலயத்தினுடைய திறப்பு விழாவை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். என்னுடைய குருமட வாழ்வின் இடைக்காலப் பயிற்சியின்போது இந்த இடத்திலே 2014ம் ஆண்டு 6 மாதங்கள் பணிசெய்ய இறைவன் அருள் கூர்ந்ததை நினைத்து நன்றி கூறுகின்றேன். புனித செபமாலை அன்னையினுடைய பரிந்துரையும் பாதுகாப்பும் இந்த மக்களுக்கு தொடர்ந்த வண்ணம் இருப்பதை நான் என்னுடைய வாழ்க்கையில் பார்த்திருக்கின்றேன்.

2014ம் ஆண்டு என்னுடைய இடைக்காலப் பயிற்சியிலே இருந்தபோது இந்த மக்களுடைய ஆழமான விசுவாசம், கடின உழைப்பு, ஆலயத்திற்காக எதையும் செய்யக்கூடிய மனம் இன்னும் குருக்களிலே இவர்களுக்கு இருக்கின்ற தனித்துவமான அன்பு இவற்றைப் பார்க்கின்ற போது இந்த ஆலயம் இவர்களுக்கு எவ்வளவு ஒரு ஆசீர்வாதமுள்ள இடமாக அமைந்திருக்கின்றது என்பதை என்னால் உணரக் கூடியதாக இருக்கின்றது. எனவே இப்படிப்பட்ட கிறிஸ்தவத்திலே ஆழ வேரூன்றிய இந்தக் குடும்பங்கள் செபமாலை அன்னையினுடைய ஆசீர்பெற்ற குடும்பங்களாகவும் குறிப்பாக இவர்களின் தொழில் துறைகளிலே பிள்ளைகளினுடைய கல்வி, ஆன்மீக வாழ்விலே, இவர்களின் எதிர்கால வாழ்விலே அன்னையினுடைய பரிந்து பேசுதல் நிறைவாக இருக்க வேண்டுமென ஆசித்து நிற்கிறேன்.


அத்தோடு இந்தப் பெரிய பிரமாண்டமான ஆலயம் கட்டுவதற்கு உதவிசெய்த அனைவருக்கும் குறிப்பாக பங்கு மக்கள், பல நல்ல உள்ளங்கள், பங்குத்தந்தையர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்து நிற்பதோடு, இந்த இடத்திலே எனக்கு இந்த சந்தர்ப்பத்தைத் தந்த நிர்வாகத்தினருக்கும் நன்றியைக் கூறுகின்றேன். புனித செபமாலை அன்னையின் ஆசீர்வாதம் என்றும் உங்களோடு இருப்பதாக.

**அருட்பணி. சூ. அஜித் சுலக்ஷன்**
பங்குத்தந்தை
புனித அடைக்கல அன்னை ஆலயம்
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகனின் ஆசிச்செய்தி



பாண்டிய மேட்டில் சிம்மாசனமாய் வீற்றிருக்கும் குருகுல அன்னையே! மீனவர் மகுடமே! கடற்தாரகையே! கடலர் வழிகாட்டியே! குருகுல தாயே! இரணை மாதாவே! இரக்கத்தின் தாயே! எங்களின் தங்கமே! எம் உள்ளத்தின் வரமும் நீயே! எங்கள் நெஞ்சத்தின் தஞ்சமும் நீயே! எங்கள் பஞ்சமும் தீர்பப்வளே! அண்டமெல்லாம் அலைந்தாலும் அலைகடல்கள் தேடினாலும் அகராதியை புரட்டினாலும் அர்த்தமறிய முடியா அற்புத உயிர் வரலாறு தாய்மை மட்டுமே!

அந்த தாய்மைகளுக்கெல்லாம் தாயானவள்தான் குருகுல அன்னை செபமாலை மாதா உன்னை சிம்மாசனத்தில் ஏற்றி அழகு பார்க்க வேண்டுமென்ற மக்களின் தீராத ஆசை இன்று உனது அருளால் நிறைவேறப்பட்டிருக்கிறது.

எமது மக்களின் இரத்த வியர்வையாலும் சொந்த உழைப்பினாலும் தியாகத்தினாலும் ஏற்றிய இந்தக்கல் காணிக்கையை ஏற்று எம்மக்களை கருணைக் கண்கொண்டு பார்த்தருளும், உம்மை அண்டி வரும் பொழுது அரவணைத்து அருள் பொழிந்து எம்மவரின் எதிர்காலம் சிறக்க நல்வழிகாட்டியருளும் அன்னையே! இத்திறப்பு விழா நிகழ்வில் நான் கலந்து கொள்ள முடியாவிட்டாலும் என் எண்ணமெல்லாம் உங்களைச் சுற்றியே இருக்கின்றது. அன்னையின் ஆசியும் அருளும் நிறைவாக உங்கள் அனைவருக்கும் கிடைப்பதாக! அன்னைக்கே புகழ்.

**அருட்பணி. தோ.அ.கு. (குருகுலமதியர்) அ.ம.தி TAP)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகனின் ஆசிச்செய்தி



இரணைமாதா நகர் புனித செபமாலைத் தாய் பெற்றெடுத்த 2 ஆவது குருமகனாகிய நான் மகிழ்ந்து நெகிழ்ந்து எழுதும் ஆசிச் செய்தி.

'என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகின்றது, என் மீட்பராம் கடவுளை நினைத்து என் இதயம் பேருவகை கொள்கின்றது'. (லூக்1:42)

அமல மரித்தியாகிகள் அன்று எம் பங்கில் விதைத்த விதை இன்று வளர்ந்து விருட்சமாகி, அவ்விருட்சத்தில் கம்பீரமாக கொலுவீற்றிருக்கும் எம் செபமாலை அன்னைக்கு புதிய ஆலயம் அமைத்து மலர் வெளியிட்டு மகிழ்வது தகுதியும் நீதியுமே. இஸ்ராயேல் மக்கள், எகிப்து நாட்டில் இருந்து இடம்பெயர்ந்து நானூற்றி எண்பதாவது ஆண்டில் சாலமோன் மன்னனால் ஆலயம் கட்டத் தொடங்கி ஏழு ஆண்டுகளின் பின் அவ் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. அது போன்று கடவுள் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்கிற்கு அமைய தன் இனத்தை கட்டி எழுப்ப இருபது ஆண்டுகளுக்கு மேல் எடுத்தது இது வரலாற்று உண்மை. அதே போன்று நாங்களும் 1992ஆம் ஆண்டில் இரணைதீவில் இருந்து இடம்பெயர்ந்து முப்பத்தொரு ஆண்டுகளின் பின்னர் எங்களது ஆலயத்தை கட்டி முடித்திருக்கின்றோம்.

கால தாமதங்களும் பின்னடைவுகளும் வீழ்ச்சிகளும் கடவுளின் உடனிருப்பை மேலும் அனுபவிக்கவும் அவரது வல்ல செயல்களைப் புரிந்து கொள்ளவும் கடவுள் எமக்குத் தரும் அரிய சந்தர்ப்பங்களே. இதைக் கடந்த இருபது ஆண்டுகளாக அனுபவித்திருக்கிறோம். பல குருக்கள், துறவிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், வைத்தியர்கள், கிராம சேவகர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் என்று பல ஆசீர்வாதங்களை தாய் மரியாளூடாக எம் மக்கள் பெற்று, கடவுளின் உடனிருப்பை அனுபவித்திருக்கின்றோம். எம் மண்ணும் மக்களும் பல அற்புதங்களுக்கும் அரிய பல செயல்களுக்கும் சொந்தக்காரர்கள் என்பது பலரும் அறிந்த உண்மை. எம் தாய் செபமாலை அன்னையின் ஆற்றல் மிகுந்த புயம் எம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டுப் போரின் முன்னும், போரின் பின்னரும் வலிமையாய் எம் மத்தியில் செயலாற்றி வருகின்றது.

கடலில் இருந்து பெற்றதை கடவுளுக்கு கொடுத்து கடவுள் தங்கும் கருணையின் இல்லமாகிய இவ் ஆலயத்தை அமைக்க ஈடுபாட்டுடன் உதவிய எம்மவர்கள் உண்மையிலேயே உயர்ந்தவர்கள், போற்றப்பட வேண்டியவர்கள்.

"நீ என் கட்டளைகளைக் கடைப்பிடித்து வந்தால் நான் உனக்கு சொன்ன எல்லாவற்றையும் நிறைவேற்றுவேன். உன் மக்களோடு மக்களாக உங்களோடு குடியிருப்பேன். ஒருபோதும் உன்னைக் கைவிடமாட்டேன்." *(1 அர 6:12)* சாலமோன் அரசன் ஆலயத்தைக் கட்டி முடித்த பின் கடவுள் சாலமோனுக்கு சொன்ன வாக்குறுதி. அதே வாக்குறுதியை இன்று ஆலயத்தை கட்டிமுடித்துமகிழும் எமக்கும் சொல்கின்றார்,

"நான் உங்களோடு உங்கள் மத்தியில் குடியிருப்பேன் கைவிட மாட்டேன். ஆனால் என் கட்டளைகளை கடைப்பிடியுங்கள்."

ஆலயத்தைக் கட்டிமுடித்த நாங்கள், அன்புச் சமூகத்தைக் கட்டி எழுப்புவோம். ஒருவர் மற்றவர் மீதுள்ள புரிந்துணர்வைக் கட்டியெழுப்புவோம். ஒற்றுமையைக் கட்டியெழுப்புவோம், சண்டை சச்சரவு இல்லாத, உண்மை, நேர்மையுள்ள முன்மாதிரிகையான இறை சமூகத்தை கட்டியெழுப்புவோம். இறை ஆசீரை நிறைவாகப்பெற்று முன்மாதிரிகையான சமூகமாக மிளிர கடவுள் எம்மை ஆசீர்வதிப்பாராக.

**அருட்பணி. தே. யேசுபாலன் அ.ம.தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகனின் ஆசிச்செய்தி



கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் நாம் பெற்ற நம்பிக்கை எனும் கொடையை நாளுக்குநாள் அதிகமாக உணரவும் இறைத்தந்தையை அவரது உண்மை இயல்புக்கேற்ப உள்ளத்தில் வழிபடவும் அவரை மற்றவர்களுக்கு கொடுப்பதே எம் வாழ்வின் அடிப்படையான செயற்பாடாகும். இதை வெளிப்படுத்தும் அடையாளமாக எமது கிராமத்தில் கம்பீரமாக புனித செபமாலை மாதா ஆலயம் எழுந்து நிற்கின்றது.

எம் மக்களின் விசுவாச வாழ்வின் ஒட்டுமொத்தமான வெளிப்பாடே இவ்வாலயம் "ஆண்டவரை நான் என்றும் போற்றுவேன். ஏனெனில் அவர் அரும்பெரும் செயல்கள் புரிந்துள்ளார்." புனித செபமாலை மாதா பெற்றெடுத்த 3வது குருமணி ஆகிய நான் அன்னைக்கும் அவள் பெயர் கொண்ட ஆலயத்திற்கும் ஆசிச்செய்தி கூறுவதில் பெருமையடைகின்றேன். இவ்வாலயத்தில், பீடப்பணியாளராகப் பணியாற்றி, இறையழைப்பைப் பெற்று இதே ஆலயத்திலே குருத்துவ திருநிலைப்படுத்தலையும், எனது முதல் திருப்பலியையும் நிறைவேற்றியது அன்னை எனக்குக் கொடுத்த பாக்கியம் எனக்கருதுகின்றேன்.

எம் மக்கள் அன்னையின் மேல் கொண்ட அன்பும், நம்பிக்கையும் அவள் மூலமாகப் பெற்றுக்கொண்ட நன்மைத்தனங்களையும் நான் வாழ்க்கை அனுபவத்திலே கண்டுணர்ந்திருக்கிறேன். நாம் கேட்பது எதையுமே தக்க நேரத்தில் தம் மகனிடம் பரிந்து பேசி எமக்குப் பெற்றுத்தருகின்ற புனித செபமாலை மாதாவை பாதுகாவலியாகக் கொண்ட நாம் ஒவ்வொருவரும் பாக்கியம் பெற்றவர்களே!

எம் மக்களுடைய தீராத தாகமும் அவர்களது விடாமுயற்சியுமே இன்று எம் ஊரில் இவ்வழகிய ஆலயம் அமைக்கப்பட்டிருக்கிறது. இதற்காக பல நல்ல மனிதர்கள் அரும்பாடுபட்டு உழைத்திருக்கின்றார்கள். அனைவருக்கும் நன்றிகளும் பாராட்டுக்களும்.

"ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவர்" (லூக்: 6:45) நாமும் அன்னை மரியைப் பின்பற்றி இறைவாக்குறுதியை நம்பி பேறுபெற்றவர்களாவோம். எம் மக்களினுடைய முழு நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட இவ்வாலயம் பல ஆன்மீகப் பணிகளை நிறைவுசெய்ய உதவும் என்பதில் சந்தேகமில்லை. அத்தோடு பல சமூகப் பணிகளை செய்வதற்கும், கல்வி பொருளாதார ஒழுக்க விழுமியங்களில் சிறந்து விளங்குவதற்கு அன்னையின் பரிந்துரை நிறைவாகக் கிடைக்க அனைவருக்கும் வாழ்த்துக்களைக் கூறிநிற்கின்றேன்.

**அருட்பணி. கீதபொன்கலன் அன்ரன் கொன்சலஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சகோதரியின் ஆசிச்செய்தி



ஒரு நாடு, ஒரு கிராமம் அபிவிருத்தி அடைந்து வருகின்றது என்று நோக்கினால் ஆலயமும் - ஆன்மீகமும், கல்விக்கூடமும் - அறிவும் - வைத்தியசாலையும் - ஆரோக்கியமும் சிறந்து விளங்குகின்றது. அந்த வகையில் இரணைமாதா நகர் கிராமத்தில் பிரமாண்டமான ஆலயம் கட்டப்பட்டு திறப்பு விழாவுக்கு ஆசிச்செய்தி அளிப்பதில் பெருமகிழ்வடைகின்றேன்.

எனது கல்விப்பணியோடு ஆன்மீகமும் சமூகப்பணியும் இணைந்து இம்மக்களின் வாழ்வோடு இரண்டறக்கலந்து, இவர்களின் இன்ப துன்பங்களைப் பகிர்ந்து வாழ்ந்த காலங்களையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். இறைவனுக்கு நன்றிகூறுகின்றேன். அதேவேளையில் திருத்த வேண்டிய நேரங்களில் திருத்தியும், தட்டிக்கொடுக்க வேண்டிய சந்தர்ப்பங்களில் தட்டிக்கொடுத்தும் உருவாக்கிய பிள்ளைகள், குடும்பங்களின் நல்வாழ்வையும் வளர்ச்சியையும் பார்த்து மகிழ்ச்சியடைகின்றேன். இவர்கள் இறைவழியில் வாழ்கின்றார்கள் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

தொடர்ந்தும் இம்மக்களின் மகிழ்ச்சியான வரவேற்பு அன்பு, பாசம், சகோதரத்துவம், நன்றி மறவாமை, அயராத முயற்சி, ஆன்மீக வாஞ்சை போன்ற பண்புகளால் கவரப்பட்டார்கள் எம் திருக்குடும்ப அருட்சகோதரிகள். மாணவச் செல்வங்கள் கற்றல் செயற்பாடுகளில் உயர்நிலை அடைந்தும் ஒழுக்கத்திலும் வாழ்வின் விழுமியங்களிலும் சிறப்புற்றுக் காணப்படுகின்றார்கள்.

ஆலயக் கட்டுமானப்பணிகள் மக்களுடைய ஒத்துழைப்பும் தியாகமும் ஆகும். ஆலயத்துக்குள் குடும்பம் குடும்பமாக செபிப்பதைக் காணும்போது மகிழ்ச்சி பொங்கும். கடற்றொழிலில் ஈடுபட்டு, ஆலயப்பணிகளில் தாராள உள்ளமும் அர்ப்பணிப்பும் உற்சாகமும் இழையோடியதைக் காணக்கூடியதாயிருந்தது. அனைத்திற்கும் காரணம் ஆன்மீக ஆர்வங்கொண்ட அருட்பணியாளர்கள், திருக்குடும்பச் சகோதரிகளின் அர்ப்பணம் நிறைந்த பணிகள் என்பதில் ஐயமில்லை.

புனிதம் மிக்க செபமாலை மாதாவின் பரிந்து பேசுதலும் பாதுகாப்பும் என்றும் உங்களோடிருந்து வழிநடத்துவதாக. ஆலயம் இறைவன் வாழும் இல்லமும், அவரது பிரசன்னத்தை உணரும் சூழலுமாகும். மீண்டும் அனைவருக்கும் எனது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களையும் செபங்களையும் கூறி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி அமிர்தராணி சேவியர்**
திருக்குடும்பக் கன்னியர் மடம்,
பண்டத்தரிப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்சகோதரியின் ஆசிச்செய்தி



இந்து மா சமுத்திரத்தின் இதயமாகத் திகழும் இரணைதீவு மக்களின் எண்ணிலடங்கா இன்னல்கள் தீர்த்த தாய்மரி செபமாலை அன்னைக்கு அர்ப்பணமாக்கிய புதிய ஆலயத்திற்கு வாழ்த்துக்கள் கூறுவதில் அளவில்லா மகிழ்ச்சி அடைகின்றேன்.

போர்க்கால இடப்பெயர்வுகளில், வாழ்வின் விளிம்புக்குச் சென்று மீண்டெழுந்து அன்னையின் அடைக்கலத்தில் அயராது உழைத்த அடியார்களின் விசுவாசம் பாராட்டுக்குரியதே. ஆண்டுகள் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அடித்தளமிட்டு அரும்பாடுபட்டு உழைத்து, "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்ற பழமொழிக்கேற்ப ஆலயத்தை அமைத்து, அலங்காரம் செய்து இன்று நிறைவு காணும் மக்களின் நம்பிக்கையும் பெருந்தன்மையும் பாராட்டுக்குரியதே.

தூய செபமாலை அன்னையின் அழகிய இவ்வாலயம் பார்ப்பதற்கு அழகாக இருப்பது மட்டுமல்ல, ஆண்டவரின் பேழையை தாங்கிய இஸ்ராயேல் மக்கள் எரிக்கோ மதிலை இடிந்து விழச்செய்யும் சக்தி வாய்ந்தவர்களாக, இயேசுவை புகழ்ந்து போற்றியது போல நமது மக்களும், தீராத இக்காலப் பிரச்சினைகள் மத்தியில் நமக்காக ஏழையாக வீற்றிருக்கும் இயேசுவை அனுபவித்து, துதித்து மகிழவும், தாய்மரி செபமாலை அன்னைக்கு ஏற்ற மக்களாக வாழவும் வரம் வேண்டி வாழ்த்தி நிற்கிறேன். மழுங்கிப்போகும் மனித விழுமியங்கள் உயிர்பெற்று! எதிர்கால சந்ததி சீரும் சிறப்பும் பெற்று விளங்க இறைவன் ஆசி பொழிவாராக.

**அருட்சகோதரி அம்புறோசின் மார்க்**
தலைவி,
திருக்குடும்ப கன்னியர் மடம்,
இரணைமாதாநகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகளின் ஆசிச்செய்தி



அனைவரும் மகிழ்வோமே
அன்னையைப் போற்றுவோமே

எம் மக்களை வாழ்த்துவோம்
எம் மக்களின் தியாகத்தையும் போற்றுவோம்

பாண்டியன் மேட்டில் வீற்றிருக்கும் தாயே
எம் மக்களை உம் ஆசிகளால் நிரப்பியருளும்

கடலலை அடித்த போது அரவணைத்தாய்
வள்ளங்கள் படகுகள் தாண்டபோது அடைக்கலம் தந்தாய்

பதுங்கு குழியில் இருந்த போது தேற்றினாய்
தாயே உன்னை தேடி வருவோருக்கு தஞ்சமாய் இரும்

தாயே உனக்கென கட்டியெழுப்பிய காணிக்கையை ஏற்று
உன்னண்டை நாடி வருவோர் அனைவரையும் ஆசீர்வதியும்

எல்லா விதமான தியாகங்கள் செய்து
குழுமமாய் செய்தவைகளுக்கு ஆசி பல.

துன்ப துயரங்கள் ஊடாக சென்று எல்லாவற்றையும் தாங்கும்
இதயங்களாக வாழ்ந்தவர்களுக்கு ஆசி பல.

ஆலயம் கட்டி முடிக்க வேண்டும் என்று காத்திருந்து இறந்து
இறைவனடி சென்ற ஆன்மாக்களுக்கு மன்றாட்டுடன் ஆசி பல.

பஞ்சமும் பகையும் நோயும் வையகத்தில் தீர்ந்தொழிய
ஆசி பல பொழியும் அம்மா.

**அருட்சகோதரி தோ. றோ. ம. பெ. (குருகுலமதியர்) பி. மே. ச.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகளின் ஆசிச்செய்தி



**எம்மவர்க்கு வாழ்த்துக்களும்**
**மிகப்பெரிய நன்றிகளும்**

எமது தேவாலயம்
எமது மக்களின் இரத்தத்துளி
எமது தேவாலயம்
எமது மக்களின் வியர்வைத்துளி
எமது தேவாலயம்
எமது மக்களின் வாழ்வாலயம்
எமது தேவாலயம்
எமது மக்களின் இலட்சியம்
எமது தேவாலயம்
எமது மக்களின் ஏக்கம்
எமது தேவாலயம்
எமது மக்களின் கனவாலயம்

இவ்வாறாக மனதில் ஏங்கிய ஏக்கங்களுக்கெல்லாம் புடமிடும் வடிவமாய் எழுந்தருளி காட்சிதரும் எமது தேவாலயத்தின் திறப்பு விழாவில் நானும் எமது மக்களை வாழ்த்துவதில் பெரு மகிழ்வடைகிறேன்.

**அருட்சகோதரி லூமே தோமஸ்**
பிரான்சிஸ்கன் சபை அருட்சகோதரி
அயர்லாந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகளின் ஆசிச்செய்தி



ஆலயம் இறைவனின் இல்லமாகவும், இறைமக்களின் வழிபாட்டுத் தலமாகவும் இருக்கின்றது. ஒரு சமுதாயத்தின் கலாசார பண்பாட்டு வளர்ச்சிக் கட்டங்களின் மேம்பாட்டினை பிரதிபலிக்கும் உன்னத சின்னமே ஆலயமாகும். எனவே செபமாலை அன்னையின் புதிய ஆலய திறப்பு விழாவில், இந்நூலுக்கு வாழ்த்துக் கூறுவதில் மகிழ்வடைகின்றேன்.

கடலன்னை தாலாட்ட எங்கள் கிராமத்தின் ஒளி விளக்காய் எம் எல்லோருக்கும் அன்னையாய், தந்தையாய் விளங்கும் செபமாலை அன்னையே! நீ வாழ்க, உன் நாமம் வாழ்க. குழந்தைப் பருவம் முதல் இன்றுவரை உன் பெயர் சொல்லி, உன் கிராமத்தின் பெயர் சொல்லி, செல்வச்செழிப்புடன் எங்களை வாழவைத்த தாயே! தஞ்சம் என உன்னைத் தேடிவரும் உம் மக்களை இருகரம் நீண்டி அணைப்பவளே! நாம் உம் பிள்ளைகள் எனக்கூறுவதில் பெருமையடைகின்றேன். இவ் ஆலயம் அடிக்கல் நாட்டியதில் இருந்து பல ஆண்டுகளைக் கடந்திருந்தாலும், பல பங்குத்தந்தையரை கண்டிருந்தாலும், எமது கிராம மக்களின் தனி முயற்சியாலும், அயராத உழைப்பினாலும், அன்னையின் மேல் கொண்டிருந்த பத்தியினாலும், மிகவும் அழகுற வடிவமைத்து இன்று புதிய ஆலயத் திறப்பு விழாவில் மகிழ்வு காண்பதில் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றது. இம்மகிழ்வின் நாளிலே, பங்குமக்கள் அனைவருக்கும், இதற்காக உழைத்த அனைத்து நல் உள்ளங்களையும், பங்குதந்தையரையும் வாழ்த்தி பாராட்டி நிற்கின்றேன்.

இரணைதீவு கிராமத்தின் எல்லா ஆசிர்வாதங்களுக்கும் காரணமாகி இருப்பவள் எம் பாதுகாவலி செபமாலை அன்னையே. அன்னையின் பாதுகாவலில் கத்தோலிக்க குடும்பங்களாக, அன்பையும், பாசத்தையும், உறவையும் மட்டும் பகிர்ந்து வாழ்ந்த அந்த மகிழ்வின் நாட்களை நினைத்து மகிழ்வடைகின்றேன். இடப்பெயர்வு எமது இருப்பிடங்களை மாற்றி அமைத்தாலும், எனது உள்ளம் எப்போதும் அன்னையின் ஆலயத்தையும், கிராமத்தையும், மக்களையும் நேசித்துக் கொண்டுதான் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலும், கடல்சாந்த அழகிய கிராமத்தில் பிறந்து வளர்ந்து செபமாலை அன்னையின் பாதச்சுவடுகளைப் பணிந்து வணங்கி அவள் ஆசீர்வாதங்களுடன் வாழ்ந்த எனது வாழ்விற்கு அழைத்தல் என்னும் விதையை வளர்த்துக்கொள்ள வழிகாட்டியது எனது குடும்பம். அன்னையின் ஆலயம், திருக்குடும்ப சகோதரிகளின் வாழ்வு, கிராமத்தின் முத்தோரின் விசுவாச வாழ்வு, நான் கல்வி கற்ற பாடசாலை இவர்களிடமிருந்தே நான் என் அழைத்தல் வாழ்வை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

தனிக் கத்தோலிக்க மக்களை மட்டும் கொண்ட எமது கிராம மக்கள் இயல்பிலேயே விசுவாசமும், இறைபக்தியும், குருபக்தியும் நிறைந்த எளிமையான வாழ்க்கைப் பண்புகளைக் கொண்டிருந்தனர். இடப்பெயர்வின் பின்னரான காலங்களில் இரணைமாதா நகர் கிராமத்தில் குடியேறிய பின்னர் ஆரம்ப காலங்களில் மக்கள் பல கஸ்ரங்களையும், இழப்புக்களையும் அனுபவித்தாலும், அன்னையின் பாதுகாப்பையும், அன்பையும் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்து கொண்டனர். இரணைமாதா நகரில் குடியமர்ந்த பின்னர் பல இறையழைத்தல்களை எமது கிராமம் பெற்று இருக்கின்றது. பல புதிய குருக்களையும், துறவிகளையும் இம்மண் பெற்றுத்தந்துள்ளது.

உருவாக்கத்தில் இருக்கும் பிள்ளைகள் நிலைத்திருக்கவும், புதிய அழைத்தல்கள் பெருகவும் ஆசித்து நிற்கின்றேன். அத்துடன் எம் கிராமத்தின் வளர்ச்சிக்காக உழைத்து நித்தியத்தில் இளைப்பாறும் எம் மூதாதையர்களையும் நன்றியுடன் நினைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தொடர்ந்தும் ஆலயமும், பங்கும் வளர்ச்சி அடையவும் மக்களின் வாழ்வு சிறக்கவும், விசுவாசம் உறுதிப்படவும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி நிர்மலவசந்தா மரியசெல்வம்**
அதிபர்
கிளி/ புனித பற்றிமா றோ. க. த. க. பாடசாலை
D-8, உருத்திரபுரம்
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகளின் ஆசிச்செய்தி



## ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது

கடலலைகள் தாலாட்டும் நெய்தல் நிலமதிலே ஆழ்கடல் ஓடி திரவியம் தேடும் இரணைதீவுப் பதிதனிலே கோவில்கொண்டு எழுந்தருளி அனைவருக்கும் அருள்மாரி பொழிந்து வந்த எம் புனித செபமாலை அன்னை ஆழியிலே கண்டெடுத்த முத்தாக, எம் வாழ்வின் சொத்தாக எம்மவரின் உயிர்நாடியாக எம் உள்ளங்களில் உறைந்திருப்பவள் அன்பான செபமாலைத் தாய். எம் அன்னையின் பாதம் தொட்டு கேட்டவரம் கிடைக்காமல் போனதுண்டோ? அவள் முகம் பார்த்து மகிழாத மனம் உண்டோ? ஓரினமாய் ஒருதாய் மக்களாய் செபமாலை அன்னை மடியில் அவளுடைய பாதுகாப்பில் பக்குவமாய் பண்போடு ஆன்மீகம் தளைக்க நாம் வாழ்ந்த எம் ஊரின் நினைவுகள்தான் மறந்திடுமோ. போர் என்னும் கொடியவன் அன்று காட்டினான் சிவப்புக் கொடி, ஆபத்து என்று அறிந்ததும் கூடுவிட்டுப் பறந்தோம். பாதுகாப்புத் தேடி குஞ்சுகள் சிதறடிக்க தாய்மட்டும் இருந்திடுவாளோ? தன் கூட்டுக்குள் கோழி தன் குஞ்சுகளை வழிநடத்துவது போல எம்மைப் பாதுகாப்பாக கூட்டி வந்து எம்போடு தங்கினாள் எம் அன்னை. வறுமையும், நோயும், இழப்புக்களும் எம்மைத் துரத்தினாலும் புனித செபமாலைத்தாய் எம்மோடு இருக்கிறாள். எம்மைப் பாதுகாக்கின்றாள் என்னும் நம்பிக்கை அனைத்தையும் ஏற்று புதிய மனிதர்களாக, புதியதொரு இடத்தில், புதிய வாழ்வை, புதிதாய் தொடர வழிகாட்டியது.

நாம் வாழ நமக்கு ஓர் இல்லம் தேவை என்பதற்கு மேலாக அன்னைக்கு மகிமை சேர்க்கவும், எம் ஆன்மீகம் தளைக்கவும் ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என்ற தனியாத ஆசையும், ஆர்வமும் அனைவருடைய உள்ளங்களில் நிறைந்திருந்ததன் விளைவாக ஆலயம் சிறு குடிசைக் கோயிலாக ஆரம்பித்து சிறிது சிறிதாக வளர்ச்சியடையத் தொடங்கியது. இன்று கம்பீரமாக உயர்த்து தோற்றமளிக்கும் இவ்லாலயம், அடிக்கல் நாட்டப்பட்டு கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகி செயற்பட்டுக் கொண்டு இருக்கும் காலத்தில், மீண்டும் இறுதிப்போர் இடர்பாடுகள் வாழ்வை சீரழித்து தொடர்ச்சியான இடப்பெயர்வு, உயிரிழப்புக்கள், முகாம் வாழ்வு, மீள் குடியேற்றமென துன்பம், துயரம் எம்மை வாட்டி வதைத்தாலும் மீண்டும் வாழ்யைக் கட்டியெழுப்ப பல நிலைகளில் போராடி எழுந்து நின்று புனித செபமாலை அன்னையின் ஆலயம் சிறப்புற அமைய எடுத்த ஒவ்வொரு முயற்சிகளையும் இறைவன் அனைவரையும் வழிநடத்தினார் என்பதை நினைத்து இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன்.

வாழும் இறைவனின் இல்லம் எம் ஊரின் மத்தியில் உயர்ந்து மிளிர்ந்து காட்சி தருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். ஏற்றத்தாழ்வுகள் நீக்கி பகைமை உணர்வுகள் மறந்து சிறந்ததோர் சமூகம் இனிதாய் மலர இறைவனின் ஆசீரும் புனித செபமாலை அன்னையின் பரிந்து பேசுதலையும் இரந்து வேண்டி அனைவரையும் வாழ்த்தி உளம் மகிழ்ந்து நிற்கின்றேன்.

**அருட்சகோதரி மரியமலர் ஆரோக்கியம்** H.F.B



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகளின் ஆசிச்செய்தி



**'ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. எம் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கிறது'**

இரணைதீவின் பங்கு மகளாகிய நான் செபமாலை அன்னையின் புதிய ஆலய திறப்பு விழா நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதனையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கடல் வளமும், கறைபடாத காற்றும், இயற்கையோடு இணைந்த இயல்பு வாழ்வும் கடவுளின் உடனிருப்பும் எம் அன்னையின் ஆற்றல் நிறைந்த பாதுகாப்பும் எம்மைச்சுற்றி இருந்தது என்றால் அது ஆச்சரியப்படுவதற்கில்லை. இந்நிலையில் குருக்கள், துறவிகளின் அன்பையும், விசுவாசத்தையும், வழிகாட்டலையும், ஆளுமைப் பண்பையும் பெற்று வாழ அன்னையின் ஆலயமே ஊக்கமும் திடமும் வழங்கியது. 1992ல் எம் மக்கள் முழுவதுமாக வெளியேறி மண்ணின் வாசம் விட்டகன்ற சோகம், ஆலயத்தை விட்டுவந்த கவலை, இயல்பு வாழ்வை பறிகொடுத்தவர்களாய் உள்ளமுடைந்து சோர்ந்து போயிருந்த அந்நாட்களில், மக்களின் ஆன்மீக வாழ்விற்கு ஆலயம் தேவை என்பதை உணர்ந்த பங்குத்தந்தையர்கள், பங்கு மக்களின் முயற்சியினால் அடிக்கல் நாட்டியதிலிருந்து பல ஆண்டுகள் காலதாமதம் அடைந்தாலும் எமது மக்களின் கடின முயற்சியினாலும், அயராத உழைப்பினாலும் அன்னையின் மேல் கொண்டிருந்த ஆழமான பக்தியினாலும் நேர்த்தியான முறையில் வடிவமைக்கப்பட்ட புதிய ஆலயம் திறப்பு விழா காண்பதில் மகிழ்ச்சியைத் தருகின்றது. இதற்காக உழைத்த அனைத்து உள்ளங்களையும் பாராட்டி நிற்கின்றேன்.

போரின் வடுக்கள், இடப்பெயர்வுகள், இழப்புக்கள் எம் மக்களை விடாது துரத்திச் சென்ற வேளையிலும் அன்னையின் பாதுகாப்பும் உடனிருப்பும் இருந்ததை என் வாழ்க்கை அனுபவத்தில் கண்டுணர்ந்திருக்கின்றேன்.

செபமாலை அன்னையின் பாதச்சுவடுகளை வணங்கி அவளின் வல்ல செயல்களினால் வாழ்ந்த எனது குடும்பத்தின் ஆழமான விசுவாசம் என் அழைத்தல் வாழ்விற்கு ஊக்கமளித்தது. அத்தோடு எமது கிராம மக்களின் விசுவாச வாழ்வு, திருக்குடும்ப சகோதரிகளின் வாழ்வு, பாடசாலை சமூகம் அனைவரையும் நன்றியுடன் நினைத்துக் கொள்கின்றேன். இயேசுவின் மீட்புப்பணியில் உடன் பயணித்த அன்னை மரியாவோடு சேர்ந்து அன்புச் சமூகத்தைக் கட்டியெழுப்புவோம். ஒன்றிணைந்த உறவைக் கட்டியெழுப்பும் அன்பு சமூகமாக மிளிர வாழ்த்துகின்றேன்.

**அருட்சகோதரி வானுமதி பத்திநாதன்**
திருக்குடும்ப கன்னியர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகளின் ஆசிச்செய்தி



**எம்மவர்களுக்கெல்லாம் நீதான் தாயம்மா**

பல ஆண்டுகளாகக் காத்திருந்து இன்று எம் அன்னையின் ஆலயம், புதுப் பொழிவு பெற்று திறப்பு விழாக்காணும் என் மக்கள் அனைவரையும், வாழ்த்துவதில் பெருமிதம் அடைகிறேன்.

என்னுடைய வாழ்க்கையில் அன்னையின் தரிசனம் சொல்லிலடங்காதது. என்னுடைய சிறுவயதில் அன்னையின் ஆலயத்திற்கு அடிக்கடி செல்வது எனது வழக்கமாகும். அன்னையிடம் கேட்பது எல்லாம் எனக்கு கிடைத்தது. என்னுடைய கல்வியிலும் பல தடைகள் தாண்டி என்னை அழைத்தல் வாழ்வுக்கு தூண்டியதும் எம் அன்னையின் ஆலயம்தான். எனது பெற்றோரின் வழிகாட்டலும் அவர்களின் தியாகம் நிறைந்த வாழ்வும், அன்னையின் ஆசீர்வாதமும் துறவற வாழ்வுக்கு வித்திட்டது.

எனது துறவறவாழ்வுப் பயணத்தில் அன்னையின் ஆசீர்வாதம் உடனிருக்கவும், எனது மக்களின் விசுவாச வாழ்வின் மூலம் எமது கிராமத்தில் அழைத்தல்கள் உருவாகவும், சமகால நிகழ்வுகளால் துன்பதுயரங்கள், இழப்புக்களுக்குள்ளும் உள்ளாகியிருக்கும் எம் மக்களுக்கு அன்னையின் ஆசீர் நிறைவாகக் கிடைக்க வேண்டுமென பிரார்த்தித்து மனம் நிறைந்த மகிழ்வோடும், இறை ஆசீரோடும் வாழ்த்தி நிற்கிறேன்.

**அருட்சகோதரி யேசுராஜன் யுஸ்ரினா**
அன்பு கன்னியர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்கு மகளின் ஆசிச்செய்தி



### துன்ப முடிச்சுக்களை அவிழ்க்கும் செபமாலை அன்னையே, எமக்கு துணை நீரே அம்மா

காத்திருப்பு கனிந்தது. எம் வேண்டுதல்கள், கனவு, ஆசை நிறைவேறிய பெருமிதம் இன்று. இந்த நெகிழ்ச்சியானதும் மகிழ்ச்சியுமான தருணத்தில் பங்குமக்கள் அனைவரையும் வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன்.

என்னுடைய அழகான சிறுவயதுக் காலம் செபமாலை அன்னையின் மடியில் அழகாக அமைந்தது. என் தந்தையுடன் சைக்கிளில் முன்னால் அமர்ந்து கொண்டு,மறைக்கல்வி வகுப்பு, திருப்பலி, தந்தையார் பங்குபற்றிய ஆலயக் கூட்டங்கள் என இந்த ஆலயத்திற்கு அடிக்கடி சென்றுவருவது வழக்கம். பல சுவாரசியமான கதைகள், அன்னையின் பாதுகாப்பு, வழிநடத்தல் என பல பெறுமதிமிக்க கதைகளை என் தந்தை சொல்ல தலையசைத்துக்கொண்டு கேட்டு வந்த ஞாபகங்கள் இன்றும் என் மனதில் பசுமரத்தாணி. ஆனாலும் கண்களின் ஓரங்களில் இவ் நினைவுகள் கண்ணீரையும் வரவைக்கின்றது.

என்னுடைய பணிவாழ்வின் முக்கிய ஓராண்டை இரணைமாதா நகர் திருக்குடும்ப கன்னியர் மடத்தில் அர்ப்பணித்தேன். அவ்வேளைகளில் அன்னையின் வழிநடத்தல் என்னை சிறப்பாக வழிநடத்தியது. எமது மக்களின் இறை விசுவாசம் என்பது மேரு மலை போன்றது.

இன்னும் எமது மக்கள் விசுவாசத்தில் தளர்வுறாது ஒற்றுமையுடனும், அன்னையின் பாதுகாப்பிலும் வாழ வாழ்த்துகின்றேன்.

காத்திருப்பு எப்போதும் வீண்போவதில்லை. பல வருடங்கள் ஆகியும் ஆலயம் கட்டிமுடிக்கப்படவில்லை என எம்மிடத்தே பல ஏக்கங்கள் இருந்தன. இறைவன் எமக்கு ஒன்றை கொடுக்க காலம் தாழ்த்துகிறார் என்றால் நாம் எதிர்பார்த்ததை விட நூறு மடங்கு அதிகமாக கொடுக்கப்போகிறார் என்பதற்கு எமது இந்த பிரமாண்டமான ஆலயம்தான் எடுத்துக்காட்டு. இதை எம் தனிப்பட்ட வாழ்விலும் ஏற்று இறைவேண்டலில் நிலைத்திருப்போம்.

இந்த இனிய தருணத்தில் ஆலயம் நிறைவுபெற பல வழிகளில் உழைத்த எம் பங்கு மக்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்.

செபமாலை மாதா உங்கள் வாழ்வில் எப்போதும் துணை நிற்பார்.

**அருட்சகோதரி அருமைநாயகம் அனுசியா**
திருக்குடும்ப கன்னியர் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அதிபரின் வாழ்த்துச் செய்தி



யாழ் மறைமாவட்டத்தின் வன்னிப் பெரு நிலப்பரப்பில், கிளிநொச்சியின் தென்மேற்குப் பகுதியில் அமைந்துள்ள இரணைதீவில் வாழும் மக்கள் நூறு வீதம் கத்தோலிக்க மதத்தைப் பின்பற்றி பல நூற்றாண்டு காலமாக வாழ்ந்துள்ளார்கள். இவ் வாழ்விற்குத் துணையாக இரணைதீவில் அமைந்த புனித செபமாலை மாதா ஆலயமே விசுவாச வாழ்வின் உன்னத சின்னமாக விளங்கியது. இம்மக்களின் வாழ்வை ஒப்பிடும்போது சமய நம்பிக்கையே முதலிடம் பெறுகின்றது.

இவ்வாறாக சமய வாழ்வுடன் விசுவாசத்தில் செபமாலை மாதா மூலமாக தமது வாழ்வை வளமாக வாழ்ந்த மக்கள், *1992*இல் இரணை தீவிலிருந்து முழுமையாக இடம் பெயர்ந்து, முழங்காவில் பகுதியில் தாம் குடியேறிய இடத்தில், இரணைதீவையும் மாதாவையும் தமது வாழ்வோடு இணைத்து வாழ்வதற்காக 'இரணைமாதா நகர்' என நாமம் சூட்டியமை அன்னை மேல் கொண்ட விசுவாச மேலீட்டால் என்பது தெளிவாகிறது. தமது வாழ்விடத்துடன் அன்னைக்கு ஆலயம் அமைக்கவும், வழிபாடு செய்யவும் *1992,1996,2000,2004* ஆகிய காலப்பகுதிகளில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் மக்களின் செயற்பாடுகளுக்கு முன்னடையாளமாகக் காணப்படுகின்றன.

யாழ் ஆயர், பங்குக் குருக்கள் ஆகியோரின் ஆலோசனைகளுடன் தமது உடல் உழைப்பும், கடல் வருமானம் மூலமாகவும், ஊரின் நடுவே வானுயர உயர்ந்து நிற்கும் ஆலயம் அமைத்து அன்னைக்கு அர்ப்பணம் செய்தமையானது எமது முன்னோரின் விசுவாச வெளிப்பாட்டின் அடையாளமே.

எனது தந்தையாரின் பூர்வீக நிலமாகிய இரணைதீவில் அதிபராக் கடமையாற்றியபோது அன்னையிடம் பெற்றுக்கொண்ட நன்மைகளுக்காகவும், இரணைமாதா நகரில் பாடசாலை அமைக்க என்னை கருவியாகப் பயன்படுத்தியமையும் நினைத்து உள்ளம் மகிழ்வடைகிறது. இப்புதிய ஆலய திறப்பு விழாவினை கொண்டாடும் பங்குமக்கள் அனைவரையும் பாராட்டுகின்றேன். இப்புதிய ஆலயம் உங்கள் வாழ்வின் விளக்காகவும், அந்தரித்து அமைதி நாடும் உள்ளங்களுக்கு அடைக்கலமாகவும் விளங்கி அன்னையின் ஆசி கிடைக்கவும் வாழ்த்துகின்றேன்.

**திரு. மு. எமிலியாம்பிள்ளை** (SLPS I, SLEAS III)
முன்னாள் அதிபர்
கிளி/இரணைதீவு.றோ.க.த.க.பாடசாலை
ஓய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மடுவலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அதிபரின் வாழ்த்துச் செய்தி



தொன்மையும் செழிப்பும் வரலாற்று சிறப்பும் கொண்ட வாழ்வில் வரலாற்று ஆவணத்தை உருவாக்கி ஆலய திறப்பு விழா மலராக வெளியிடவுள்ள மலருக்கு வாழ்த்துச் செய்தி கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன். நீண்ட கால பெருமுயற்சியின் மத்தியில் அழகு மிக்க ஆலயத்தை உருவாக்கி அதன் திறப்பு விழாவையும் கொண்டாடுவதுடன் எங்களது ஆவணப் புத்தக வெளியீட்டை வெளியிடுவதற்கு சந்தர்ப்பத்தை உருவாக்கிய புனித செபமாலை அன்னைக்கு நன்றி கூறுகின்றோம்.

எமது பாடசாலையானது ஆலயத்தின் அனைத்து செயற்பாடுகளுடன் இணைந்துள்ளது. அதைப்போலவே பாடசாலையின் செயற்பாடுகளும் ஆலயத்துடன் இணைந்துள்ளது. எனவே இந்த அழகு மிக்க ஆலயத்தை உருவாக்க உழைத்த நல்ல உள்ளங்களுக்கு வாழ்த்துக்களும் நன்றியும் கூறுவதுடன், திறப்புவிழா வெளியீட்டை வெளியிடுவதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த எமது மண்ணின் மைந்தர்களுக்கு, இம்மண்ணின் மைந்தன் என்ற வகையில் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் கூறி உங்கள் அனைவரையும் இறைவன் ஆசீர் வழங்கி பாதுகாக்க வேண்டுகின்றேன்.

**திரு. அமிர்தநாதன் றொபெட் கெனடி**
அதிபர்
கிளி/இரணைதீவு றோ.க.த.க பாடசாலை
இரணைமாதா நகர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



சாந்தியும் சமாதானமும் என்றென்றும் இறைவனின் அருளால் மீது உண்டாகதாக

ஐக்கியமும், சுவீட்சமும் நிறைந்த இவ்வுலகில் மகிழ்ச்சியாகவும் சந்தோசமாகவும் வாழ்வதுடன் மத, இன வேறுபாடு காட்டாமல் நல்லிணக்கத்துடன் மதங்களை கண்ணியப்படுத்தி, மக்களுடைய உணர்வுகளை மதித்து நடப்பதுடன் இந்நாட்டில் ஒற்றுமையாக, சகோதரத்துவத்துடன் நடந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்பாக வேண்டிக் கொள்கிறேன்.

இந்நூலின் வெளியீடு முழு உலகிலும் பிரகாசிப்பதுடன் இவ் ஆலய திறப்பு விழா சிறப்பாக அமைய வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன். அனைத்திற்கும் இறைவன் அருள் புரிவானாக. ஆமீன்!!

**மௌலவி. ப. அஸ்ரீன் (நூரி)**
ஜும்மா பள்ளிவாசல்
நாச்சிக்குடா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



வரலாறுகள் ஆவணப்படுத்துதல் என்பது வாழும் தலைமுறை தன் எதிர்கால சந்ததிக்கு ஆற்ற வேண்டிய பொறுப்பாகும். ஈழ வள நாட்டின் கத்தோலிக்க திரு அவை வரலாற்றில் மிக முக்கியமான மரியன்னை ஆலயங்களில் ஒன்றான இரணைமாதா நகர் புனித செபமாலை அன்னை ஆலயத்தின் பாரம்பரியமும் வரலாறும் மிக முக்கியமானவை.


எமது அன்னைக்கு ஓர் ஆலயம் அமைக்கப்பட வேண்டுமென கிராம மக்கள் உறுதிபூண்டு 2003ஆம் ஆண்டு அப்போதைய அருட்தந்தை X.W. ஜேம்ஸ் அடிகளாரின் தலைமையில் யாழ். முன்னாள் ஆயர் அதிவந்தனைக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் ஆசியுடன் அடிக்கல் நாட்டப்பட்டு கிராம மக்களினது நிதிப் பங்களிப்புடன் கட்டட வேலைகள் நடைபெற்று, இன்று மக்களின் வழிபாட்டிற்காக யாழ். ஆயர் அதிவந்தனைக்குரிய ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையால் திறந்து வைக்கப்படுவதையிட்டு மனமகிழ்வடைகிறேன்.

இந்த மகிழ்ச்சியின் இரட்டிப்பாக இத்திறப்பு விழாவை முன்னிட்டு நிகழும் மலர்வெளியீடு பேரானந்தமும், மனநிறைவும் தருகின்றது. குறிப்பாக இப்பங்கின் கத்தோலிக்க விழுமியங்களை ஆவணப்படுத்தும் எம் ஆலய மக்களின் முயற்சியைப் பாராட்டி உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றேன்.

**திரு. சூ. செல்வரட்ணம்**
அகில இலங்கை சமாதான நீதவான்,
ஆசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் பங்கில் அழைத்தல் வாழ்வு பெற்றவர்கள்



அருட்பணி.
தோ.அ.கு. குருகுலமதியர்
அமதி (Tap)



அருட்பணி.
தே. யேசுபாலன்
அமதி



அருட்பணி.
கீ. அ. கொன்சலஸ்
மறைமாவட்டக்குரு



அருட்சகோதரர்
க. நேவிஸ் சாள்ஸ்



அருட்சகோதரர்
த. தியோனிஸ்லாஸ்



அருட்சகோதரர்
அ. நிறோஜன்



அருட்சகோதரர்
ச. அன்ரனி



சகோதரர்
றொ.றொ. ஸ்ரான்லின்



அருட்சகோதரி
தோ.றோ.ம.பெ.



அருட்சகோதரி
தோ. லூமே



அருட்சகோதரி
ம. நிர்மலவசந்தா



அருட்சகோதரி
ஆ. மரியமலர்



அருட்சகோதரி
ப. வானுமதி



அருட்சகோதரி
அ. அனுசியா



அருட்சகோதரி
ஜே. யுஸ்ரினா



அருட்சகோதரி
கெ. மதிவதனி



அருட்சகோதரி
க. தீபிகா



சகோதரி
பி. டோபின்சியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச உத்தியோகத்தர்கள்

அமரத்துவம் அடைந்தோர்

செ. செபமாலை — ய. மடுத்தீன் — அ. மருசலீன் ] ஆசிரியர்கள்
தா. செல்வராணி — அ. அருமைநாயகம்
அ. சுவானாள் - தபால் நிலைய அதிபர்
செ. சுவாணி, ச. சந்தியா - [கிராமசபை நிலைய பொறுப்பதிகாரி]
அ. கி. ஜெயசீலன் - பாடசாலை அதிபர்
செ. சூசைதாசன் - சமாதான நீதவான்

ஓய்வுநிலை

மு. எமிலியாம்பிள்ளை - கல்விப் பணிப்பாளர்
ச. மாசில்லா - ஆசிரியர்
செ. ஜேம்ஸ் - தபால் ஊழியர்

தற்போது பணியிலுள்ளோர்

அ. ஜொயில்சன் - வைத்தியர் — தே. ஜெனிஸ்ரன் - வைத்தியர்
அ. பி. நோயல் - கிராம அலுவலர் — அ. றொபட் கெனடி - அதிபர்

## ஆசிரியர்கள்

| | | |
|---|---|---|
| சூ. செல்வரட்ணம் | லோ. ரூபரஞ்சிதமலர் | அ. அகஸ்ரின் |
| அ. கொண்சலஸ் | மை. நிஷாந்தினி | ஜெ. நிர்மலா |
| அ. மேரி ஜெனிற்றா | ச. கெலன்ராணி | அ. அஞ்சலா |
| அ. அமலகௌரி | அ. அருண்சியா | தா. கென்றிசன் |
| தே. றொக்ஷாந்தன் | லோ. வெனான்சியஸ் | மை. யூஜின் ராணி |

## தபால் ஊழியர்கள்

யே. அமலராணி — டோ. யேசுநேசன் — யே. அன்பரசன் — ச. லெபோன்ராஜ்

## அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்

தா. நிர்மல ரொபின்சன் — ஜெ. டெனிசியஸ்வாஸ் — எ. எமில்றொமியூலன்

## சமுர்த்தி அலுவலர்கள்

அ. பி. கிளாசன் — தா. லியோனஸ் — அ. அமல்ராஜ்

## தாதிய உத்தியோகத்தர்கள்

கொ. கொன்சி — அ. றுமினா — செ. உயிர்த்தராசாத்தி
யே. லூர்த்துமேரி — ரா. ரோகினி

## சிவில் பாதுகாப்பு திணைக்கள ஊழியர்கள்

ப. டினேஸ் பெனாண்டோ — வே. சிங்கராயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானுயர எழுந்து நிற்கும் புனித செபமாலை அன்னையின் ஆலய சிறப்புப் பார்வை

வந்தோர்க்கு அருளை அள்ளி வழங்கும் சிறப்போடு சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் செபமாலை அன்னையின் ஆலய திறப்புவிழா சிறப்பிதழில் ஆலய வரலாறு பற்றி நோக்குகையில் எமது இரணைதீவை பூர்வீகமாகக் கொண்ட மக்கள் இரணதீவிலிருந்து 1992.08.12 ல் இடம்பெயர்ந்து இப்பகுதியில் குடியேறியபோது, எமது பாதுகாவலியாம் புனித செபமாலை அன்னைக்கு ஓர் ஆலயம் அமைக்க வேண்டும் என எண்ணி முதன் முதலில், இளைப்பாறிய அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தலைமையில் தற்போதைய பியன் உற்பத்தி நிலையம் அமைந்திருக்கும் காணியில் "30x15" விஸ்தீரணம் கொண்ட தூண் களாலும் ஓடுகளாலும் வேயப்பட்ட சிறிய ஆலயம் அமைக்கப்பட்டது.

இக்காலத்தில் அன்னையின் திருச்சொரூபம் இரணைதீவிலிருந்து எமது பங்கின் துணை ஆலயமான வலைப்பாடு புனித அன்னாள் ஆலயத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் அங்கிருந்து அருட்தந்தை X. கருணாரட்ணம் அடிகளாரின் தலைமையில் 06.10.1992 நடைபவனியாக திருச்செபமாலை ஓதி இங்கு கொண்டுவரப்பட்டு, திருவிழா முதன்முதலாக 07.10.1992 அன்று கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இக்காணிப்பகுதி மழைகாலத்தில் நீர்தேங்கி நின்று இடர்பாடுகளை சந்தித்தமையால் மற்றுமொரு இடம் தெரிவுசெய்ய வேண்டிய நிலை எம்மவருக்கு ஏற்பட்டது. எனவேதான் உயர்பிட்டி நிலம் தேடி தற்போதைய பரந்து விரிந்த உயர்ந்த காணி தெரிவு செய்யப்பட்டது. இக்காணியிலேயே இரண்டாவது ஆலயம் தற்போதைய மின்பிறப்பாக்கி இருக்கும் இடத்தில் 1993 இல் "80x25" விஸ்தீரணம் கொண்ட அமைக்கப்பட்டது. இருந்தாலும் வேயப்பட்ட கூரையும், தடிகளும் நீண்ட காலத்திற்கு நிலைக்காததன் காரணமாக மூன்றாவதாக நிரந்தரமான ஆலயம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் எம்மவர் மனங்களைத் தூண்டிக் கொண்டே இருந்தது. அவ்வேளையில் தான் ஆலய திருத்த வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது திரு. அ.ஜெயசீலன் அவர்கள் கூரையில் இருந்து விழுந்தும் ஒரு வித உடற்பாதிப்பும் இல்லாமல் அன்னையால் காப்பாற்றப்பட்டதும் அன்னையின் அற்புதமே. அன்றைய பங்குத்தந்தை அருட்பணி ஞானரட்ணம் அவர்களின் ஆலோசனையின் பேரில் எமது கிராம மக்கள் முருங்கன் பகுதியில் காணப்பட்ட இரும்புத் தூண்களைக் கொண்டு வருவதற்காக ஆண்களை அழைத்தபோது எவருமே மறுப்புத்தெரிவிக்காமல் இரண்டு வாரங்கள் அந்த பகுதியில் இருந்து தூண்களை தங்கள் தோள்களில் சுமந்து சரியான வாகன வசதி எதுவுமற்ற காலம் ஆகையால் நீண்ட தூரம் சுமந்து ஒருவாறு எமது கிராமத்திற்கு கொண்டுவந்து சேர்த்தார்கள். அத்தோடு குடும்பங்களில் போதிய வருமானமற்ற காலமது. நாட்டில் எங்கு பார்க்கிலும் போரின் வடுக்கள், பொருளாதார மந்தநிலை, உணவு பற்றாக்குறை, சீரான தொழில் முயற்சியற்ற நிலையிலும் அன்னைமீது கொண்ட ஆவலால் இரும்புத்தூண்கள் கொண்டுவந்து 1995 இல் "100x28" விஸ்தீரணம் கொண்டதாக அமைத்தனர். இதற்காக இரணைதீவில் இருந்து எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது கட்டடங்களில் இருந்த ஓடுகளையும் சிலாகைகளையும் கழற்றி வள்ளங்கள் படகுகளில் கொண்டுவந்து சேர்த்தனர். அதுவும் வெளியிணைப்பு இயந்திரங்கள் பெருமளவில் காணப்படாத காலம் அது. பருவகால காற்றை நம்பி வள்ளங்களில் கொண்டு வந்து சேர்த்து ஊரிலுள்ள தச்சன், மேசன்மார்களின் உதவியோடு இரவு பகல் பாராமல் மூன்றாவது ஆலயத்தையும் அமைத்தார்கள். சிறிய அரைச்சுவர் கட்டையும் கட்டி மக்களின் தொகையை ஓரளவு உள்ளடக்கி கொள்ளக்கூடியதாக கொங்கிறீட் தளம் போடாமல் அன்றைய வசதிக்கேற்ற வகையில் அமைத்துக் கொண்டார்கள். அவ்வேளைகளில்தான் கிராமக் கட்டுருவாக்கம் இடம்பெற்றுக் கொண்டிருந்தது. தங்கள் குடும்பங்களை ஓரளவு திருப்தியுடன் குடிசைகளில் தங்க வைத்தாலும் கிராமத்திற்கு தேவையான குடிநீர், சுகாதாரம், கல்வி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய தேவை அன்றைய எமது கிராம முன்னோடிகளிடம் பாரிய பொறுப்பாக கையளிக்கப்பட்டது. இந்தவேளையில் தான் இதற்காக எமது கிராம மகனாகிய செ.மரிய செல்வக்குமார் குடிநீர்க் கிணறு வெட்டும் பணியின்போது மண் இடிந்து விழுந்து தனது உயிரைத் தியாகம் செய்ததும் இன்றும் எமது கண்களில் நிற்கின்றது. இவ்வாறாக கிராம உருவாக்கத்தில் சிறப்பாக முன்னின்று உழைத்தவர்களை மறந்துவிட முடியாது. இருந்தாலும், அன்னையின் ஆசீர்வாதங்களைத் தொடர்ந்து அனுபவித்தாலும், அற்புதங்களை பெற்றுக் கொண்டாலும் அன்னையை உரிய சிம்மாசனத்தில் ஏற்றி அதிலிருந்து அவள் அருள் தரவேண்டும் என்ற பற்றும் தீராத ஆசையும் எம் மக்கள் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. எனவேதான் எம் கிராமம் தேடி எமது மறைமாவட்ட தற்போதைய ஓய்வு நிலை ஆயர் அவர்கள் வருவதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வேளையில் எமது கிராம முன்னோடிகள் எமது அன்னைக்கு நிரந்தர ஆலயம் அமைக்க வேண்டுமென்ற தங்களுடைய ஆசையையும் பரிந்துரையையும் முன்வைத்தனர். பின்பு அதற்கான அனுமதியும் ஆசீரும் கிடைக்கப்பெற்றது.

இதன் பயனாக அன்றைய பங்குத்தந்தை அருட்பணி X.W ஜேம்ஸ் அடிகளார் எமது மக்களை கூட்டி கலந்துரையாடல்களை மேற்கொண்டு நிரந்தர ஆலயம் அமைக்கவும் கட்டுமானப்பணிகளை மேற்கொள்ளவும் நிதிகளை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை ஆராயவும் ஆலய பொதுக்கூட்டத்தைக் கூட்டி கலந்துரையாடினார். அவ்வேளையில் தான் மக்கள் தங்களது வறுமை தங்களது குடும்ப வருமானம், நாட்டின் அசாதாரண நிலை, பொருட்கள் தட்டுப்பாடு எதையுமே பொருட்படுத்தாது தங்களது உடல் உழைப்பையும், தங்களது வாழ்வாதார நாளாந்த உழைப்பையுமே ஆலயத்திற்காக தர முன்வந்தார்கள். தங்களது குடும்ப செலவு, பிள்ளைகளின் கல்விச் செலவு, வாழ்வாதாரம் அனைத்துமே மூழ்கிப்போன நிலையில் இருந்ததுமட்டுமன்றி, ஆலய கட்டுமான பணிக்கென எதுவிதமான பெரியதொகை நிதிகளும் ஆலய சபையிடம் இல்லாத நிலையில் நிதியை எங்கிருந்து திரட்டுவது தொடர்பான சலனங்கள் அனைவர் மனதில் ஓடினாலும் அன்னை, திடமும் நம்பிக்கையும் தந்து நிதி மூலங்களை ஆலோசிக்க செய்தாள். இதன் விளைவாக எமது முன்னோர்கள் ஆரம்பத்தில் எமது கிராம பொதுத்தேவைகளை நிறைவேற்றுவற்காக ஒன்றாக கூடி அதாவது தங்களிடமுள்ள தொழில்களை குறிப்பாக அடையல்வலை, சிறகுவலை, கரைவலை, அட்டை குளித்தல் போன்ற தொழில்களை கூட்டாக செய்து அதன் மூலம் வருகின்ற நிதி அனைத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலுக்காக சேர்ப்பது என்றும், மற்றையது எதிர்பாராத வேளையில் எதிர்பாராத நாளில் முன்னறிவிப்பு எதுவுமின்றி வெள்ளைக்கொடி கடற்கரையில் நாட்டுதல், இந்த நாளில் வருகின்ற தொழில் அனைத்தையும் கோயிலுக்கு கொடுப்பது மட்டுமன்றி தொழில் செலவுகளைக் கூட தொழிலாளர்களே பார்த்துகொண்டார்கள். இந்த நாட்களில் வீடுகளுக்கு எந்த நிதியும் செல்லாது.அன்றைய குடும்ப செலவு கேள்விக்குறிதான், காலை எழுந்து ஒருநாள் பொழுதை கழிப்பதே பெரும்பாடாக இருக்கின்ற அந்த வேளையிலும் ஆலயத்திற்காக அன்றைய நாள் வருமானத்தையும் அளித்துவிட்டு வீடு திரும்பும் கணவர்களையும், இளையோர்களையும் நினைக்கும்போது இன்றும் மன பாரத்தை தருகின்றது. மற்றுமொரு நிதி மூலமாக எமது ஆலய சபையின் பிரதிநிதிகள், எமது தொழிலாளர்கள் எங்கு தொழில் கொண்டுபோய் தொழில் கொடுக்கின்றார்களோ அங்கே கிலோவிற்கு 10 ரூபா வீதம் ஆலயத்திற்கு தரவேண்டும் என்ற வேண்டுகோளையும் ஏற்று சிட்டை போட்டு நிதி சேகரிப்பு வழிகளிலும் ஈடுபடச்செய்தனர். உண்மையில் அந்த நேரத்தில் இருந்த ஆலய சபையை பாராட்டியே ஆகவேண்டும், மிகவும் உத்வேகமாக மக்களோடு உரையாடி இருந்த நிதி மூலங்களை எல்லாம் சிறப்பாக கையாண்டு நிதியைத் திரட்டி முதற்கட்ட வேலையாக அத்திவாரம் கட்டும்பணி ஆரம்பமாகியது. இந்த காலப்பகுதியில் சீமெந்து ஒருபைக்கற்று ரூபா 4000 – 5000 வரைக்கும் சென்றது குறிப்பிடத்தக்கது. இவ்வாறாக நிதி பற்றாக்குறை, வளப்பற்றாக்குறை இருந்த போதிலும் 2003.10.24 ம் திகதி அன்னையின் ஆசீர்வாதம் கிட்ட அருட்தந்தை X.W.ஜேம்ஸ் தலைமையில் தற்போதைய ஓய்வுநிலை ஆயர் பேரருள்திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் அனுமதியுடன் அடிக்கல் நாட்டப்பட்டது. அன்று முதலே பத்து நாட்களாக அத்திவாரம் வெட்டும் பணிகளை எமது மக்கள் உடல் உழைப்பால் வெட்டி முடித்தனர்.

இவ்வாறாக பலரின் வியர்வைத்துளிகள் கலவைக்கு தண்ணீராக கலக்க அத்திவாரமிடும் பணிகள் நிறைவுபெய்தின. மேலும் நாட்டிலே ஆழிப்பேரலை அடுத்த ஆண்டு நிலை கொள்ள உயர் நிலம் தேடி எமது மக்கள் எமது அன்னையின் அரவணைப்பும் தேடி ஆலயத்தில் தஞ்சம் புகுந்தனர். அங்கேயே சில நாட்கள் தங்கியிருந்து ஆலய கட்டுமான பணியின் சில வேலைகளை மக்கள் தாமாக முன்வந்து செய்தனர். அத்தோடு இந்த காலப்பகுதியில் சுனாமி நிவாரண பொதிகளும், நிவாரண நிதிகளும் எம்மக்களுக்கு கிடைக்க அதிலும் ஒரு பகுதிகளை எமது ஆலய கட்டுமான பணிக்கென அளிக்க துரித வேகத்தில் வேலைகள் ஆரம்பமாகின. இவை நடைபெற்றுக்கொண்டிருக்க எமது பங்குத்தந்தையும் தனது பணிகளை நிறைவு செய்து கொண்டு மாற்றலாகி செல்ல புதிதாக அருட்தந்தை சாள்ஸ் யஸ்ரின்அடிகளாரும் எமது பங்கிற்கு வருகை தந்தார். இவ்வாறாக காலச்சக்கரம் சுற்றிச்சுழல ஆலய கட்டுமான பணியும் புதுப்புது அத்தியாயங்களை பெற்று சிறிது சிறிதாக எழ ஆரம்பித்தது. அந்த வகையில் பக்க சுவர்களும் கூரை வரைக்குமான சுவர்களும் எழ ஆரம்பித்தன. மேலும் மக்களின் தொகையையும் எதிர்கால தேவையையும் கருத்திற் கொண்டு கோயிலின் அளவிலும் மாற்றம் செய்ய வேண்டிய தேவையை உணர்ந்த மக்கள் இரண்டு பக்க அளவுகளிலும் மேலும் பத்து அடி அகலமாக்கப்பட்டு தொடர்ந்து கட்டுமான வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வேளையில்தான் நாட்டின் போர் உச்சநிலை அடைந்து அனைவருமே கிராமத்தை விட்டு இடம்பெயர்ந்து செல்லவேண்டிய நிலை ஏற்பட்டது. தொடங்கிய வேலைகள் அனைத்தும் அவ்வாறே விட்டு விட்டு கிராமத்தையும் விட்டு புறப்பட்டனர். அவ்வாறு சென்ற மக்கள் முள்ளிவாய்க்கால் வரை சென்று நலன்புரி முகாம்களில் தஞ்சம் புகுந்து, மீண்டுமாக 2009.11.26 கிராமத்திற்கு மீளக்குடியமர்த்தப்பட்டனர். வந்த அனைவருக்கும் ஏக்கம் புடைசூழ வந்த வேகத்தில் கால்கள் நகர்ந்த ஒரே இடம் ஆலயமாகவே இருந்தது. ஏங்கும் விழிகளோடும், மனதில் வடுக்களோடும் ஊரை நேசித்த, ஆலயம்நேசித்த சிலரை இழந்து, ஆலயத்தை பார்த்த போது அனைவருக்கும் அதிசயங்கள் காத்திருந்தன. அத்தனை குண்டு வீச்சுக்கள், ஏறிகணை தாக்குதல்கள், விமான தாக்குதல்கள் மத்தியிலும் நடைமுறை ஆலயத்தில் அன்னையின் சொரூபம் மற்றும் ஏனையசொரூபங்களுடன் புதிய ஆலயத்தின் பகுதிகள் ஒன்றுக்குமே எந்த விதமான பாதிப்பும் இல்லாமல் வைத்த வைத்த இடத்திலே எல்லாமே அவ்வாறே இருப்பதை கண்டுகொண்ட மக்கள் ஆனந்த கண்ணீருடன் அன்னையின் அற்புதத்தையும் கண்டு வியப்பில் ஆழ்ந்தார்கள். போரின் வடு ஒருபுறம் இருக்க இவ் அற்புதங்கள் மேலும் வலுச்சேர்க்க 2010ல்அருட்தந்தை மரியதாஸ் அடிகளார் பங்குத்தந்தையாக பொறுப்பெடுத்துக்கொண்டார். அவ்வேளையில் ஆலய கட்டுமான பணியில் மக்கள் அதீத ஆர்வம் கொண்டு ஏனைய வேலைகளும் தொடர்ந்து முடிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலெழ, புது பங்குத்தந்தையின் வழிகாட்டலும் ஆலோசனையும் கிடைக்கப்பெற ஆலய கட்டுமான சபையையும் உருவாக்கி ஆலய கட்டுமான பணியில் மேலும் வீறுநடைபோட ஆரம்பித்தது.

அந்த வகையில் ஆலயத்தில் மேலும் இரண்டு பக்கமும் பத்து அடிகள் வெளிவிறாந்தையும் அமைக்கப்பட்டதுடன் இடப்பெயர்வுக்கு முன்னிருந்த மேல் கூரையின் வடிவமைப்பில் மாற்றம் செய்ய எண்ணி ஆலயத்தின் சில பகுதிகள் அகற்றப்பட்டு மேல் கூரை வேலைகளும் நிறைவுபெற்றன. நிதி நிலவரங்களை கருத்தில் கொண்டு எம்மவர்களே கூரை வேலையையும் பொறுப்பெடுத்து சிறப்பாக செய்து முடித்தனர். அத்தோடு இக்காலப் பகுதியில் தான் எமது கிராமத்தின் முதுகெலும்பாகிய கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கம் புதிய சிந்தனைகளோடு உருவெடுத்தது. அனைத்து தொழிலாளர்களையும் தனி வியாபாரிகளிடமிருந்து மீட்டு அனைவரும் கடல் உணவுகளை சங்கத்திற்கு தர வேண்டும் என எண்ணி எமது தொழிலாளர்களை ஒன்று சேர்த்து ஒற்றுமையாக ஆலய கட்டுமான பணியை கருத்தில் கொண்டு தொழில் வருமானம் ஈட்டும் பணியில் துரித வேகத்தை காட்டவும் அதன் பயனாக ஆலய கட்டுமான பணிக்கென பல்வேறுபட்ட நிதி சேகரிப்பு மூலங்களும் அதிகரிக்கப்பட்டன. சங்கம் ஆரம்பித்து ஆலய கட்டுமானப்பணி, வாழ்வியல் நிலை போன்றவற்றிற்கு முதல் வருடத்திலேயே மிகப்பெரிய வெற்றியை அன்றைய நிர்வாகம் செய்து காட்டியது. அதன் பயனாக பல மாற்றங்கள் கிராமத்திலும் வர ஆரம்பித்தன. அத்துடன் ஆலய கட்டுமானப் பணிக்கென மக்கள் தங்கள் வீடுகளில் உள்ள மரங்களைக்கூட தானமாக அளித்து கூரை மற்றும் கதவு, யன்னல் போன்றன செய்வதற்கும் கொடுத்து உதவினர். இன்னுமாக மக்கள் தங்கள் தங்க ஆபரணங்களையும் ஆலய கட்டுமானப் பணிக்கென முன்வந்து கொடுத்தனர். மிக விரைவாக ஆலய கட்டுமான பணிகள் முடிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடும் அன்னையின் தூண்டுதலுடனும் செயற்பட்டனர். இவ்வேளையில் தான் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய கட்டட சபையினர்



ஆலய அருட்பணிச்சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருக்குடும்ப பொது நிலையினர்



திருக்குடும்ப பொது நிலையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பாலர்த்துவசபை ஊக்குவிப்பாளர்கள்



மறையாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரியாயின்சேனை பாலகர் பிரசீடியம்



இளையோர் ஒன்றியத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பீடப்பணியாளர்கள்



பாடகர் குழாமினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருப்பண்டக் காப்பாளர்கள்


இறை இரக்க சபையினர்


முதியோர் சங்கத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலயம், பங்குமனை கட்டுமானத்தின் சில பதிவுகள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் இலங்கையில் கத்தோலிக்க மறைமாவட்ட ஆயர்கள் ஒன்பது பேர் கொண்ட குழு வருகை தந்து மிகப்பெரிய தியானம் இடம்பெற்று மக்கள் இறைவனின் ஆசீர்வாதங்களையும் அற்புதங்களையும் பெற்றுக்கொண்டனர். இவ்வாறாக காலம் உருண்டோட 2014 காலப்பகுதியில் அருட்தந்தை மாற்றலாகிச்செல்ல அருட்தந்தை ஆனந்தக்குமார் அடிகளார் எமது பங்கிற்கு வருகை தந்து தன்னுடைய கடமைகளை பொறுப்பெடுத்து கொண்டார். இவ்வேளையில் எமது கிராமத்திற்கென இந்தியன் வீட்டுத்திட்ட செயற்பாடுகள் நடைபெற்றன. எமது கிராம மக்கள் தங்கள் நிரந்தர வீடுகளை அமைக்கும் பணியில் ஆர்வம் காட்டினாலும் எமது கிராம அபிவிருத்திச்சங்க ஆலோசனையில் கட்டுமானப் பணிக்கென தங்களுடைய நிதி உதவிகளையும் பொருள் உதவிகளையும் மனப்பூர்வமாக வழங்கவும் செய்தனர். இவ்வேளையில் ஆலயத்திற்கு கொங்கிறீட் தளங்கள் போடும் வேலைப்பாடுகள் இடம்பெற்றன. அத்தோடு ஒரு குடும்பத்திற்கு ரூபா 30000 நிதிப்பங்களிப்பு செய்ய வேண்டும் என்ற ஆலோசனை முன்வைக்க அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டு இன்றும் அது நடைமுறையில் உள்ளது. அநேகமான மக்கள் அந்நிதியையும் செலுத்த தவறவில்லை. இவ்வேளையில் முன் போட்டிக்கோ (Portico) அமைக்கும் பணிகளும் ஆரம்பிக்கப்பட்டன.

ஆலய கட்டுமான சபையையும் மிகவும் வலுப்பெற்று மக்கள் அனைவரையும் ஒன்று கூட்டி ஆண்கள் பெண்கள் அனைவரும் முன்வந்து முன் போட்டிக்கோவிற்கு மேல் தளம் போடும் வேலை மிகவும் கடினமானாலும் அதையும் எமது மக்களே உடல் உழைப்பால் செய்துமுடித்தனர். மனத்திடனும் உறுதியும் கொண்டவர்களாய் ஒற்றுமையாக மிகவும் கடினப்பட்டு எமது ஊரின் வழிகாட்டிகளின் உதவியோடும் அன்னையின் ஆசீரோடும் அவ்வேலையும் நிறைவு பெற்றது. மற்றும் இக்காலப்பகுதியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளுடன் எமது ஆலயத்திற்கு மலசலகூடங்களும் குடிநீர் தொட்டி என்பனவும் அருட்தந்தையின் வழிகாட்டலில் எமக்கு கிடைக்கப்பெற்றது.

இவ்வாறாக சிறப்பான பணிகளோடு அருட்தந்தை மாற்றலாக, எமது கிராமத்திற்கு அருள்கிடைத்தாற்போல் அருட்தந்தை அருட்செல்வன் அடிகளார் எமது பங்கை பொறுப்பெடுத்துக்கொண்டார். மிகவும் சிறப்பாகவும் துரிதமாகவும் கட்டுமான பணி நடைபெறவேண்டும் என்பதில் கருத்தாய் இருந்த மக்களின் ஆர்வம் கண்டு ஒரு கணம் வியந்தே போனார். இவ்வாறாக வேலைகள் தாமதமடைவதை அவதானித்த அருட்தந்தை, நிதி நிலவரங்களை கையாளும் செயற்பாட்டில் சற்று தளர்வைத் தந்து செய்துமுடிக்க வேண்டிய வேலைகளை பட்டியல் படுத்தி எமது சங்க நிதி மூலங்களை சரிவர பயன்படுத்த எண்ணி, சில வேலைகளுக்கான முன்தொகை மதிப்பீட்டை பெற்று சில வேலைகளை பொறுப்பெடுத்து செய்யவும் அனுமதி அளித்தார். அந்த வகையில் டோம் (Dome) மற்றும் இரண்டு மணிக்கோபுரங்கள் அமைத்தல் போன்றவற்றை ஆலய அருட்பணி சபையும் கட்டுமான சபையும் கடற்தொழில் சங்கமும் மக்களின் பங்களிப்போடு செய்து முடித்தனர். அதுமட்டுமல்லாது எமது ஆலய வளாகத்துக்குள் பங்கு பணிமனை அமைய வேண்டும் என்ற மக்களின் நீண்ட நாள் கனவிற்கு தீனி போட எண்ணி ஆயரின் அனுமதியோடு 70'x40' அடி விஸ்தீரணம் கொண்ட பங்குமனை அமைக்க திட்டமிட்டு அத்திவாரமும் இடப்பட்டது. மக்கள்தாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே இழந்திருகின்ற தனியான பங்கு கிடைக்கவேண்டும் என்பதில் கருத்தாய் இருந்து அதை பெறவேண்டும் என்பதாலும் காலாகாலம் பங்குத்தந்தையர்கள் அருகிருந்து வழிநடத்தல் பெற்ற மக்கள் அது கிடைக்காததையிட்டு குடியேறிய காலம் தொட்டு ஏங்கும் மனத்தோடும் பரிதவிப்போடும் இருந்ததால் இவ்வாறாக பங்குமனை அமைக்க தூய ஆவியின் தூண்டுதல் மேலிடவும் மிக வேகமாக மக்கள் ஆர்வத்தோடு தங்கள் பங்களிப்பையும் வழங்க தவறவில்லை. இதனால் சிறப்பான அழகான பங்குப்பணிமனை அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆலய திருப்பண்டப் பொருட்கள் பாதுகாப்பாக ஒழுங்காக இருக்க வேண்டும் என எண்ணி திருப்பண்டக்காப்பகம் சிறப்பாக அமைக்கப்பட்டது. அதுவும் எமது கிராம மேசன், தச்சன் போன்றோரை பயன்படுத்தி அவர்களின் உதவிகளோடும் மக்களின் ஒத்துழைப்போடும் செய்து முடிக்கப்பட்டது. மேலுமாக சமகால பகுதியில்தான் எமது ஒற்றுமையை உலகறியச்செய்ய மிகவும் முக்கியமான சம்பவம் நிகழ்ந்தேறியது. இடப்பெயர்வோடு எமது பூர்வீக நிலமான இரணைதீவு கடற்படையினரின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இதனால் எமது தொழிலாளர்கள் மிகவும் கெடுபிடிகளுக்கு உள்ளாகியிருந்ததால் இதனை மீட்பு செய்ய வேண்டும் என்ற போராட்டம் பலவடிவங்களில் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. இறுதியாக வீதியில் இறங்கி வழிமறிப்பு போராட்டங்கள் என வீரியமடைந்த வேளையில் கூட எமது மக்களோடு மக்களாக அருட்தந்தை அவர்களும் கலந்துகொண்டார். அத்தோடு மக்கள் தற்துணிவாக தங்கள் படகுகளுடன் வெள்ளைக்கொடி கொண்டு இரணைதீவை மீட்கவும் தங்கள் காணியில் குடியேறவும் புறப்பட்டனர். ஈற்றில் இரணைதீவு போராட்டம் யாரும் எதிர்பார்க்காத வகையில் வெற்றியையும் பெற்றுத்தந்தது. இத்தோடு எமது பழம்பெரும் ஆலயமும் ஆயர் தலைமையில் ஆசீர்வதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. மேலுமாக இக்காலப்பகுதியிலேயே எமது பங்கு மகன் அருட்தந்தை கீ.அன்ரன் கொன்சாலஸ் அடிகளார் அவர்களுடைய குருப்பட்ட அபிஷேகம் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயர் தலைமையில் எமது பழம்பெரும் கிறிஸ்தவ கிராமமாம் எமது ஆலயத்தில் இடம்பெற்றது. இதன்போதே ஆலயத்தின் முன்மேடை 90'x20' அளவு கொண்டதாக அமைக்கப்பட்டது. இவ்வாறாக மக்களோடு மக்களாக இருந்து பல விடுதலைகளுக்கு வழியமைத்து மக்களை ஏங்க வைத்துவிட்டு அருட்தந்தை மாற்றலாகி சென்றார். 2020.01.20 திகதி அருட்தந்தையின் சேவை மற்றைய பங்கிற்கும் தேவை என்பதை உணர்ந்த இறைவன் அவரை மாற்றம் செய்ய இவ்வேளையில்த்தான் அருட்தந்தை பத்திநாதர் அடிகளார் எமது பங்கிற்கு வருகை தந்தார். மிகுந்த உற்சாகம், சுறுசுறுப்பும் கொண்ட அவர் ஆலய வேலைகள் நிறைவு கட்டத்தை அறிந்து முடிக்க வேண்டிய ஏனைய சிறுசிறு வேலைகளும் மிகவும் வேகமாக முடிக்க எண்ணினார். பணிக்காலத்தில் ஆலயம் திறக்கப்படவேண்டும் என ஆவியின் தூண்டுதலால் மிகவும் சாதுர் யமாக மக்களை ஒன்று திரட்டி மக்களின் வாழ்வியல் நிலையில் குறிப்பாக பொருளாதார நிலையில் ஏற்றம் காணப்படுவதை உணர்ந்த அவர் மக்களிடம் அன்பளிப்பு கோரிக்கைகளை வலயம் வலயமாக கோரி, முடிக்கப்படாமல் இருக்கின்ற ஏனைய வேலைகளையும் முன்வந்து பொறுப்பெடுக்கக்கோரி நிதி உதவிகளைப் பெறுவதற்கு வழிசமைத்து கொடுத்தார். இவ்வாறாக எமது கிராம மக்கள் பலரும் தாங்கள் பொறுப்பெடுத்து அன்பளிப்பு பணங்களையும் வேலைகளையும் பொறுப்பாக செய்து முடித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்காலத்தில் கொரோனா நாட்டை ஆக்கிரமித்து இருந்த வேளையில் எமது இரணைதீவு மரணித்தவர்களை புதைப்பதற்கான இடமாக தெரிவு செய்யப்பட்டிருந்தது. இதனை தடுத்து நிறுத்தும் நோக்கோடு மக்களோடு மக்களாக இரணைதீவில் தங்கியிருந்து புதைகுழி எதிர்ப்புப்போராட்டத்தை நடாத்தி வெற்றி கண்டது குறிப்பிடத்தக்கது. இந்த செயற்பாட்டில் கிராம மட்ட பொது அமைப்புக்கள் மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு செயற்பட்டனர். இக்காலத்தில் அருட்தந்தைக்கு திடீர் மாற்றம் இடம்பெற்றது. அது அவ்வாறு இருக்க மக்களும் சோராமல் தங்களது விசுவாசத்தையும் கைவிடாமல் செயற்பட்டனர். குறுகிய காலமானாலும் திறம்பட பல ஆலய வேலைகளை செய்து முடித்த பெருமை இவரையே சாரும். அந்த அளவிற்கு மக்களோடு ஒன்றாக நெருங்கி பழகிக்கொண்ட அவர், சாதுவான முறையில் வேலைகளை செய்து முடிக்கும் திறன் கொண்டவர் என்றால் அது மிகையாகாது. இவ்வாறாக அருட்தந்தை மாற்றலாக புதிய அருட்தந்தை எமில்போல் அடிகளாரும் தற்போது பொறுப்பெடுத்து ஆலய கட்டுமான பணியில் அதீத வேகத்தை காண்பிக்க தவறவில்லை. ஆலய அருட்பணிச்சபை, ஆலய கட்டுமான சபை, கடற்றொழில் சங்கம் மற்றும் பொது அமைப்புக்களையும் மக்களையும் அடிக்கடி சந்தித்து கலந்துரையாடி ஆலய திறப்புவிழாவை செய்ய வேண்டும் என்கின்ற தீராத வேட்கைக்கு உரமூட்டி வந்தார். இன்று இந்த ஆலயம் நீட்டி நிமிர்ந்து வானுயர எழுந்து ஊரின் மத்தியில் சிம்மாசனத்தில் அன்னையை வைத்து அழகு பார்க்க வேண்டுமென்ற எமது ஊரவரின் கனவை நனவாக்கி பெருமிதம் அடைகின்றது. இந்த வேளையில் இந்த கனவை கண்டு தற்போது அதை கண்குளிர காணமுடியாமல் போன எமது ஊரின் தியாகிகள் அத்தனை பேருக்கும் இந்த ஆலயம் சமர்ப்பணம். தீராத ஆசையும் கடின உழைப்பும் உள்ளத்தில் நேர்மையும் கொண்டு செயற்பட்டால் கனவு ஒரு நாள் நிச்சயம் பலிக்கும். இவ்வாறாக ஒட்டுமொத்தமாக எமது கிராமத்தை சேர்ந்த அத்தனை பேருடைய வியர்வை, தியாகம், அர்ப்பணிப்பு, வலிகள், கண்ணீர்கள் போன்றன கலந்து முழுக்க முழுக்க கிராம மக்களின் பங்களிப்போடு மிகப்பிரமாண்டமான ஆலயம் எமது அன்னைக்கு கட்டியெழுப்பியது மிக்க மகிழ்ச்சி. "கனவு தினம்தோறும் காண்: அது ஒரு நாள் நிறைவேறும்" என்பதே நிதர்சனம்.

**மரியே வாழ்க**

தொகுப்பு

**திரு. ஜோண் கென்னடி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவின் பூர்வீக வரலாறு...

பூநகரிப் பிரதேசத்தில் மிக நீண்ட காலமாக பல நூற்றாண்டுகளுக்கு மேலாக மக்கள் வாழ்ந்த அழகிய தீவு இரணைதீவு ஆகும். இத்தீவானது மிக பழமையான நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். இலங்கைத்தீவின் தீவுக் கூட்டங்களில் வடமேற்குத் திசையில் மன்னார்த்தீவிற்கும் யாழ் குடாநாட்டிற்கும் இடையில் இரட்டைத்தீவாக மிக முக்கிய கேந்திர நிலையமாக அமைந்துள்ளது. இத்தீவு 15 கீலோ மீற்றர் பரப்பளவு கொண்டதாகும். கடல்பயண மார்க்கமாக வலைப்பாட்டிலிருந்து 5.65 கடல்மைல்களும் நாச்சிக்குடாவிலிருந்து 12 கடல்மைல் தூரத்திலும் அமைந்துள்ளது. இது கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவின் KN/77 எனும் தனிக்கிராம அலுவலர் பிரிவைக் கொண்டதாகும். வரலாறு ஒரு ஆழமாக, அகலமாக, நீளமாக நகர்ந்து கொண்டிருக்கும் ஆறு போன்றது. வரலாற்றை அறியாத நாடு அடிமையாகின்றதோடு வரலாற்றை கற்காத மக்கள் உணர்வற்றவர்களாகவும் வரலாற்றை கட்டிக்காக்காத மக்கள் சிதறுண்டும் போகின்றனர்.

இந்திய கன்னியாகுமரி தொடக்கம் இராமநாதபுரம், தூத்துக்குடி வரையுள்ள கடலர் அனைவரும் இந்தியாவிற்கும் ஈழத்திற்கும் நடுவில் கடலில் உள்ளோர் அனைவரும் பரவர் என அழைக்கப்படுகின்றார்கள். பரவர் என்றால் கடலர், பரவை என்றால் கடல். இவர்கள் முத்துக்குளிப்பதிலும் சங்குகுளிப்பதிலும் பேர்போனவர்கள் என அகநானூற்றில் குறிப்பிடப் பட்டுள்ளது. இவர்கள் பாண்டிய இராச்சியத்தின் அரச வாரிசுகள். கிமு 1113ல் இஸ்லாமியர்களுக்கும் பாண்டிய இராச்சிய பரவருக்கும் இடையில் உள்ள போட்டிகளாலும் தொல்லைகளாலும் பாதுகாப்பு காரணங்களாலும் பொருளாதார போர்களினாலும் உந்தப்பட்ட மக்கள் மறைமாற்றங்கள் செய்யபட்டனர். ஆரியப்படையெடுப்பின் பின்னர் ஆண்டகுலமான 'குருகுல பாண்டிய பரவர்குலம்' இந்தியாவிலிருந்து தெற்கு நோக்கி நகர்ந்து நீர் நில வளம் பொருந்தியதும் மீன்வளமுள்ள பரவைக்கடலுடைய இலங்கையின் மேற்கு கரையோரத்திற்கு வந்தடைந்தனர். இக்குடியேற்றத்தில் மாத்தறை, நீர்கொழும்பு, முன்னங்கரை, கடற்கரைத்தெரு, மணற்சேனை, சிலாபம், புத்தளம், மன்னார், சிலாபத்துறை, நாச்சிக்குடா, இரணைதீவு போன்றவை அடங்கும் என்பது உறுதியாகின்றது. (op unit P P . 227) இவ்விடங்களில் வசிக்கும் மக்கள் பேச்சுவழக்கிலும் மரபு பழக்கவழக்கங்களிலும் செயற்பாட்டு வழக்கங்களிலும் மதவழிபாட்டு முறைகளிலும் வேறுபாடின்றி ஒத்திருப்பதை இன்றும் அவதானிக்கலாம்.

கி.மு 6000 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த ஆழிப்பேரலையினால் குமரிக்கண்டமாக இருந்த பெருநிலப்பரப்பு இந்தியாவாகவும் இலங்கை போன்ற நாடுகள் பல தீவுகளாகவும் பிரிந்து சென்றது. இதில் தூத்துக்குடி, மணற்பாடு இலங்கையின் மேற்கு கரையோர பகுதியிலும் நூற்றுக்கு மேற்பட்ட தீவுகளிலும் வாழும் மக்கள் ஆதி அரச பரவ பரம்பரையென்றும் அருட்பணி ஹென்றி ஹேறஸ் தமது ஆய்வுகளில் ஆதாரங்களோடு குறிப்பிடுகின்றார். வரலாற்று தொல்லியல் நிபுணரான இவர் பண்டைய 'மொகஞ்சோதறா' மக்கள் பற்றிய ஆய்வில் கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவை ஏற்படுத்துறார். சிந்துவெளி நாகரிகத்தின் எழுத்துக்களில் பரவர்களுக்கும் சந்திரனுக்குமிடையேயான உறவிற்கு சான்றுபகிர்கின்றார். பரவர்கள் பெருகிய பொழுது 'பகல் பரவர்' (பகலவன்-சூரியன்) 'நிலாப்பரவர்' (சந்திரப்பரவர்) என இருபிரிவினரும் வெவ்வேறு அடையாயங்களுடன் காணப்பட்டனர். இதன் காரணமாக பெயர்களில் மதிகுலம் சார்ந்த பெயர்களான சந்திரன், சந்திரா, மதியர், மதிமகன், வளர்மதி, நிலா போன்றவை இன்றும் எம்மவர் மத்தியில் வழங்கப்பட்டு வரும் பெயர்களாக உள்ளன.

மீனும் மதியும் சூரியனும் அடங்கிய கொடிகள் திருச்சிலைகளை சுமந்து செல்லும் தேர்களில் பொறித்தும் கல்லறைகளில் தமது பரவ பாரம்பரியத்தை குறிக்கும் முத்திரைகளை பொறித்து வைப்பதையும் வழக்கமாக கொண்டிருந்தனர். பல நூற்றாண்டுகள் கடந்த பின்பும் இன்றும் எமது ஆலயத்திருவிழாக்களில் குறித்த கொடிகளை திருச்சொருப பவனிகளில் ஏந்திச் செல்வது கடைப்பிடிக்கப் படுவது இரணைதீவு வரலாற்றின் தொன்மையை குறித்து நிற்கின்றது.

போர்த்துக்கேயர் காலத்தில் இருந்து யாழ்ப்பாண இராச்சியத்தில் அரசியல் வரலாற்றை நோக்கும் போது கி.பி 1200-1500 காலப் பகுதியில் இலங்கையில் ஐந்து வன்னிச்சிற்றரசர்கள் இருந்ததாகவும் அவற்றில் ஏழு வன்னிப்பற்றுக்கள் இருந்ததாகவும் லூயிஸ் என்பவர் தமது நூலில் குறிப்பிடுகின்றார். வான் கடவுன்ஸ் என்பவர் தமது நூலில் ஒல்லாந்தர் காலத்தில் நிர்வாக அலகாக அமைந்த வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு மாகாணங்களுடன் பதின்மூன்று தீவுகளும் யாழ்ப்பாண பட்டிணம் என அழைக்கப்படும் யாழ்பாணத் தீவகற்பமும் காணப்பட்டதாக கூறுகின்றார். இக் கூற்றை நிரூபிக்கும் வகையில் இரணைதீவு பிரித்தானிய ஆளுநரால் 1834 ல் வெளியிடப்பட்ட வர்த்தமானியில் இரணைதீவு கிராமம் பூநகரி பிரதானியின் ஆளுகைக்கு உட்பட்டதாக குறிப்பிடப்படுகின்றது.

இரணைதீவு வரலாறு மிகத் தொன்மை வாய்ந்தது என்பதை நிரூபிக்க இலங்கையில் தமிழர் எனும் நூலில் வன்னியின் எல்லைக் கிராமங்களில் வாழ்ந்த மக்கள் தொகைளை கணக்கிட்டு குறிப்பிட்டுள்ளனர். யாழ்ப்பாணக்குடா நாட்டு சனத்தொகைப் புள்ளி விபரம் 11.11.1745-28.02.1746 (ஒல்லாந்தர் ஆட்சிக்காலம்) வரை உள்ள காலப்பகுதியில் தீவுப் பகுதிகளில் வாழ்ந்த மக்கள் தொகையை குறிப்பிட்டுள்ளனர். இதில் இரணைதீவில் 170 பேர் வாழ்ந்துள்ளதாக குறிப்பிடப்படுகின்றது. (பக்- 232) ஆரம்பகாலத்தில் இத்தீவில் பொதுமக்கள் தங்கி வாழ்வதற்கு ஏற்ற வகையில் சூழல் இருந்தமையினால் இரணைதீவில் முதன் முதலில் போர்த்துக்கேயரே காலடி எடுத்து வைத்துள்ளதாக அறியமுடிகின்றது. போர்த்துக்கேயர் தமது ஆட்சிக்காலத்தில் (1505-1658) இலங்கையின் நிர்வாகப்பகுதிகளில் வரிகள் மூலம் வருமானம் பெறுவதற்காக வன்னியில் பெறப்பட்ட பொருட்களான யானைத்தந்தம் மரங்கள் போன்றவற்றை கடல் மார்க்கமாக பாய்கள் பொருத்தப்பட்ட மரக்கலங்களின் மூலம் எடுத்துச் சென்றனர். இதன் போது பருவகாற்று மாற்றங்களின் போது தங்கிச்செல்லக் கூடிய இடமாக இரணைதீவின் புவியியல் அமைவிடம் ஏதுவாக அமைந்தது. இதனாலேயே இந்தியவுடனான வணிகமார்க்கத்திற்கு போர்த்துக்கேயர், ஒல்லாந்தர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கிலேயர் கால ஆட்சிக்காலத்தில் இரணைதீவு முக்கிய கேந்திர மையமாக பயன்படுத்தியுள்ளமைக்கான சான்றுகள் காணப்படுகின்றது.

இவ்வாறு இரணைதீவில் காலடி பதித்த போர்த்துக்கேய கடற்படையினர் தலைமன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடைப்பட்ட கடற்பிரதேசத்தையும் கரையோரப் பிரதேசத்தையும் கண்கானிக்க இரணைதீவை மத்திய நிலையமாக பயன்படுத்தினர். பின்னர் ஒல்லாந்தருடைய ஆட்சிக்காலத்திலும் தொடர்ந்து கண்காணிப்பு மையமாகவும் பாதுகாப்பு கேந்திர நிலையமாக பயன் படுத்தியதற்கு 1750 ல் கட்டப்பட்ட ஒல்லாந்து வழிகாட்டி கோபுரம் சான்றாக அமைகின்றது. இதுவே கரையோரப்பகுதியில் கட்டப்பட்ட கோபுரங்களில் உயரமானதாகும். எமது முன்னோர்கள் கடல்வழிப் பிரயாணங்களுக்கும் தொழில்நடவடிக்கைகளுக்கும் வான் நட்சத்திரங்கள் கரையிலுள்ள காடுகளை அடையாளப்படுத்தினார்கள் (காட்டு மதி). போர்த்துகேயர் காலப்பகுதியில் 1533ல் கடல்வழிகாட்டிகளாகவும், கடலோடிகளாகவும் இருந்ததோடு. எமது பரவகுலத் தொழிலான கடற்றொழிலான கரைவலை, ஓலைவலை, களங்கட்டி சிறகுப்பாடு, திருக்கை வலை,சங்கு,முத்து,அட்டை குழித்தல் போன்ற பிரதான தொழில்களை செய்தும் வந்துள்ளனர்.

கி.பி 1542ல் புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் முத்துகடலோர தமது சீடர்களுடன் வந்து மறைமாற்ற பணியாற்றியபோது விசுவாசத்தில் ஊன்றி நிலைத்திருக்கும்படி செய்தார். இவர் தென்னிந்தியாவின் மேற்கு கரையோரங்களில் வாழ்ந்த மீனவ சமூகத்தின் மத்தியில் 16ம் நூற்றாண்டில் கத்தோலிக்க மதத்தை பரப்பும் நடவடிக்கையில் மிகத் தீவிரமாக ஈடுபட்டார். இதன் மூலம் கரையோர மீனவ சமூகத்தின் பலர் கத்தோலிக்க மதத்தை ஏற்றுக்கொண்டனர். மதம் மாறியோருக்கு திருமுழுக்கு வழங்கும் போது போர்த்துக்கேயர்களே ஞானப்பெற்றோர்களாக இருந்ததோடு தங்களது கிறிஸ்தவப் பெயர்களையே இவர்களுக்கு வைத்தனர். கத்தோலிக்க பரவர்களுக்கேயான குருசு, வாஸ், பறுனாந்து, கூஞ்ஞ, லெம்பட் போன்ற பெயர்கள் இன்றும் வழக்கத்திலுள்ளது. இவ்வாறு மதம்மாறியோரில் எமது முன்னோரும் உள்ளடங்கினர். எனவே தான் இரணைதீவு நூறு வீதம் கத்தோலிக்கர்களாகவே வாழும் யாழ்குடாநாட்டில் தனித்தீவாக உள்ளமை சிறப்பம்சமாகும். இக்காலகட்டத்தில் இரணைதீவு குருதீபம் என்றும் அழைக்கப்பட்டது.

பின்பு கி.பி 1560ஆம் ஆண்டு மார்கழி 22ல் குருதீப வளைகுடாவிற்கு இந்திய மீன்பிடி கரையிலிருந்து கடல் மார்க்கமாக அன்றிக்கஸ் அம்றீக்வ் (ANRIGVEZ AMRIGVE) அடிகளார் வந்து சேர்ந்தார். இவரது போதனைப் பணிகளுக்கு குருதீபத்தார் உதவியாளர்களாகவும் படகு செலுத்துபவர்ககளாவும் பெரும்பங்கு செலுத்தியுள்ளனர். இக்காலப்பகுதிகளில் தான் மன்னாரில் மக்கள் மறைசாட்சிகளாக இரத்தம் சிந்தி மரித்தனர்.

போர்த்துக்கேயர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களும் ஒல்லாந்தர் காலத்தில் கட்டப்பட்ட கலங்கரை விளக்க கோபுரமும் இரணைதீவின் முருகைக்கற்களினால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டவையாகும் என வரலாறு சான்றுபகர்கின்றன. இதற்கு கற்கள் எடுக்கப்பட்டமைக்கான ஆதாரங்களாக இரணைதீவின் இடையாறு, இறரால் அடிச்சகுளப்பகுதிகளைக் கூறலாம். உ+ம் இரணைதீவு புனித செபமாலைமாதா ஆலயம், நாச்சிக்குடா புனித யாகப்பர் ஆலயம், வலைப்பாடு புனித ஆனாள் ஆலயம். இரணைதீவு கலங்கரை விளக்கம், பாலைதீவு கலங்கரை விளக்கம், கௌதாரி முனை கலங்கரை விளக்கம் போன்றவைகளைக் கூறலாம்.

ஒல்லாந்தர் காலத்திலும் புரட்டஸ்தாந்து மதம் பரப்பப்பட்டமையால் கத்தோலிக்கர்பல இன்னல்களைசந்திக்கநேரிட்டது. இக்காலப்பபகுதியில் இலங்கை மண்ணின் புனிதரான யோசேவ்வாஸ் அடிகளாரின் பணி இன்றியமையததாக அமைந்தது. இவர் 'சம்மனசுச் சுவாமி' என்று அழைக்கப்பட்டார். இவர் மறைபரப்பு பணியின் தடங்கள் எமது கரையோர பிரதேசங்களில் இன்றும் வழிபாட்டுத் தலங்களாகவும் புனித பூமியாகவும் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இக்காலத்தில் திருஅவையின் மக்களுக்கு தலைமைப் பொறுப்பாக மூப்பர், ஆலய பராமரிப்புக்காக சங்கிடுத்தார், மொடுதார் போன்றோரை உருவாக்கி ஒருங்கிணைந்த மக்களாக ஆன்மீகத்திலும் இறைநம்பிக்கையிலும் வலுப்பெறச்செய்திருந்தார். இந்த வரையறைக்குட்பட்டதாக எமது சமூகத்தினரும் வாழ்ந்திருந்தனர். இதன் சுவடுகள் இன்றும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கத்தோலிக்கர் வரலாற்றில் யாழ்மறைமாவட்டத்தின் பாசையூர் பங்கிற்கு அடுத்தாத ஒரு பங்காக 1834ம் ஆண்டு முதல் வழி மீசாமாக செயற்பட்டுள்ளதை அரசவர்த்தமானி மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. இதன்காரணத்தால் வடக்கில் கௌதாரிமுனை தொடக்கம் தெற்கே பெருங்களிப்பற்று (உயிலங்குளம்) வரை ஐரோப்பிய குருக்களால் மறைபரப்புப்பணி மேற்கொள்ளப்பட்டது. இக்காலப்பகுதியில் பாலைதீவு இரணைதீவின் 7ம் வட்டாரமாக அரசாங்கத்தினால் அங்கீகாரம் பெற்றது. இதனால் அந்நாட்களில் பாலைதீவு அந்தோனியார் பெருவிழாவை கொண்டாட எம்மக்கள் உரிமம் பெற்றிருந்தனர். இரணைதீவிலுள்ள செபமாலை மாதா ஆலயம் 16ம் நூற்றாண்டுகளில் ஒரிற்றோரியக் குருக்களால் கட்டப்பட்டதாக பதிவேடுகள் காணப்படுகின்றது. 1777ஆம் ஆண்டு வணபிதா பாஸ்கல் பெரேரா அடிகளாரும் 1779ஆம் ஆண்டு அறிக்கையின்படி வணபிதா பிரான்சிஸ்கோ வாஸ் குலாஸ் அடிகளாரும் 1781 ஆம் ஆண்டு அறிக்கையின்படி வணபிதா அல்பர் குக் அடிகளாரும் தீவுப்பகுதிகளில் கடமையாற்றி வந்ததாக கூறப்படுகின்றது. இரணைதீவு ஐரோப்பிய நாட்டைச் சேர்ந்த அமலமரித்தியாகிகள் குருக்களால் தனிப்பங்காக நிர்வகிக்கப்பட்டு மக்களின் வாழ்வியலில் மாற்றங்களை கொண்டு வந்து சமூக பொருளாதார, கல்வி மேம்பாட்டுடன் வழிநடத்தினர். இவர்களில் எமது மண்ணில் பணியாற்றிய ஐரோப்பிய அமதி குருக்களான வண பிதா சார்வே அமதி, வணபிதா டிலாக்கே அமதி, வணபிதா மூயே அமதி, வணபிதா கோமஸ் அமதி, வணபிதா விறாட் அமதி, வணபிதா ஹென்றி மோறோ அமதி ,வணபிதா கொண்சால்வே அமதி ஆகியோர் பணியாற்றியுள்ளனர். காலத்திற்கு காலம் மக்களின் நலன்களில் அக்கறை கொண்டவர்களான குருக்கள் இயற்கை அனர்த்தங்கள் மக்களின் இன்ப துன்பங்களில் இரண்டற கலந்தவர்களாக மக்களோடு மக்களாக வாழ்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த சமூக கட்டமைப்புடன் வாழ்ந்த எம்மவர்கள் பொருளாதாரத்திலும் ஸ்திரத்தன்மையை பேணிவந்துள்ளனர். இதற்கு எமைச் சூழவுள்ள கடல் திரவியங்களே முழு மூலதனமாக காணப்பட்டன. காற்றின் திசையறிந்து பாய்கட்டுவதும் நீரோட்டத்தை நன்கு அறிந்து படகு செலுத்துவதும் இவர்களின் தனித்திறமையாகும். தீவிலிருந்து பல கடல் மைல் தூரம் சென்று கடல் திரவியங்கள் வருவதுண்டு. கடலுக்கடியில் காணப்படும் மீன்கள் செறிந்து வாழும் கற்கூடங்களையும் மரக்கோல் மூலம் இனங்கண்டு அக் கூடங்களுக்கு பெயர்கள் சூட்டி (குறிப்பாக சட்டியன் படுத்தகல், சிப்பிறியன் படுத்தகல், குருவித்தலையன் படுத்தகல்) அப்பகுதிகளில் தொடர்ந்து தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். காலப்போக்கில் தொழிநுட்ப வளர்ச்சியினால் இயந்திர படகுகள் மூலம் ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபட்டு தமது பொருளாதாரத்தை மேம்படுத்தினர்.

இரணைதீவில்வாழ்ந்தமக்கள்இறைவிசுவாசத்தில்இரண்டறகலந்தவர்களாக காணப்படுகின்றார்கள். இவ்விசுவாச வாழ்வின் அடித்தளமாக அன்னை மரியாளைத் தமதாக்கிக் கொண்டவர்கள். நாளாந்தம் குடும்ப செபமாலையிலும் ஆலயங்களில் ஒற்றுமையாக கூடி செபிப்பதிலும் பகிர்ந்து உண்பதிலும் இன்ப துன்பங்களில் ஒருவருக்கொருவர் பங்கு கொள்வதிலும் ஆதிக்கிறிஸ்தவ சமூகத்தை ஒத்த வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். இவர்களின் விசுவாச வாழ்விற்கு சான்றாக சுமார் 4 நூற்றாண்டுகளுக்கு முன்னர் பர்மா தேசத்திலிருந்து வணிகர்களால் கொண்டுவரப்பட்ட உயிர்த்த ஆண்டவரின் திருச்சொருபம், கல்லறை ஆண்டவரின் திருச்சொருபம் ஆகியன மன்னார் தீவிற்கு கொண்டு செல்ல முற்பட்ட வேளையில் எமது தீவைத்தாண்டி செல்ல முடியாத காலநிலை காணப்பட்டது. இதன் காரணமாக தீவில் தங்கிய வணிகர்கள் குறித்த திருச்சொருபங்களை எம்மவர்க்கு விற்பனை செய்தது வரலாறாகும். இச் திருச்சொருபங்களில் கல்லறை ஆண்டவர் திருச்சொருபம் மூலம் காலகாலமாக பெரிய வெள்ளி ஆராதனையின் பின் கோவில் முன்றலில் வியாகுல பிரசங்கம் வாசித்து இயேசுவின் பாடுகள் மரணங்களை காட்சிப்படுத்தி தியானித்து ஒப்பாரிபாடி பாரம்பரிய சமய அனுஸ்டானத்தை அனுசரித்து வருகின்றனர்.

வைத்தியதுறை வளர்ச்சியடையாத காலப்பகுதியில் எமது மக்கள் ஆயுர்வேத மூலிகைகளை பயன்படுத்தி நோய்களுக்கு சிகிச்சையளித்து வந்தனர். விசேடமாக விசகடி வைத்தியங்களை மக்களுக்கு இலவசமாக செய்து வந்துள்ளனர். (குறிப்பாக மூப்பர் செல்லத்துரை, நீக்கிலான், பீற்றர் போன்றோர் பரம்பரையாக செய்துவந்தனர்) அக்காலப்பகுதியில் தீவிலுள்ள தாய்மாரே பிரசவம் பார்த்தனர் என்பது வரலாறு. 1960 களில் இரணைதீவு வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவு மற்றும் விடுதி வசதிகளுடன் ஆரம்பிக்கப்பட்டது.

தமக்கே உரித்தான சீரான சமூக விழுமியங்களை உருவாக்கி சமூக கட்டமைப்புக்களுடன் உயர் சமூகமாக வாழ்க்கை நடத்தினர். எமது பாரம்பரிய கலைகளை நோக்கும் போது தொன்று தொட்டு எம்மவர் கலைகளை வளர்ப்பதிலும் வழிமரபினருக்கு அதை கடத்தியும் வாழ்ந்தனர். புலவர்கள் அண்ணாவிமார்கள், பாடகர்கள், நடிகர்கள், வாத்திய வித்துவான்கள் என பல துறையினர் காலகாலமாக கலைகளை வளர்த்து வந்துள்ளனர். எமது பாரம்பரியங்கள், முன்னோர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாறுகள், சமூக விழுமிய விழிப்புணர்வுகள், சமய வரலாறுகள் போன்றவை உள்ளடங்கலாகவே கலை வளர்ச்சியும் பேணப்பட்டு வந்துள்ளது. சிறப்பாக நாட்டுக் கூத்தும் குறிப்பிடத்தக்கது. இதற்கு சான்றுகளாக அண்ணாவியார் மருசலீன், புலவர் சந்தியா (ஆளுநர் விருது 2011), அண்ணாவியார் செ.சந்தியா (பூநகரி கலை நகரி விருது 2017), திரு.செ.ஞானசீலன் (வீணைப்பெட்டி சீலன்) போன்றோரை குறிப்பிடலாம். காலத்திற்கு காலம் வருகை தந்த அருட்தந்தையர்களாலும் வழிநடத்தப்பட்டனர்.

அந்தவகையில் வணபிதா ஹென்றி மோறோ காலப்பகுதியில் இலங்கையின் வோக்கஸ் (WALKERS) தொழிற்சாலையின் இழைநார் படகு இரணைதீவிற்கு மறைபரப்பிற்காக கொண்டுவரப்பட்டது. இதனை அமரர் செபமாலை (அக்ரிங்) அமரர் அ.கீதபொன்கலன், சக்கரியாஸ் ஆகியோர் பராமரித்தும் இயக்கியும் வந்துள்ளனர். இப்படகின் மூலமாக பலமுறை இந்தியா சென்றும் மறைபணியாற்றி வந்துள்ளார். மேலும் அருட்தந்தை அவர்களால் பிரான்ஸ் நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட ஆலய மணிகள் எமது ஆலயத்திற்கு பொருத்தப்பட்டன. மற்றுமாக பெருகிவரும் மக்கள் தொகையினை கருத்தில் கொண்டு நிலத்தடி நீர்த்தொட்டிகளை மிக நுட்பமான முறையில் வடிகால்களை அமைத்து மக்கள் குடிநீர் தேவையை பூர்த்தி செய்தார். இவை இன்றும் ஆலயம், குருமனை, கன்னியர் மடம், பாடசாலை போன்ற இடங்களில் அமைக்கப்பட்டுள்ளதை காணலாம். இவ்வாறு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு போக்குவரத்து, தபால், சுகாதாரம் போன்றன இவரது காலத்தில் ஆரம்பிக்கப்பட்டன. மேலும் பூநகரி பிரதேசத்தில் உள்ள முழுப்பங்குகளையும் இங்கிருந்தே பரிபாலனை செய்துவந்தார். சென்று வருவதற்காக ஜீப் வண்டி ஒன்றும் வழங்கப்பட்டு இருந்தது. இவரது வழிகாட்டலிலேயே ஆலயத்தின் மணிக் கோபுரங்கள் கட்டிமுடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மற்றும் கல்வியில் ஊக்குவிக்கும் நோக்கோடு செயற்பட்டதன் பயனாக எமது கிராம மக்கள் அரச ஊழியர்களாக கடமையாற்றும் வாய்ப்பும் கிட்டியது. அமரர் ம. மடுத்தின் உதவி கிராம அலுவலராகவும் அமரர் அ.சுவானாள் உபதபால் அதிபராகவும் அமரர் ம.செபமாலை ஆசிரியராகவும் அதிபராகவும் சேவையாற்றியுள்ளனர். பாடசாலையில் நிரந்தர கட்டிடம் கட்டியதோடு தலைமையாசிரியராகவும் கடமையாற்றி 8ஆம் தரம்வரை பாடசாலையை நடத்தியும் உள்ளார். மேலும் கிராம சபை தோற்றம் பெற்று தேர்தல்கள் மூலம் தவிசாளர்கள் தெரிவுசெய்யப்பட்னர். காலத்துக்கு காலம் தெரிவு செய்யப்பட்ட கிராமசபை உறுப்பினர்களாக அமரர்களான க.செபமாலை, அ.தோமஸ், அ.அமிர்தநாதன், ப.செபதேயு ஆகியோர் கிராம அபிவிருத்தியில் முக்கிய பங்காற்றினர். அத்துடன் அமரர் செ.சுவானி, சி. சந்தியா போன்றோர் கிராம சபையின் நிலைய பொறுப்பதிகாரியாக பணியாற்றினர்.

1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அருட்தந்தை தேவராசா அடிகளார் எமது பங்கிற்கு வருகை தந்து சமய, கல்வி, தொழில் ஆகிய துறைகளில் மேம்பட்டு வளர உறுதுணையாக செயற்பட்டு வந்ததோடு 1974 ஆம் ஆண்டு திருக்குடும்ப கன்னியர் மடத்தை ஆரம்பித்து அருட்சகோதரிகளை எமது மண்ணிற்கு அழைத்து வந்து சிறப்பான பணிகளை செய்ய வழிசமைத்துள்ளார். 1975 ஆம் ஆண்டு முதலாவது சாமதான நீதவானாக அமரர் செ. சூசைநாதன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே காலப்பகுதியில் இறங்குதுறை, நெசவு மண்டபம் போன்ற செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் இக்காலப்பகுதியில் அருட்சகோதரிகளான வில்பிறட், லூயிஸ், லெற்றிசியா, தார்சில்லா ஆகியோரும் பணிசெய்தனர். 1983 ஆம் ஆண்டில் இரணைதீவு பாடசாலையின் அதிபராக அருட்சகோதரி கொஸ்கா பொறுப்பேற்று அவ்வாண்டிலேயயே க.பொ.த சாதாரண தரம் வரை உயர்த்தி மாணவர்களை சித்தியடைய செய்துள்ளார். தாய்மார்களுக்கான குழந்தை பேற்று காலங்களில் அருட்சகோதரி தாசில்லா தாதியாக செயற்பட்டு அநேகமான தாய்மார்களையும் குழந்தைகளையும் காப்பாற்றி தியாகமுள்ள சேவையால் உயர்ந்து நின்றாள். இவரது காலம் எம் மண்ணிற்கு சிறந்த காலமாக அமைந்தது.

தொடர்ந்து அருட்தந்தை கொண்சால்வே அடிகளார் பங்கிற்கு வருகை தந்து ஆலயத்தின் முகப்பு மண்டபம் (portico) கட்டிமுடித்தார். மேலும் நெசவுசாலையில் பெண்களுக்கான்தையல்பயிற்சிநெறிகளையும்மற்றும்சனசமூகநிலையங்களையும் ஆரம்பித்து வைத்ததோடு விளையாட்டுதுறையும் வளர அரும்பணியாற்றினார்.

1990 களில் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகள் பங்கின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதோடு நாட்டின் போர் உக்கிரமடைந்து காணப்பட்ட காலமாகையால் மக்கள் இடம்பெயர்ந்து செல்லும் நிலை ஏற்பட்டது. 1992ல் மக்களை மிகவும் பாதுகாப்பாக நாச்சிக்குடா பகுதியில் மக்கள் குடியமர ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

"கடலோடும் காற்றோடும் மழையோடும் வெயிலோடும் போராடும் மீனவரின் வாழ்வியல் கலைநயமானது பார்ப்பவர்களுக்கு. ஆனால் அவனுக்கும் அவன் சார்ந்த சமூகத்தினருக்கும்தான் தெரியும் காற்று காலத்து அலை போன்றது என்று."

**உசாத்துணை நூல்கள்:**

பூநர் பெட்டகம் - பூநகரி பிரதேச செயலகம்,
கடலர் பாண்டியர் - குரு தீபம்
பரலோகமாதா ஆலய பவளவிழா மலர் - நாவாந்துறை
இலங்கையில் தமிழர் - கலாநிதி முருகன் குணசிங்கம்
History of Indian Literature
சுவாமி சா. ஞானப்பிகாசர்
- யாழ்ப்பாணத்தில் கத்தோலிக்க திருச்சபை - சரித்திரச் சுருக்கம்
Boudens R. 1957 - The Catholic Church under Dutch Rule, Rome.
W.L.A. Don Peter 1988 Catholic Church in Sri Lanka.Catholic Press, Colombo.

தொகுப்பு
**திரு. மு. எமிலியாம்பிள்ளை (SLPS I, SLEAS III)**
முன்னாள் அதிபர்
கிளி/இரணைதீவு.றோ.க.த.க.பாடசாலை
ஒய்வு நிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் (மடுவலயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


க. தொ. கூ. சங்க விற்பனை நிலையம்


பொதுநோக்கு மண்டபம்


கிளி/ இரணைதீவு றோ. க. த. க. பாடசாலை


இரணைமாதா நகர் க. தொ. கூ. சங்கம்


திருக்குடும்ப கன்னியர் மடம்


ஆரம்ப சுகாதார நிலையம்


பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்






பிரதேசசபை உப அலுவலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவின் புராதன பதிவுகள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவின் சிறப்புக்களும் அதன் இயற்கை வளங்களும்

நான் பிறந்த இம்மண்ணின் சிறப்புக்களை இவ்வேளையிலும் நான் கூறவில்லை எனின் நான் இம்மண்ணில் பிறந்தவன் இல்லை என்றாகிவிடும். எனவே நான் அவதரித்த இவ்விரணைதீவு மண்ணின் சிறப்புக்களையும் அதன் இயற்கை வளங்களையும் நான் அறிந்தவரை கூறுகின்றேன்.

அந்தவகையில் இலங்கையில் உள்ள தீவுகளில் இரணைதீவும் ஒன்றாகும். இது கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கடற்பகுதியில் இரண்டு சிறிய தீவுகளை தன்னகத்தே கொண்டு 'இரணைதீவு' எனும் அழகிய நாமத்துடன் விளங்கி வருகின்றது. யாழ்ப்பாணம் தொடங்கி தலைமன்னார் வரையுள்ள கடற்றொழிலாளர்கள் யாவருக்கும் இரணைதீவுக்கடல் தன்னிடம் உள்ள செல்வங்களை வாரிவாரி வழங்கி வருகின்றது. இதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. இவ்வாறு கடல் வளங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் இரணைதீவின் கடற்தோற்றத்தை எடுத்து நோக்கும் போது, அதன் வடகிழக்கு கடற்பரப்பானது 3 கிலோமீற்றர் தூரம் வரை வற்றி பின்பு நீர் ஏறும் இயல்பை உடையது. இதனால் சிறிய அளவிலான இந்நீர்ப்பரப்பில் நண்டு, மீன், கணவாய், கடலட்டை போன்ற விலையுயர்ந்த மீனினங்கள் இலகுவான முறையில் பிடிக்க முடியும். தெற்குக் கடற்பகுதியை நோக்கும்போது, அங்கு வெள்ளை மணல் பரப்பு மிகுந்து அழகிய தோற்றத்துடன் காட்சியளிக்கிறது. இப்பகுதியிலும் கடலட்டை, சுறா, பெருநண்டு, வெள்ளை நண்டு, கட்டா, பாறை, சிறையா, போன்ற மீனினங்களும் தங்கி வாழ்வதற்கும் இனப்பெருக்கம் நிகழ்வதற்கும் ஏதுவான கடற்பரப்பாக இது திகழ்கின்றது. மற்றும் மேற்குக் கடற்பரப்பை நோக்கும் போது இது சற்று ஆழமான கடற்பரப்பாகவும் பவளப்பாறை, முருகைக்கற்பாறை போன்ற அரிய வகையான அழகிய பாறை இனங்களால் நிறைந்து விளங்குகின்றது. இதனால் இங்கு பெரியவகை மீனினங்களான அறுக்குளா, கட்டா, பாரை, சுறா, கப்பல் மீன் போன்ற சிறந்த மீனினங்கள் அதிகம் காணப்படுகின்றன. அவ்வப்போது டொல்பின் இனத்தைச் சேர்ந்த மீனினங்களும் திமிங்கல மீனினங்களின் வருகையும் நிகழ்ந்து வருவதை அவதானிக்கலாம்.

அடுத்து இரண்டு தீவுகளுக்குமிடையே களப்பு ஒன்று காணப்படு கின்றது. இது சேறும் தாளையும் நிறைந்து காணப்படுவதால் இங்கும் கடலட்டை, பெருநண்டு, பாலைமீன் போன்ற மீனினங்கள் தங்கி வாழ்வதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்கும் ஏதுவான பகுதியாக இது காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தரை அம்சங்கள்**

இரணைதீவின் தரைஅம்சங்களை எடுத்து நோக்கும் போது அது எழில்மிகு இயற்கையுடன் நிறைந்து விளங்குகின்றது. புற்றரை, மணல் மேடுகள், குளங்கள், கேணிகள், கிணறுகள், கண்டல் தாவரங்கள் மற்றும் மக்கள் வசிக்கும் பகுதி போன்ற தரை அம்சங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அந்த வகையில் மக்கள் வசிக்கும் பகுதியை எடுத்தக்கொண்டால் அதிகமாக வேம்பு, பூவரசு, தென்னை, பனை, இலந்தை, பாலை, முருங்கை, முள்முருங்கை, சீமக்கிழுவை, பாவட்டை போன்ற குளிர்மை நிறைந்த மரங்களால் நிறைந்து கோடை காலங்களிலும் மக்களுக்கு குளிர்மையையும் ஏனைய பயன்களை வழங்கும் மரங்களாகவும் இவை சிறந்து விளங்குகின்றன.

அடுத்து புற்றரைப் பகுதியை எடுத்து நோக்கும் போது அறுகு, சம்பு, செப்பு, கோரை, நாகதாளி, கொவ்வை, எருக்கலை போன்ற அரிய மூலிகைகள் நிறைந்த புல், செடி, கொடிகளால் நிறைந்து இரணைதீவின் அழகிற்கு மெருகூட்டி வருகின்றன. இதனால் கால்நடையாகக் காணப்படும் பசுவினங்கள் உயிர்வாழ்வதற்கு ஏதுவான பகுதியாக இது பெரிதும் உதவி புரிகின்றது. அத்துடன் மாரி காலங்களில் இப்புற்றரை வெளியானது நீரினால் நிறைந்து ஆங்காங்கே சிறிய மேடுகளும் தெரியக்காட்சியளிக்கும். அப்போது வாத்து, நாரை, தாரா, கொக்கு, மீன்கொத்தி, நீர்க்காகங்கள், ஆள்காட்டி, கௌதாரி போன்ற பறவையினங்கள் அப்புற்றரைகளின் மீது அமர்ந்து பார்ப்பவர் மனதைக் கொள்ளை கொள்ளும் அளவிற்கு அழகுற விளங்கும். குளிர்காலங்களில் அதன் அழகைக் கூற என்னிடம் வார்த்தைகள் இல்லை.

அடுத்து கண்டல் தாவரங்கள் நிறைந்த பகுதியை எடுத்து நோக்கும் போது சிறிய தீவின் பொரும்பாலான பகுதியை தன்னகத்தே கொண்டதாக்கி இக்கண்டல் தாவரங்கள் காணப்படுகின்றன. இவை ஏனைய இடங்களில் உள்ள கண்டல் தாவரங்களுடன் ஒப்பிடும் போது செழிப்பானவையாகவும், அடர்த்தியானவையாகவும் வானளவில் உயர்ந்து வளர்ந்து காணப்படுகின்றன. இதனால் இங்கு நாரை, கொக்கு, காகம், நீர்க்காகம், பருந்து போன்ற பறவை இனங்கள் கூடுகட்டி வாழ்கின்றன. அத்துடன் மாடுகளும் கோடை காலங்களில் குளிர்மையைத் தேடி இக்கண்டல் தாவரங்களை நாடி வருவதும் உண்டு.

மேலும் இரணைதீவின் மண்வளத்தை எடுத்து நோக்கும் போது மணல்மண், களிமண், இருவாட்டி மண் அல்லது தோட்ட மண் போன்ற மண்ணினங்கள் இங்கு காணப்படுகின்றன. முதலில் மண் வளத்தை நோக்கும்போது இங்கு அமைக்கப்பட்டுள்ள நிரந்தர வீடுகளும், பொதுக்கட்டடங்களும் இங்குள்ள மணல் மண்ணையும் முருகைக் கல்லையும் பயன்படுத்தியே அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இங்கு தென்னை, பனை நன்றாக வளர இம்மணல் பெரிதும் உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரிகின்றது. மற்றும் இருவாட்டி மண் அல்லது தோட்ட மண்ணானது மக்கள் வசிக்கும் பகுதிகளில் காணப்படுகின்றது. இங்கு வாழ்ந்த மக்கள் தமது வீட்டுத்தோட்டங்களில் வாழை, கத்தரி, மிளகாய், வெங்காயம், கறிமிளகாய், பப்பாசி போன்ற பயிர்களைப் பயிர் செய்து பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மற்றும் தாழ்வான நிலப்பகுதிகளில் காணப்படுகின்ற சேற்றுடன் கூடிய களிமண் உள்ள பகுதிகளில் மக்கள் வரப்பு அமைத்து ஏர்பூட்டி உழுது நெற்பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு அறுவடை செய்து வந்தமையும் குறிப்பிடத்தக்கது. அத்துடன் புற்றுக்களில் காணப்படும் களிமண் மிகுந்து பசைத்தன்மை உடையதாகிக் காணப்படுவதால் மண்வீடுகள் அமைக்க அம்மண் பெரிதும் உதவி வந்துள்ளது.

அடுத்து இரணைதீவின் வளங்களில் ஒன்றான குளங்கள், நீரேரிகளை எடுத்துக்கொண்டால் சிறிய தீவில் ஒரு குளமும் பெரிய தீவில் மூன்று குளங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இதைவிட பெரியதீவின் தெற்கு பகுதியில் 500 M நீளமுடைய உவர் அணைத்தடுப்பு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. ஏரிகளைப் பொறுத்தமட்டில் மூன்று நீர் ஏரிகள் இங்கு அமையப் பெற்றுள்ளன. இவை கால்நடைகள் நீர் அருந்துவதற்கு ஏதுவான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. பொதுக்கிணறுகள், தனியார் கிணறுகள் உட்பட 20 இற்கு மேற்பட்ட கிணறுகள் இங்கு காணப்படுகின்றன. குடிநீரைப் பொறுத்த மட்டில் இரணைதீவின் தெற்கு கடற்கரையில் இருந்து 50M தூரத்தில் தரையில் நன்னீர் ஊற்றுக்கிணறு காணப்படுகின்றது. கடலுக்கு மிகவும் அண்மித்த பகுதியில் நன்னீர் ஊற்று காணப்படுவது இரணைதீவின் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். மற்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ள கட்டடங்கள் பெரியளவிலான வீடுகள் யாவற்றின் கூரையில் விழும் மழைநீரானது நிலத்தை சென்றடைய விடாது தாவாரங்களில் பீலிகள் அமைக்கப்பட்டு கட்டடங்களின் கீழ் மழைநீர் தாங்கிகளும் திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளன. இதனால் கோடை காலங்களில் மக்களுக்கு நீர்ப்பற்றாக்குறை ஏற்படாது. குறிப்பாக இரணைதீவு தேவாலயத்தின் இடது புறக்கட்டடத்தின் கீழ்ப்பகுதி முழுமையாக பெரிய அளவிலான ஒரு நீர்த்தாங்கியாக அமைக்கப்பட்டுள்ளமை இரணைதீவின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

அடுத்து இரணைதீவில் ஒல்லாந்தர் கால முருகைக்கல்லினால் அமைக்கப்பட்ட கோபுரம் ஒன்று காணப்படுகின்றது. இது இரணைதீவிற்கு இன்னும் அழகு சேர்ப்பதாக தோற்றம் அளிக்கின்றது. அண்ணளவாக 70அடி உயர கோபுரமானது சிதைவடையாது இன்றுவரை நிலைபெற்று நிற்கின்றமை அதன் சிறப்பம்சமாகும். இதன் நடுவே ஒரு அடி அகல துளை ஒன்று அமைக்கப்பட்டு காணப்படுகின்றது. அதன் நடுவே வளியில் மிதக்கக்கூடிய பொருட்களான இறகு, பஞ்சு போன்றவற்றைப் போடும் போது அது அத்துளை வழியாக வளியில் மிதந்து விரைவாக மேலே சென்று விடும் சிறப்பியல்பைக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து மக்கள் வசிக்கும் பகுதியின் இரண்டு இடங்களில் புராதன கட்டடங்களின் உடைந்த கற்கள், கற்குவியல்கள் காணப்படுகின்றன. இவை மன்னராட்சிக்காலங்களில் பாதுகாப்பிற்காக அமைக்கப்பட்ட அரண்களாக இருந்திருக்கலாம் என்ற ஐதீகம் உண்டு. அத்துடன் இரணைதீவின் மேற்கு கடற்கரைப்பகுதியில் கனிய வளம் காணப்படுவதாகவும் அதற்கான ஆய்வினை மேற்கொண்டு அடையாளம் இடப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

மேலும் இரணைதீவின் கிழக்கு கடற்பரப்பில் 500M நீளம் உடைய பெரிய இறங்குதுறை ஒன்று காணப்படுகின்றது. இது இலகுவான முறையில் பொருட்களை இறக்குவதற்கும் ஏற்றுவதற்கும் படகுகளை கொண்டு செல்வதற்கும் நடந்து செல்வதற்கும் ஏற்ற முறையில் அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் மண்ணரிப்பையும் இது கட்டுப்படுத்துகின்றது. மற்றும் வடக்கு, மேற்கு கடற்கரைகளில் மண்ணரிப்பு ஏற்படாது. ஏனெனில் இயல்பாகவே அப்பகுதியில் கற்கள் நிறைந்து மண்ணரிப்பைத் தடுக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளன.

இவ்வாறு இரணைதீவில் வாழ்ந்த மக்களுக்கு கடல் வளமும், தரைவளமும் நோய் நொடியற்ற நீண்ட ஆயுளை வழங்கியுள்ளன. குறிப்பாக 1992ஆம் ஆண்டு யுத்தம் காரணமாக இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் காலநிலை ஒவ்வாமை காரணமாக நோய்களையும் இழப்புக்களையும் சந்தித்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தன்னிடம் வாழ்ந்த மக்களுக்கு நோய் நொடியற்ற வாழ்வையும் நீண்ட ஆயுளையும் வழங்கி இயற்கை அழகை இன்பமுடன் இரசித்து வாழ வைத்த இரணைதீவின் சிறப்புக்களை இந்நேரத்திலும் நான் கூறவில்லை எனில் நான் அம்மண்ணில் பிறந்தவன் இல்லை என்றாகிவிடுவேன்.


தொகுப்பு
**திரு. அ.பி.கிளாசன்**
சமுர்த்தி அலுவலர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரணைதீவின் அழகிய பதிவுகள்





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமாதா நகர் குடியேற்றமும் அதன் வளர்ச்சியும்

தொன்று தொட்டு பல நூற்றாண்டாக இரணைதீவில் பூர்வீகமாக வாழ்ந்த மக்கள், நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக இரணை தீவிலிருந்து மிகுந்த அச்சங்களுடன் 1992ம் ஆண்டு இடம்பெயர்ந்து நாச்சிக்குடா கரையை அடைந்தனர். அப்போது இங்கு வாழ்ந்த எம் உறவுகள் அடைக்கலம் தந்தார்கள். புனித யாகப்பர் ஆலயத்தின் அருகிலுள்ள பெரிய மரங்களின் கீழ் சிறு குடிசைகள் அமைத்தும் தங்கியிருந்தனர். ஏனையோர் தமது உறவினர்கள் வீடுகளிலும் தங்கியிருந்தனர். இயற்கை மாற்றத்தின் காரணமாக மழைக்காலம் உருவாக நாச்சிக்குடா பாடசாலையிலும், முஸ்லீம் மக்கள் விட்டுச்சென்ற வீடுகளிலும் தங்கியிருந்தனர். தொழில் வளங்கள் மருகிப்போக பொருளாதார கஷ்டம் எம்மக்களை வாட்டியது. சோர்வடைந்த மக்களுக்கு நம்பிக்கை தரும் வார்த்தைகளும், செயற்பாடுகளும் தேவைப்பட்ட அந்த வேளையில் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரை சந்தித்து ஆலோசனை நடத்தி அடுத்த நாளே அனைத்து மக்களையும் ஒன்று கூட்டி பொதுக்கூட்டம் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் சிறிய சிறிய முரண்பாடுகள் வந்தாலும் எமது சந்ததியின் எதிர்காலம் கருதி அருகிலுள்ள காட்டுப்பகுதியை துப்பரவு செய்து குடியமர்வதென முடிவு செய்யப்பட்டது. அக்கூட்டத் தீர்மானத்திற்கு அமைய குழுக்களும் அமைக்கப்பட்டது.

**குழு 01** - மனித முன்னேற்ற நடுநிலைக்குழு.
தலைமை: அருட்பணி ஜேம்ஸ் பத்திநாதர், திரு. மகேந்திரராசா
[நிவாரணம் வழங்குதல் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்துதல்]

**குழு :02** - கட்டுமானக்குழு
தலைமை: திரு. டோ. பிரதீபன், திரு. செ. இருதயநேசன், திரு. செ. லோறன்ஸ், திரு. ச. ஜெயசீலன்
[கொட்டகை அமைத்தல், உணவு குடிநீர் போன்றவற்றை கவனித்தல்]

**குழு : 03** - நிலஅளவை குழு
தலைமை: திரு. செ. சந்தியா, திரு. அ. கிறிஸ்ரியான், திரு. அ. எட்வேட் போல், திரு. செ. மரிய செல்வக்குமார்
[வீடு, பொது இடம், வீதி என்பவற்றுக்கான நிலங்களை இனங்கண்டு சரியாக அளவீடு செய்தல்]

**குழு : 04** - கல்வி மற்றும் பொது மேம்பாட்டு குழு
தலைமை: திரு. செ. சூசைநாதன் (J.P.), திரு. அ. கி. ஜெயசீலன்,
[அரச நிறுவனங்களை சந்தித்தல் ]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குழு : 05** - ஆலோசனை குழு
தலைமை: சூ. செல்வரட்ணம், திரு. சி. தனிக்கிளாஸ், திரு. டே. பர்னாந்து

**குழு : 06** - சுகாதார குழு என்பன கருத்தில் கொண்டு அனைவரும் ஒற்றுமையாகவும் உத்வேகமாகவும் செயற்பட எண்ணினர். இக்குழுக்களில் பணியாற்றியவர்களாக த. சத்தியசீலன், வை. பங்கிராசா, டொ. பிரான்சிஸ் செ. பெனடிக்ற், தே. கிற்பொலிற், அ. சந்தியா ச. வில்பிறட், செ.சந்தியா, க. இராயப்பு, வளந்தீன், எல்வின் சி. பாஸ்கரன், பேர்னான்டோ மாமா, செ. மரியசெல்வக்குமார், அமரர் ப. பவுல்ராசா, சி. மரியதாஸ் மோ. பிரான்சிஸ், அ. சவேரியான், தா. அந்தோனி, சூ. ஜெயரட்ணம். சு. செபஸ்ரியான், புவனேந்திரன், சி. முடியப்பு, றே. யோன்மரியசீலன், எக்றாஸ், பீற்றர், அ. றோசறியான், ச. சவீன், செ. பாக்கியம், தொ. அல்வின், பர்னாந்து, கு. அந்தோணி, சி. பிரகாசம் அருட்பிரகாசம். நீக்கீலான், அல்பிறட், ச. சகாயம் அருள்வாசகம், லேயோன்பிள்ளை, பி. காணிக்கைராசா, ஆ. அந்தோனி, சி. யாக்கோபு, டோமினிக், டொன்பொஸ்கோ ஆகியோர் சமூக முன்னோடிகளாக ஒன்றிணைந்து மதி நுட்பமாக செயற்பட முன்வந்தனர். அவர்களின் இந்த தியாக செயற்பாடுகளை வார்த்தைகளால் கூறமுடியாது. யானை, புலி, பாம்பு என அனைத்து மிருகங்களும் வாழும் காட்டினை ஊடறுத்து சென்று காட்டின் மத்திய பகுதியில் ஒரு கிணறு இருப்பதை கண்டு [இன்று திருக்குடும்ப கன்னியர் மடத்திற்கு முன்பாக உள்ள கிணறு]அங்கேயே கிறிஸ்தவனின் அடையாள சின்னமாகிய சிலுவையை அமைத்து செபவழிபாடு செய்து காடு வெட்டும் வேலையை ஆரம்பித்தனர்.

அன்றைய காலகட்டத்தில் எமது மாவட்டமானது போர்ச்சூழலுக்குள் இருந்ததனால் அன்றைய பிரதேச செயலாளர் ரவிந்திரன், மற்றும் மாவட்ட செயலாளர் பொன்னம்பலம் ஆகிய இருவரோடும் அமரர் திரு சூசைநாதன் தலைமையிலான குழு சென்று சந்தித்தது. நில அளவை திணைக்களத்தின் குழு வழிகாட்டலின் கீழ் குடியமர்வுதிட்டம் விஸ்த்தரிக்கப்பட்டது. அரச திணைக்களத்தினால் பணிக்கப்பட்டவாறு ஒரு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் நிலப்பரப்பு, ஆலயம், சேமக்காலை, விளையாட்டு மைதானம், பொது கட்டட பகுதி நிலம் என்பவற்றுக்கான நிலப்பகுதி மற்றும் பிரதான வீதி, குறுக்கு வீதி ஆகிய அனைத்துப் பகுதிகளையும் பிரித்து காட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது. மக்களிடம் கைக்கத்தி, கோடரி, மண்வெட்டி மட்டுமே இருந்ததன. சீவிய கம்புகளை அளந்து அடிக்கு அடையாளமாக வைத்து இரவு பகலாக ஊண் உறக்கமின்றி காடுகளிலும் மேடுகளிலும் படுத்துறங்கி நிலாவொளியை விளக்காக கொண்டு காட்டை அளந்து பிரிக்கும் வேலையை ஆரம்பித்தனர். அவர்களின் காலிலேயும் தலையிலேயும் உடம்பிலேயும் குற்றி முறிந்த முட்களின் எண்ணிக்கையை சொல்லால் வடித்துவிட முடியுமா? அடிக்கடி இவர்களை பார்வையிட அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் வருவதுண்டு. அருட்தந்தை கருணாரட்ணம் அவர்களும் வருகை தந்து கனிவும், கண்டிப்பும் நிறைந்த பேச்சால் மக்களை ஊக்கப்படுதினார். கடவுளின் ஆசீர்வாதத்தோடும் இவர்களின் வழிநடத்தலோடும் ஒரு மாத கால இடைவெளிக்குள் எமது கிராமத்தின் அத்தனை நிலப்பரப்புக்களும் வெவ்வேறாக பிரிக்கப்பட்டு நில அமைப்பு வரைபடமும் அமைக்கப்பட்டு திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டது. வந்த வேகத்தில் எமது மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டி இரவுபகலாக இரத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியர்வை சிந்தி ஒற்றுமையாக தியாக உணர்வோடும் அர்ப்பணிப்போடும் எமது சமூக வழிகாட்டிகள் செயற்பட்டிருந்தனர். இவர்களின் தியாகத்திலேயே இந்த கிராமம் மிக அழகாக உருவெடுத்திருக்கின்றது. அதிலும் பலர் எம்முடன் இன்று இல்லை அவர்களையும் இவ்வேளையில் நினைக்கின்றோம்.

தோற்றம் பெற்ற எமது கிராமத்திற்கு பெயர் வைக்க எண்ணினர்.எமது தாயின் பெயர் வரவேண்டும் அத்தோடு எமது தீவின் பெயரும் இணைக்கப்படவேண்டும் என எண்ணி ஒரு முடிவுக்கு வந்தனர்.

பலபெயர்களை உச்சரித்துச் சென்றாலும் "இரணைமாதாநகர்" என்ற பெயரை கிராமத்திற்கு சூட்டினர்.

இவ்வாறாக சமூக கட்டமைப்புக்கள் மெல்ல மெல்ல அமைக்க ஆரம்பித்து முன்பள்ளி, பாடசாலை, ஆரம்ப சுகாதார நிலையம், ஆலயம், விளையாட்டு கழகம், கிராம அபிவிருத்திசங்கம் என ஆரம்பித்தன. அந்த வகையில் எமது முன்பள்ளி மற்றும் பாடசாலை என்பன ஆரம்பத்தில் முழங்காவில் பாடசாலையில் இயங்கினாலும் தனித்துவமாக இயங்க எண்ணி முதலில் அன்புபுரம் பகுதியில் இயங்கி பின்பு எமது கிராமத்தில் ஆரம்பிப்பதற்கு எம்மவர்கள் காணிகளை அன்பளிப்பு செய்தனர். இப்பாடசாலைக்கான காணி ம.சந்தியா, சி. பிரகாசம் வை.பங்கிராசா ஆகியோர் அன்பளிப்பு செய்தனர்.

இனிதே ஆரம்பமான எமது குடியேற்றத்திற்கான கட்டுமான நிதி மற்றும் நிவாரணம் என்பவற்றை மனித முன்னேற்ற நடுநிலையம் யாழ் மறை மாவட்டம், குடிநீர் விநியோகம், குழாய்க் கிணறு அமைத்தல் என்பற்றை OXFAM நிறுவனம், செஞ்சிலுவை சங்கம், பூநகரி அபிவிருத்தி நிறுவனம் என்பன பொறுப்பேற்றுக் கொண்டன. இராணுவ நெருக்கடியும் பொருளாதார கஷ்டமும் இருந்தாலும் இறைவன் எம்மை வழிநடத்தியமையால் அனைத்து இன்னல்களும் பனிபோல் மறைந்தன. இக்காலத்தில் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக தற்போதைய ஆலய வளாகத்தில் குடிநீர் கிணறு வெட்ட ஆரம்பிக்கப்பட்டது. வேலைகள் முடியும் நிலையை எட்டிய பொழுது அமரர் செல்வக்குமார் அவர்கள் மண்சரிவில் சிக்குண்டு உயிர்த்தியாகம் செய்தார். அத்தோடு இக்கிணறு வெட்டும் பணி நிறுத்தப்பட்டது. இவ்விடயம் மக்கள் மனதில் நீங்கா நினைவாகிவிட்டது.

தொடர்ந்து வந்த காலங்களில் எமது கிராமம் கல்வி பொருளாதாரம் போன்றவற்றில் சீரான வளர்ச்சி கண்டு வந்துள்ளது. தொடர்ந்து 2007 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இறுதியுத்தம் நடைபெற்றுக் கொண்டு இருந்தது. இதன் விளைவாக மக்கள் இங்கிருந்து இடம்பெயர்ந்து கால்நடையாக முள்ளிவாய்க்கால் வரை தமது உறவுகளை ஒவ்வொன்றாக இழந்துகொண்டு சென்றனர். இறுதிவரை இறைவன் மட்டுமே என்ற தாரக மந்திரம் எம்மை வழிநடத்தியது. மேலும் முகாம்களில் தஞ்சமடைந்து. இறுதியாக 2009ம் ஆண்டு கார்த்திகை மாதம் 27ல் மீண்டும் எம் கிராமம் வந்து சேர்ந்தனர். தொடர்ந்து கரித்தாஸ் நிறுவனத்தால் 172 வீடுகளும் 45 நிரந்தர வீடுகளும் வழங்கப்பட்டன. இக்காலப்பகுதியில் நடைபெற்ற பிரதேச சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தலின் போது திரு அ.பி.நோயல் பூநகரி பிரதேச சபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார். இவரது சேவை காலத்தில் பூநகரி பிரதேச சபையின் இரணைதீவு உப அலுவலகம் எமது கிராமத்தில் அமையப்பட்டது. அத்துடன் பிரதான வீதி, குறுக்கு வீதி என்பன நிலையான வீதிகளாக மாற்றப்பட்டன. இதுவரை பாடசாலை மைதானத்தில் விளையாடிய சென் மேரிஸ் விளையாட்டு கழகம் இடத்தை மாற்றி கிராமத்தின் தெற்காக உள்ள மைதானம் அமையப்பெற்றது. தொடர்ந்து ROTARY CLUB இனால் ஆலய வளாகத்தில் குடிநீர் விநியோகம், மக்களுக்கான 50 மலசல கூடங்கள் போன்றவை வழங்கப்பட்டன.

தொடர்ந்து வந்த காலங்களில் பிரதேச சபை உறுப்பினர்களான மு.எமிலியாம்பிள்ளை, டோ. பிரதீபன் ஆகியோர் மூலமாக கிராமத்திற்கான வீதி மின்விளக்குகளும் உள்ளூர் வீதிகளும் புனரமைப்பு செய்யப்பட்டன. மற்றும் டோ. பிரதீபன் மூலமாக கடலட்டை வளர்ப்பு பண்ணைகளுக்கான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு கடலட்டை ஏற்றுமதி கிராமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. மற்றும் சூ.குணரட்ணம் அவர்களின் மூலமாகவும் சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சினூடான பங்கு பணிமனைக்கு நிதி வழங்கப்பட்டது. மேலும் பாராளுமன்ற தேர்தலில் சூ.கிறிஸ்த்து ராஜன் போட்டியிட்டதும் குறிப்பிடத்தக்கது.

எமது தாய் நிலத்தினை மீட்கும் போராட்டம் அருட்தந்தை அருட்செல்வன் காலத்தில் நடந்தேறி வெற்றியும் கண்டது. அத்தோடு ஆலய பணிகளும் முன்னெடுக்கப்பட்டன. அருட்தந்தை பத்திநாதன் காலமும் எமக்கு பொன்னான காலம்தான். கொரோனா என்கின்ற கொடிய நோய் காலத்தில் தொற்றினால் இறந்த உடலங்களை இரணைதீவில் அடக்கம் செய்யப்படவிருந்த நிலையில் எதிர்ப்பு போராட்டம் மூலம் தடுத்து நிறுத்தப்பட்டது.

இவ்வாறாகபலசமூககட்டமைப்புக்களைதன்னகத்தேகொண்டுபோட்டியிடும் உலகில் நவீன தொழிநுட்ப வசதிகளையும் நவ நாகரிக போக்குகளையும் பின்பற்றி எழில்மிகு கிராமமாக அத்தனை வசதிகளோடும் மிளிர்ந்து வருகின்றது. மேலும் கல்வி நிலையும் துரித வேகத்தில் முன்னேறிக்கொண்டிருக்கின்றது. தமக்கென தனித்துவமான தொழில் உபகரணங்கள், சொத்துக்கள் போன்றவற்றிலும் ஏற்றம் கண்டுள்ளனர். மேலும் சமூக ஒற்றுமையோடு கலை கலாசார விளையாட்டு நிலைகளிலும் மேலும் முன்னேற்றம் கண்டு ஏனைய சமூகத்திற்கு முன்னுதாரணமான கிராமமாக திகழ அன்னையின் ஆசீரும் நிறைவாக கிடைக்க வேண்டிநிற்போம்.

தொகுப்பு

**திரு. டோ. பிரதீபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் பங்கில் திருக்குடும்ப கன்னியர்களின் வருகையும் – பணிவாழ்வும்

"ஆண்டவரே உமது செயல்கள் எத்துணை மேன்மையானவை உம் எண்ணங்கள் எத்துணை அழகானவை"

அன்று யாழ் மாவட்டத்திற்கும் பின்னர் கிளிநொச்சி தனிமாவட்டமாக பிரிந்த பின்னர் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் சேர்ந்த இரு பிரிவு களைக் கொண்ட ஒருதீவுதான் இரணைதீவு. நீரோட்டத்தால் பிரிக்கப் பட்ட பெரியதீவு, சின்னத்தீவு என இரு தீவுகளை தன்னகத்தே உள்ளடக்கியதனால் இது இரணைதீவு அழைக்கப்படுவதாக என்று வரலாறு கூறுகின்றது.

இந்து சமுத்திரத்திலுள்ள இந்த தீவு யாழ்பாணத்திலிருந்து கடல்மார்க்கமாக 30 மைல்களும், தரைமார்க்கமாக பூநகரி ஊடாக வலைப்பாடு சென்று கடல்மார்க்க மாகவும் செல்ல முடியும். இரண்டு சதுரமைல் பரப்பைக் கொண்டுள்ள இத்தீவு மிகுந்த போக்குவரத்து கஷ்டங்களின் மத்தியிலும் 200 குடும்பங்களை உள்ளடக்கியிருந்தது. இங்குள்ள மக்களில் மிகுதியானவர்கள் மீன்பிடி தொழிலையும், சிறுதொகையினர் சிறு கைத்தொழிலையும் செய்ய, ஒருசிலர் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் காணப்பட்டனர். இந்து சமுத்திரத்தில் உள்ள தீவு என்பதனால் பருவ மழைக் காலங்களிலும் குறைந்தளவு நீரையே பெற்றுக் கொண்டனர். அதி வரண்ட பிரதேச சுவாத்தியம் கொண்ட பகுதியாகும். அன்றைய காலப்பகுதியில் இயற்கையின் பாதிப்புக்களுக்கு உட்படாத பகுதியாக காணப்பட்டதனால் மக்கள் அங்கு நிம்மதியோடும், அமைதி யோடும் வாழ்ந்து வந்தனர்.

இத்தீவின் மண்வளம் பாறைக்கற்களால் ஆனது. மண் கருமை நிறமான களிமண்ணாகக் காணப்பட்டது. குறுகிய காலப்பகுதியாக ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களில் வீட்டுத்தோட்ட செய்கையில் ஈடுபட்டனர். இவர்களது வீடுகள் புற்களினால் வேயப்பட்ட கொட்டில்களாகவே ஆரம்பத்தில் இருந்தன. குடியிருப்பு பகுதியில் தென்னை மரங்களும் வளர்க்கப்பட்டன. இவை வேதபோதக குருக்களினாலே ஆரம்பத்தில் நாட்டப்பட்டவையாக வரலாறு கூறுகின்றது.

நன்னீருக்கு மிகவும் தட்டுபாடு. வேதபோதக குருக்களினால் கட்டப்பட்ட நீர்த் தொட்டிகளில் மழை காலங்களில் சேகரித்து வைக்கப்படும் நன்னீரே வரட்சி காலத்திலும் பயன்படுத்த வேண்டிய தேவை இருந்தது.

இத்தீவில் வசித்தவர்கள் ஒரே இன, ஒரே சமூக மக்களாக இருந்ததுடன் அனைவரும் கிறிஸ்தவர்களாகவே இருந்தனர். படிப்படியாக இவர்களைச் சுற்றியுள்ள வலைப்பாடு, நாச்சிக்குடா, தேவன்பிட்டி, இலுப்பைக்கடவை போன்ற இடத்து மக்களுடன் தமது உறவு, தொடர்புகளை விரிவுபடுத்திக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பத்தில் துணைப்பங்காக இருந்த இரணைதீவு பங்கு, வேதபோதக குருக்களின் வருகையின் பின்னர் தனிப்பங்காக மாற்றப்பட்டு அம்மக்களின் ஆன்மீக, சமூக தேவைகள் நிறைவு செய்யக்கூடியதாக இருந்தது. 1928 ஆம் ஆண்டில் இம்மக்களின் மரியன்னை தேவாலயம் ஒன்று இங்கு அமைக்கப்பட்டதாக வரலாறு கூறுகின்றது.

வண. பிதா. மோறோ அடிகளாரைத் தொடர்ந்து அருட்பணி. J. P. தேவராஜா அடிகளார் பங்கின் பொறுப்பை ஏற்று பங்குத்தந்தையாக இரணைதீவு 1974 ஆம் ஆண்டு பணியாற்றத் தொடங்கினார். இவர் அங்குள்ள மக்களை முழுமனித ஆளுமையில் வளர்த்து வளர்ச்சிபெற்ற சமுதாயமாக மாற்ற தன்னை முழுவதும் அர்ப்பணித்து தனது மக்களை வழிநடத்தி வந்தார். நற்செயல்களாலும், சாட்சிய வாழ்வினாலும் உணர்ந்துகொண்ட இச்சமூகத்தின் பாரிய தேவைகளை அருட்தந்தை உணர்ந்தவராய் தன்னுடன் இணைந்து பணியாற்ற திருக்குடும்ப சகோதரிகளை அங்கு வரவழைப்பதென முடிவுசெய்தார். இதற்காக அவர் பல்வேறு வகையில் கஷ்டமான முயற்சிகளை மேற்கொண்டார். அவருடைய இந்த முயற்சியின் பலனாக திருக்குடும்பக் கன்னியர்கள் அத்தீவில் பணியாற்றுவதற்கான அனுமதியையும் பெற்றுக்கொண்டார். இது அச்சமூகத்துக்கு மகிழ்ச்சியான செய்தியாக மட்டுமல்ல கல்வி முன்னேற்றத்துக்கான மாபெரும் ஆரம்பமாகவும் இருந்தது.

காலம் கனிந்தது 1974 ஆம் ஆண்டு ஆனி மாதம் 16 ஆம் நாள் சகோதரிகள் லூயிஸ், லெற்றீசியா,வில்பிரட் ஆகிய மூவரும் பணித்தளம் நோக்கி புறப்பட்டனர். அருட்திரு. தேவராஜா அவர்களே சகோதரிகளை அன்புடன் வரவேற்று அவர்களின் பணிக்குத் தேவையான வசதிகளை அமைத்துக் கொடுத்தார். இச் சகோதரிகளிடத்திலே மக்களின் வாழ்வை வளமாக்குவது மாத்திரமல்ல வாழ்வின் உயர்வுக்கான கல்வி வளர்ச்சி அருட்சகோதரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. 1974 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பணியை கண்டு கொண்ட அரசாங்கம் 1978 இல் ஒரு நிரந்தர கட்டடத்தை அமைத்து கல்விக்கான வசதியை அமைத்துக் கொடுத்தது.

அருட்சகோதரிகளின் வருகையின் பின் இடைவிலகிய மாணவர்கள் பாடசாலைகளில் சேர்க்கப்பட்டனர். அறிவு, ஒழுக்கம், சுத்தம் என்பன அதிகரிக்கப்பட்டன. உடற்பயிற்சி, சமயம், கலை, கலாசாரப் போட்டிகளில் பங்கு பெற ஊக்குவிக்கப்பட்டனர். பொதுநல பணிகளில் ஈடுபட்டனர். இளைஞர்கள், வளர்தோர்க்கான பல பக்திக் கூட்டங்களூடாக, கிறிஸ்தவ மதிப்பீடுகளில் வளர வழிகாட்டப்பட்டது. இவர்களது இம்முயற்சி தன்னம்பிக்கை உள்ள, உடல் நலம் மிக்க, மனபலம் வாய்ந்த மக்களாக வாழ உதவி புரிந்தது. தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டன. அருட்சகோதரி தாசில்லா மூலம் ஆரம்ப சுகாதார உதவிகள் வழங்கப்பட்டன. இம் மக்களின் வளர்ச்சியின் வெளிப்பாடாக அச்சமூகத்திலிருந்து பல ஆசிரியர்கள் உருவாகினார்கள். ஒருவர் தன்னை அருட்தந்தையாக அர்ப்பணித்தார். அருட்சகோதரி அவர்களின் வருகையின் பின்னர் ஆரம்ப வகுப்பாக இருந்த பாடசாலையில் 7 ஆம், 8ஆம், 9ஆம் வகுப்புகளாக உயர்ந்து 1983 ஆம் ஆண்டு 10 ஆம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து க.பொ.த.சாதரண தரம் வரை வளர்ச்சியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1974 ஆம் ஆண்டு சகோதரிகள் லெற்றீசியா, லூயிஸ், வில்பிரட் அவர்களும் 1978 ஆம் ஆண்டில் சகோதரிகள் கொஸ்கா, ஜேம்ஸ், வில்பிரட் அவர்களும் 1979 ஆம் ஆண்டில் சகோதரி தயா,1980 ஆம் ஆண்டில் மீண்டும் சகோதரி தாசில்லா, 1983 ஆம் ஆண்டில் சகோதரி மரியராணி, 1984 ஆம் ஆண்டில் சகோதரி றோஸ்மலர், 1985 ஆம் ஆண்டில் சகோதரி அமிர்தராணி ஆகியோருடன் இடைப்பட்ட காலங்களில் சகோதரிகள் ஏற்றியன், பிரான்சிஸ்கா, காமன்,ஜெயசீலி, இக்னேசியா ஆகியோரும் அங்கு பணியாற்றியதை அறிய முடிகின்றது.

இயற்கை அழகும், இறை ஆசீரும், பராமரிப்பும் நிறைந்த, இறைபயம் மிக்க மக்களது அமைதியான வாழ்விற்கு சோதனை மிகுந்த காலம் வந்தது. நாட்டின் யுத்த சூழல் அருட்தந்தையை, அங்கிருந்த மக்கள், இரணைதீவு சகோதரிகள் என யாரையும் விட்டு வைக்கவில்லை. 1992 ஆம் ஆண்டு ஆவணி மாதம் அங்கு வாழ்ந்த பெரும்பான்மையான மக்கள் மருதமடு அன்னையின் மேல் பக்தி கொண்டவர்களாக அன்னையின் திருவிழாவிற்காக மருதமடு திருப்பதியை நோக்கி சென்று விட்டனர். அவ்வேளை இத்தீவை அமைதியின்மை ஆக்கிரமிக்க அங்கு பதற்றம் தலைத்தூக்கியது. அருட்தந்தை கருணாரட்ணம் (கிளி) அடிகளாருக்கு நம்பிக்கையான ஒருவர் மூலம் அங்கிருப்பது பாதுகாப்பற்றது என்பதுடன் வெளியேறி செல்வதே பாதுகாப்பு எனவும் கூறப்பட்டது. ஆகவே அருட்தந்தை அவர்கள் மிகுதியாக இருந்த மக்களையும் அருட்சகோதரிகளையும் அழைத்துக் கொண்டு கையிலே சில நாட்களுக்கு தேவையான உடுபுடவைகளுடன் மறுகரைக்கு குறுகிய நேர பொழுதிற்குள் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வந்தடைந்த இடம் நாச்சிக்குடா எனும் ஒரு பகுதியாகும். நாச்சிக்குடா பகுதியிலே உள்ள ஒரு முஸ்லீம் பாடசாலையில் தங்கியிருக்க, அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாரும், அருட்சகோதரி எலிசபெத்தும் அவருடன் வந்த சகோதரிகளும் வலைப்பாட்டில் தங்கினர். இந்நேரம் மடுத்திருப்பதிக்கு சென்ற மக்கள் விழா முடிந்து வந்து இம்மக்களுடன் இணைந்து கொண்டனர்.

ஏறத்தாழ 6 மாத காலபகுதியின் பின்னரே அருட்தந்தையும், அருட் சகோதரிளும், மக்களும் இரணைதீவுக்குச் சென்று சென்று எஞ்சிய தமது பொருட்களை எடுத்துவர முடிந்தது. இவர்களுக்குப் பொறுப்பாக பணியாற்றிக் கொண்டிருந்த அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளார் பங்கின் திருவிழா முடிவுற்றதும் அருட்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரிடம் பங்கின் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, வலைப்பாட்டிற்கு சென்று தங்கினார். அக்கால பகுதியில் முழங்காவில் பங்கில் பணியாற்றிக் கொண்டிருந்த ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் அவர்களோடு எமது சகோதரி அலெக்சிஸ் அவர்களும் வலைப்பாட்டு குழுவிலிருந்து வந்து, அவரது தற்காலிக கொட்டிலிலேயே தங்கி, அம்மக்களுக்கு அருட்தந்தையுடன் இணைந்து சிறிது காலம் பணியாற்றி வந்தார். இதன் பின்னர் அருட்தந்தை கருணாரட்ணம் அடிகளாரின் உதவியுடன் 18.08.1992 அன்று முதல் மக்கள் அனைவரும் இணைந்து அருட்தந்தையின் வழிகாட்டலில் காடுகளை வெட்டி துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர். இவ்வாறு துப்புரவு செய்யப்பட்ட காணிகளை 1993



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் 195 குடும்பங்களுக்கு பிரித்துக் கொடுக்கும் பணியில் அருட்தந்தை அவர்கள் ஈடுபட்டார். இக்காலப்பகுதியில்தான் எமக்கான காணியும் வழங்கப்பட்டது.

இந்த காணித் துப்புரவு பணியில் சகோதரி எலிசபெத் அவர்களும், அருட்சகோதரி அலெக்சிஸ் அவர்களும் தம்மை அர்ப்பணித்தனர். பின்னர் சகோதரி நோபேட், சகோதரி ஆமன்டீன் இவர்களுடன் மக்கள் சிலரும் இளைஞர் சிலரும் இணைந்து உதவி புரிந்தனர். இவ்விடத்தில் ஒரு கொட்டில் அமைத்து எம் சகோதரிகள் தம் பணியை ஆரம்பித்தனர்

இதன் முன்பாக "வளன் அகம்" என்னும் பெயர்ப் பலகையே போடப்பட்டிருந்ததாகவும், ஒவ்வொரு பங்குனி 19ம் திகதியும் மடத்திலே சூசையப்பர் திருவிழா கொண்டாடப்படுவதாகவும் கூறப்படுகின்றது. காரணம் முன்னர் ஒருநாள் இரணைதீவிலிருந்த ஆண்களில் பலரை இராணுவம் கைதுசெய்து பின்னர் அவர்களை விடுவித்த நாள் அதுவாகும் என்பதால் அதை நன்றியின் நாளாக நினைவு கூருவதாக குறிப்பிட்டனர். தற்போது எமது மடத்திற்கு முன்பாக அமைந்துள்ள தொழிற்பயிற்சி நிலையமும், கடையும் அமைந்துள்ள காணிப்பகுதியிலேயே இம்மக்களுக்கான வழிபாட்டுத் தேவைக்கான தற்காலிக ஆலயம் ஒரு கொட்டிலாக 01. 09. 1993 அமைக்கப்பட்டது. அதற்கடுத்த 1994 ஆண்டுக்குமான கோவில் திருவிழா அங்கேயே கொண்டாடப்பட்டது.

சகோதரிகள் ஆமென்டீன், நோபேட் ஆகியோரே அங்கு தங்கியிருந்து தமது பணியை அக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்காக ஆரம்பித்தனர். அருட்சகோதரி ஆமென்டீன் அவர்கள் குழுத்தலைவியாக பணியாற்றினார். அருட்சகோதரி ஆமென்டீன் அவர்கள் தனது துறவற வாழ்வின் 50 வது ஆண்டு யூபிலி விழாவையும் இப்பங்கிலேயே நினைவு கூர்ந்து நன்றிப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் அருட்தந்தை ஞானரட்ணம் அடிகளார் அவர்களே பங்குத்தந்தையாக பணியாற்றினார். இவருடன் அருட்தந்தை றொகான் அவர்களும் அருட்தந்தை பீற்றர் அவர்களும் உதவி பங்குத்தந்தையர்களாக பணியாற்றினர்.

1995 காலப்பகுதியில் பங்கின் பொறுப்பை ஏற்ற அருட்பணி ஞானரட்ணம் அடிகளார் இக்கிராமத்து பெரும்பான்மையான மாணவர்கள் முழங்காவில் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்றதனால் அவர்களது அறிவு, ஆன்மீகம், ஒழுக்க வளர்ச்சி கருதி அன்றைய காலப்பகுதியில் மாகாணத்தலைவியாக இருந்த அருட்சகோதரி சோபியா பஸ்ரியாம்பிள்ளை அவர்களிடம் கல்விப் பணிக்காக ஒரு அருட்சகோதரியை வழங்கி உதவுமாறு கோரிக்கை முன்வைத்திருந்தார். அவரும் தலைமைத்துவ குழுவோடு கலந்தாலோசித்து அருட்சகோதரி, அமிர்தராணி அவர்களை 1996ஆம் ஆண்டில் இங்கு அனுப்பிவைத்தார்.

1996 முதல் 2002 வரை இச்சகோதரி முழங்காவில் மகாவித்தியாலயத்தில், முக்கியமாக இக்கிராமத்து மாணவர்களின் நலன் கருதியே அர்ப்பணிப்போடு பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் சகோதரிகள் தங்குவதற்கு போதிய இடவசதி இன்மையால் தற்போது பிரதான கட்டடம் அமைந்துள்ள இடத்தில் மூன்று சகோதரிகளும் தங்க கூடிய வகையில் ஒரு கட்டடம் அமைக்கப்பட்டு ஓட்டினால் கூரை போடப்பட்டது. வரவேற்புக்குரிய முன் பகுதியில் வருவோர் இருப்பதற்காக மண்ணினால் திண்ணை அமைக்கப்பட்டிருந்தது. இக்கட்டடத்தில் சகோதரிகள் நோபேட்டும், ஆமென்டீனும் தங்கியிருக்க சகோதரி அமிர்தராணி அவர்கள் அருகிலிருந்த சிறிய கொட்டிலிலேயே தான் தங்கியிருந்து பணிசெய்ததாக கூறினார். இச்சகோதரிகள் அங்கிருந்த மக்களின் வாழ்வின் நலன்களில் அக்கறை கொண்டவர்களாக வீடுகள் தரிசித்தல், அருட்சாதன ஆயத்தப்படுத்தல், கல்விப்பணி, ஆன்மீகப்பணிகள், இளைஞர் உருவாக்கம், பக்தி சபைகளை ஊக்குவித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டனர். தற்போது ஏறத்தாழ 450 குடும்பங்கள் வரையில் உள்ளனர்.

1993 தொடக்கம் 1996 வரையாக அருட்தந்தை பணியாற்றியதைத் தொடர்ந்து அருட்தந்தை ஞானராஜ் அடிகளார் பங்கின் பணியை ஏற்றார். இவரும் எம் சகோதரிகளை இணைத்து 1996-1999 வரை இம் மக்களுக்கு நற்பணியாற்றினார். 2002 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் தான் இன்று நாம் காணும் நிரந்தரக் கட்டிடம் அமைக்கப்பட்டு சற்று வசதியாக எம் சகோதரிகள் தங்கி வாழ்ந்து பணியாற்ற உதவியாக அமைக்கப்பட்டது. இக்கட்டிடம் அன்றைய மாகாணத் தலைவி அருட்சகோதரி அஞ்சில்லா ஜேம்ஸ் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**1992 தொடக்கம் முதல் இன்று வரை இங்கு பணியாற்றிய அருட்சகோதரிகளின் விபரங்கள்:**

1. அருட்சகோதரி அலக்சிஸ் மனுவல்பிள்ளை
2. அருட்சகோதரி நோபேட் பஸ்ரியாம்பிள்ளை
3. அருட்சகோதரி ஆமென்டின் அந்தோனிப்பிள்ளை
4. அருட்சகோதரி டோமினிக் பாக்கியநாதர்
5. அருட்சகோதரி அமிர்தராணி சேவியர்
6. அருட்சகோதரி அமலி டபரேறா
7. அருட்சகோதரி பார்பரா குரூஸ்
8. அருட்சகோதரி எல்சி சுவாம்பிள்ளை
9. அருட்சகோதரி ஈவோன் சிமியோன்
10. அருட்சகோதரி கிறிஸ்ரபெல் இளையதம்பி
11. அருட்சகோதரி றோஸ்மேரி டேவிட்
12. அருட்சகோதரி அனற்பிறீடா ஸ்ரனிஸ்லஸ்
13. அருட்சகோதரி கீத்தலோஜினி சூசைமுத்து
14. அருட்சகோதரி கிறேஸ்மேரி ஸ்ரனிஸ்லஸ்
15. அருட்சகோதரி லூட்ஸ் யோசப்
16. அருட்சகோதரி றோஸ்மேரி முடியப்பன்
17. அருட்சகோதரி மரியடெய்சி செபமாலை
18. அருட்சகோதரி ஈவோன் மரிஸ்ரெலா றோச்
19. அருட்சகோதரி காமன் இம்மானுவேல்
20. அருட்சகோதரி ஜெயந்தி ஞானப்பிரகாசம்

பொது நூலகம்
இரணைதீவு, பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*21. அருட்சகோதரி பேக்மன்ஸ் மனுவல்பிள்ளை*
*22. அருட்சகோதரி றெஜினா சந்தியாப்பிள்ளை*
*23. அருட்சகோதரி ஸ்ரெலா துரைச்சாமி*
*24. அருட்சகோதரி மேசிடெஸ் செல்வநாயகம்*
*25. அருட்சகோதரி லூர்த்து மேரி சந்தியாப்பிள்ளை*
*26. அருட்சகோதரி அன்ரனிற்றா மாற்கு*
*27. அருட்சகோதரி றொமியூல்ட் மனுவல்பிள்ளை*
*28. அருட்சகோதரி மேரிறோசி சிலுவைதாஸ்*
*29. அருட்சகோதரி அன்ரனற்ஷோபா வின்சன்ற்*
*30. அருட்சகோதரி கொஸ்கா ஜோக்கிம்*
*31. அருட்சகோதரி அம்புறோசின் மார்க்*
*32. அருட்சகோதரி சுபாசினி*

## இரணைதீவில் பணியாற்றிய அருட்சகோதரிகள்

*1. அருட்சகோதரி வில்பிரட் முடியப்பு*
*2. அருட்சகோதரி லூயிஸ் அந்தோனிப்பிள்ளை*
*3. அருட்சகோதரி லெற்றிசியா வைத்தியாம்பிள்ளை*
*4. அருட்சகோதரி தார்சில்லா பஸ்ரியாம்பிள்ளை*
*5. அருட்சகோதரி கொஸ்கா ஜோக்கிம்*
*6. அருட்சகோதரி ஜேம்ஸ் கூஞ்ஞ*
*7. அருட்சகோதரி பிரான்சிஸ்கா குருஸ்*
*8. அருட்சகோதரி ஏற்றியன் பெர்னான்டோ*
*9. அருட்சகோதரி சவரீனா லெம்பேட்*
*10. அருட்சகோதரி ஈவோன் சைமன்*
*11. அருட்சகோதரி யோசப்பின் மேரி ராஜரட்ணம்*
*12. அருட்சகோதரி ஜெயசீலி றொட்றிக்கோ*
*13. அருட்சகோதரி தயாநாயகி செபமாலை*
*14. அருட்சகோதரி றோஸ்மலர் மனுவல்பிள்ளை*
*15.அருட்சகோதரி அமிர்தராணி சேவியர்*
*16. அருட்சகோதரி றோஸ்மேரி டேவிட்*
*17. அருட்சகோதரி ஹேர்மன் யோசப்*
*18. அருட்சகோதரி எலிசபெத் அந்தோனிப்பிள்ளை*

இவ்வாறாக திருக்குடும்ப கன்னியர்கள் மக்களோடு மக்களாக சேவை செய்து இன்றுவரை எமது கிராம ஆன்மீக மற்றும் கல்வி வளர்ச்சியில் தங்களுடைய தார்மீகப் பணியாற்றி வருகிறார்கள்.

**இணைப்பு**

**திருக்குடும்ப கன்னியர்மட 25வது யூபிலி விழா சிறப்பு மலர் - இரணைமாதா நகர்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவு அது இரணைதீவு

நாற்புறமும் அலைகள் ஆர்ப்பரிக்க ஆண்டவன் குடிகொள்ளும் சொர்க்க
பூமியது இரணைதீவு.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என ஒற்றுமையும் உயர் சிந்தனையும்
கொண்டவர்களாய் செல்வம் கொழிக்க கட்டுக்கட்டாய் சிப்பம் கட்டி

இலங்கைத்தீவின் மேல்முனை முதல் கீழ்முனை வரைக்கும் கொண்டு சென்று
பல்லூர் பார்த்த மூத்த குடிகள் அங்கு நிலை கொண்ட முத்து அது இரணைதீவு.

சீரும் சிறப்புமாய் பாண்டியன் வழிவந்த பரவர் குலமாம் எம் குலம்
கடலோடு விளையாடி காற்றோடு போராடி

கொம்பன் சுறா, ஓங்கில் சேர் பேராமை கொண்டு பஞ்சம் பசி ஏதுமறியா
திரைகடல் ஓடி திரவியம் சேர்க்கும் இனமது எம்மினம்.

இலங்கைத்தீவில் கிளிநொச்சி மாநகரின் பூநகரி மண்ணுக்கு வந்தார்க்கு
அமுதூட்டி ஆறுதல் கொடுக்கும் அடையாளம் இரணைதீவு.

அனுமன் தூக்கிச்சென்ற மலைத் துகல்களில் ஒன்றிது
நாற்புறமும் கடலால் சூழப்பட்டு இரண்டு நிலப்பரப்புக்கள் ஒட்டி

இலங்கையின் இரட்டை குழந்தை போல் தோற்றமளிக்கும் எம் தீவு.
பார்ப்பவர், வருபவர் மனங்களை கொள்ளை கொண்டு தனது அழகினால்

அனைவரையும் ஈர்த்து மீண்டும் மீண்டும் நினைக்க
இன்பமும், மகிழ்ச்சியும் உண்டு பண்ணும் பதி அது இரணைதீவு.

காலைக் கதிரவன் அலைகளூடே மேலெழுந்து வருவதும்
மீண்டும் அதை பேரலை விழுங்குவதும்

பல மைல் தூரம் பறந்து வரும் பட்சிகளும்
உடல் நனைந்து களைப்பாறுவதும்

ஆநிரைகள் பரந்து விரிந்த புற்றறை நோக்கி நகருவதும்
கண்ணி புதைக்கும் குமரர்கள் மேடுபிட்டி தேடி அலைவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் கம்பியும் காலுக்கு சப்பாத்துமாய்
புதையல் அட்டை தேடி தலைமாலை வரைக்கும்
சீசன் பார்த்து, வெள்ளம் வடு பார்த்து நகரும் ஆடவரும்

கன்னியிளம் பெண்கள் இடுப்பில் குடத்துடனே
இங்கிதமாய் ஊர்க்கதை பல கதைத்து செம்படி சென்று திரும்புவதும்

எருவட்டி நீள் தரையில் பொறுக்கி வந்து சிற்பியுடன் எரித்து
சுண்ணாம்பு வடித்தெடுப்பதற்காய் திரிவதுமென

காலை பொழுதே சுறுசுறுப்புடன் தொடங்குவதுமாய்
அமையும் எங்கள் ஊர் அது இரணைதீவு.

வள்ளம் பாய் பார்த்து கரைவரும் கடல் பண்டங்களை பக்குவமாய் கூறி எடுத்து
ஊருக்கு கறிகொடுத்து மீதியில் இலாபம் பார்த்து
அள்ளி அள்ளி வழங்கும் மனங்கொண்டவர் எம்மவர்.

ஒற்றைபனையடியின் மதி பார்த்து வலைபடுத்து கரை வந்து சேர்கையில்
கையில் செம்புடன் பழஞ்சோற்று பானையுடன் சுட்டகருவாடும்
ஒடியலுடனும் ஏங்கும் விழிகளுடன் காத்திருக்கும் பெண்டிரும்

ஆ தனில் பால் கறந்து மோரும் தயிரும் வெண்ணெயுமாய்
கடைந்தெடுத்தும் ஊராரின் வெப்பம் தணிப்பார் எத்தனையோ

இரட்டை சடைபோட்டு வெள்ளையுடையணிந்து
அன்னநடைபோடும் மாணவியரும்

நீலக் காற்சட்டையும் வெள்ளை சட்டையுடன் மிடுக்காய்
தோள் சுமந்த புத்தகப்பையுடன்
கோயில் மணியொலிக்க பள்ளிவரும் பாலகனின் அழகோ தனி.

ஊரின் மத்தியில் நீண்டெழுந்து இருமணிக் கோபுரங்கள்
பக்க அறை ஒன்றும் போட்டிக்கோவுமாய் நீட்டி நிமிர்ந்து
அருள்பாலிக்கும் ஆலயமும் கலங்கரை தீபமுமாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வானுயர எழுந்து நிற்கும் ஒல்லாந்தர் கோபுரமும்*
*மழைநீர் சேகரிக்கும் மதிநுட்ப நிலக்கீழ் அறைகளும்*

*கட்டடக்கலைக்கே பெயர் போன ஒல்லாந்த நினைவுக்கற்களும்*
*சீனர் வந்துபோன தடங்களும்*

*வெள்ளைக்கார சுவாமிகள் வந்து தங்கிய மதிநுட்ப அறைகளும்*
*கற்குகை கெபியும் வரலாற்றுக்கே வரலாறு கொடுக்கும் தீவு அது இரணைதீவு.*

*காலைக்கதிரவன் மண்ணை முத்தமிட*
*மாதா கோவில் புறாக்களின் உறுமல் தொழிலாளர்களைத் துயிலெழுப்ப*

*குருவித்தலையன், ஆனைத் தலையன், சின்னக்கறுவல்,*
*பெரியகறுவல், சட்டியன், வீசுகொம்பன் என*

*தொழிலாளர் வள்ளங்களும் தொழில் செல்ல*
*ஆடவன் வருவானென கடல்மேல் விழிவைத்து காத்திருக்கும்*
*தீவு அது இரணைதீவு.*

*மருசலின் அண்ணாவியின் நாடகமும்*
*புலவர் சந்தியாவின் குரல் வளமும்,*
*சக்கரியாஸ் எசேக்கியேல் நகைச்சுவை நயமும்*
*மக்களை வயிறு குலுங்க சிரிக்கவைத்து*
*கலைநயத்திற்கே பெயர்போன தீவு அது இரணைதீவு.*

*நயப்பு*
***ஊரான் திரு. அ. கொன்சலஸ்***
*ஆசிரியர்*
*கிளி/வலைப்பாடு றோ. க. வித்தியாலயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவு – இரணைமாதாநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க வரலாற்று நிகழ்வுகளுடன்....

இலங்கைத்தீவின் வடபகுதியில் காணப்படும் தீவுக்கூட்டங்களில் மிகப் பழமைவாய்ந்ததும் பல நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தமிழ் பாரம்பரியங்களை கொண்ட மக்கள் வாழ்ந்து வரும் அழகிய தீவே எமது இரணைதீவு. நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டுள்ளமையினால் கடற்றொழில் இங்கு பிரதானமானதாவும் மேட்டுப்பயிர் செய்கை மற்றும் மந்தை வளர்ப்பு என்பன ஜீவனோபாயமாகக் கொண்டும் செயற்பட்டு வந்துள்ளனர். இங்கு மீன்கள் உற்பத்தியாகும் கண்டமேடைகள் தீவைச்சுற்றி காணப்படுவதால் கடற்செல்வங்கள் பெருகுவதில் குறைவே இருந்ததில்லை. கடற்றொழிலை பிரதான தொழிலாகக் கொண்ட எமது முன்னோர்கள் தம்மிடமிருந்த மரத்தாலான கடற்கலங்கள் மற்றும் சணல் வலைகள் என்பன மூலம் தொழில் புரிந்தும் வந்துள்ளனர். கைத்தொழில் விருத்திக்குப் பின்னரான காலப்பகுதியில் பெரிய இயந்திரப் படகுகள் மூலம் தொழில் நடவடிக்கைகள் சற்று மாற்றம் பெற்று வல்வெட்டித்துறை, வடமராட்சி கடல் பகுதிகளிலும் தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளனர். குறிப்பாக கடலில் பல மைல் தூரம் சென்று GPS தொழில்நுட்பம் இல்லாத காலப்பகுதியில் கூட மதிபார்த்து இயற்கை அடையாளங்கள் ஊடாக தமது தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்துள்ளனர். இக்காலமுதல் இன்றுவரையும் கரைவலை, சிறகு வலை, களங்கட்டி, அடையல் வலை, திருக்கை வலை, நண்டுவலை, சங்கு, முத்துகுளித்தல் போன்ற தொழில்களை பராம்பரிய தொழில்களாக செய்து வந்துள்ளனர்.

**கடற்றொழில் சங்க தோற்றம்**

எமது முன்னோர்கள் ஆரம்ப காலங்களில் கடலில் பிடிபடுகின்ற கடல் திரவியங்களை தனியார் வியாபாரிகளுக்கே சந்தைப்படுத்தி வந்துள்ளனர். 1962ல் கடலட்டைத் தொழிலை பிரதானமாகக் கொண்டு பூநகரியில் அமைக்கப்பட்ட அட்டைச்சங்கத்தின் கிளையாக செபமாலை மாதா அட்டைக் கொள்வனவுச் சங்கம் என்ற பெயருடன் தமது நடவடிக்கையினை ஆரம்பித்தது. யாழ் பண்ணைக்கு அருகில் இயங்கி வந்த அட்டை சங்கத்தின் தலைமைக்காரியாலயத்தின் ஊடாக தமது தொழிலாளர்களின் அட்டைகளை எமது அட்டை சங்கத்தின் பெயரிலேயே சிங்கப்பூருக்கு ஏற்றுமதி செய்து வந்தது. இக்காலப்பகுதியில் சங்கத்தின் தலைவராக அமரர் அ.அமிர்தநாதன் செயலாளராக திரு செ.ஜேம்ஸ் பொருளாளராக அமரர் வி.பத்திநாதன் ஆகியோர் பணிசெய்தனர். அட்டை சங்கத்தின் செயற்பாடுகள் குன்றி காணப்பட்ட வேளையில் 1967–1970 வரையிலான காலப்பகுதியில் தொழிலாளர்களின் தொலைகின்ற வலைகள் மற்றும் தொழில் உபகரணங்களை ஏனைய சங்கங்களுடன் இணைந்து பெற்றுக் கொடுப்பதும், அரசாங்கத்தின் மூலம் கிடைக்கின்ற பொருட்களை பெற்றுக் கொடுப்பதும் செயற்பாடாக இருந்து வந்தது.

1970களில் அட்டைத் தொழிலை செய்பவர்கள் தவிர்ந்த ஏனைய தொழிலாளர்களைக் கொண்டு 'மோறோ கடற்றொழிலாளர் சேவா சங்கம்' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் ஓர் சங்கம் உருவாக்கப்பட்டது. இச் சங்கத்தின் தலைவராக அமரர் அ.கீதபொன்கலன் செயலாளராக செ.அந்தோனி பொருளாராக சி.அருட்பிரகாசம் என்பவர்கள் பணி புரிந்தனர். இக்காலப்பகுதியில் சங்கத்தின் செயற்பாடுகளில் பங்குத்தந்தை அமரர் ஹென்றி மோறோ (பிரான்ஸ்) அவர்கள் மூலம் நீர்கொழும்பு செடேக் நிறுவனத்தின் செயற்பாடுகளுடன் தொடர்புகளை பேணி வந்தார். இக்காலப்பகுதியில் அருட்தந்தை ஹென்றி மோறோ மாற்றாலாகி தமது தாய் நாடு சென்றவேளையில் அருட்தந்தைதேவராஜ் அவர்கள் சங்கத்தின் நடவடிக்கைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது அயராத முயற்சியினாலும் பூநகரிப் பிரதேசத்தில் கடற்றொழிலாளர் சங்கம் என்ற பதிவினை எமது சங்கம் பெற்று இருந்தமையினாலும் பூநகரி பிரதேசத்தில் முதன் முதலாக கடற்றொழிலாளர் சங்கம் என்ற பதிவு இருந்தமையினாலும் அன்றைய நீர் கொழும்பு ஆயர் வணக்கத்திற்குரிய கருதினால் தோமஸ் கூறே அவர்களிடம் இருந்து 2 எஞ்சின் படகுகளை பெற்றுக் கொடுப்பதற்கு சாதகமாக அமைந்தது குறிப்பிடத்தக்கது.

மேலும் 1973ம் ஆண்டு காலப்பகுதிகளில் பூநகரி அட்டை கொள்வனவு சங்கத்திற்கு அரசாங்கத்தினால் 3 இயந்திரப் படகுகள் வழங்கப்பட்ட போது பூநகரி பிரதேசத்திலேயே இரணைதீவு கடற்றொழிலாளர் சங்கத்தில் மட்டுமே இயந்திரப்படகுகளை கையாளத் தெரிந்த தொழிலாளர் காணப்பட்டமையினால் 3 படகுகளுடன் மேலும் 2 படகுகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. மேலும் வருடாவருடம் ஆனி மாதம் தொடக்கம் புரட்டாதி வரையிலான காலப்பகுதியில் தாளையடி, செம்பியன்பற்று, சுண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் தங்கி வாடிகள் அமைத்து கருவாடுகளை பதனிட்டு சிப்பம் (பொதி) கட்டி கொழும்பு சந்தைக்கு அனுப்பி வந்தனர்.

1983-6-13 அன்று இடம்பெற்ற நிர்வாக மாற்றங்களின் மூலம் சங்கத்தின் பெயர் மாற்றம் செய்யப்பட்டு ‘புனித செபமாலை மாதா மீன்பிடிச் சங்கம்’ எனும் பெயரில் இயங்க ஆரம்பித்தது. சங்கத்தின் தலைவராக திரு. அ. அந்தோனிப்பிள்ளை, செயலாளராக திரு செ. அந்தோனி (செபமாலை) பொருளாளராக அமரர் அ. கி. ஜெயசீலன் (சமாச நெறியாளர்) அவர்களும் பணிபுரிந்தனர். இந் நிர்வாகத்தின் மூலம் வெளி வியாபாரிகளிடமிருந்து தமது தொழிலாளர்களை மீட்டு அனைத்து தொழிலாளர்களையும் ஒன்றுபடுத்தி உழைக்கின்ற ஓர் அமைப்பாக வலுவடைந்து கருவாடுகளை கொழும்பு சந்தைக்கு அனுப்பி தொழில்நடவடிக்கைகளை விரிவாக்கம் செய்து வந்தனர்.

பின்னர் 1986ல் நிருவாக மாற்றம் செய்யப்பட்டது. தலைவராக திரு. மு.எமிலியாம்பிள்ளை செயலாளராக செ. அந்தோனி (செபமாலை) பொருளாளராக அமரர் அ.கி. ஜெயசீலன் ஆகியோரும் நெறியாளர்களாக தோ.இருதயநாதன், அமரர் அமல்ராஜ் பெர்னான்டோ, அமரர் அருமைநாயகம் போன்றோர் பணி புரிந்தார்கள் இக்காலப்பகுதியில் தொழிலாளர் நலன்கருதிய செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்று வந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1992ல் இரணைதீவிலிருந்து இடம்பெயர்ந்து இரணைமாதா நகரில் மக்கள் குடியேறினர். இங்கு நிர்வாக மாற்றங்கள் இடம்பெற்று தலைவராக அமரர் செ.சூசைநாதன்(JP) உப தலைவராக அ.எட்வேட் போல், செயலாளர் ச.அமலறஞ்சினி பொருளாளராக ம.யாக்கோபு ஆகியோரும் தங்களது அர்ப்பணிப்பான செயற் பாட்டின் மூலம் தொழிலாளரின் அன்றைய தேவையை நிறைவுசெய்துள்ளனர். 1993-10-28ல் எமது சங்கம் 'இரணைதீவு இரணைமாதாநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கம்' பதிவு இலக்கம் K-157 என புதிய பெயரில் பதியப்பட்டது. 1994ல் NECORD நிறுவன நிதி அனுசரனையில் சங்கத்திற்கான நிரந்தர கட்டடம் அன்றைய அரசாங்க அதிபர் அமரர் இராசநாயகம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அத்துடன் 1995ல் நிர்வாக மாற்றம் இடம்பெற்றது. தலைவராக திரு. அ.கிறிஸ்ரியான், செயலாளராக திரு. பீ.றூபன், பொருளாளராக திரு. சி.அருட்பிரகாசம், திரு. சூ.செல்வரட்ணம், அமரர் அ. கி ஜெயசீலன் ஆகியோரும் நிர்வாகத்தில் முக்கிய பதவிகளை வகித்தனர். இக்காலப்பகுதியில் செ.சூசைநாதன் முதன்முதலாக பூநகரியின் சமாசத் தலைவராக செயற்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து 1999 களில் நிர்வாக மாற்றம் ஏற்பட்டு தலைவராக அமரர் அ. அருமைநாயகம் உப தலைவராக அமரர் தே. கிப்பொலிற், செயலாளராக அ. சூசைநாதன், பொருளாளராக ஜே. அன்பரசன் ஆகியோரும் நிருவகித்தனர். இவர்கள் மீன், கருவாடு போன்றவற்றை கொள்வனவு செய்து சந்தைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்களைத் தொடர்ந்து 2003 தொடக்கம் 2007 பாரிய இடப்பெயர்வு காலம்வரை தலைவராக அ. அந்தோனி, செயலாளராக நீ. யோன்பிரான்சிஸ் பொருளாளராக ச. அலோசியஸ்வாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு தரகு பெற்றுக் கொள்ளல், எரிபொருள் விற்பனை நடவடிக்கைகளை சங்கம் மேற்கொண்டும் தொழில் நடவடிக்கைகளை நிர்வகித்தும் வந்துள்ளனர். இக்காலப்பகுதியில் திரு. அ. அந்தோனிப்பிள்ளை அவர்கள் சமாசத்தலைவராக செயற்பட்டது குறிப்பிடத்தக்கது.

இடப்பெயர்வின் பின்னர் 2009-11-27 ல் இரணைமாதா நகருக்கு மீள் குடியேறினர். தொழில் புரிவதற்கான எவ்வித உபகரணங்களும் அற்ற நிலையில் எமது தொழிலாளர்களுக்கு சில அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவிக்கரம் நீட்டின. இக்காலப்பகுதியில் அமரர் அ.கி.ஜெயசீலன் தலைவராகவும் உப தலைவராக சு. செபஸ்ரியான்பிள்ளை திரு. யா.அன்ரனி செயலாளராகவும் திரு. அ.பி.நோயல் பொருளாளராகவும் சேவையாற்றினர். எரிபொருள் விநியோகம், தொழிலாளர் தரகு என்பவற்றுடன் சங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வடக்கின் வசந்தம் திட்டத்தில் 19 பயனாளிகளுக்கு இளைநார் படகுகளும் வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கப்பட்டன. UNDP நிறுவனம் 7 பயனாளிகளுக்கு இழைநார் படகும் வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கினர். ZOA நிறுவனம் 2 பயனாளிகளுக்கு இழைநார் படகும் வெளியிணைப்பு இயந்திரங்களும் வழங்கியது.

எமது தொழிலாளர்கள் தனியார் வியாபாரிகளிடம் தாம் வழங்கும் கடல் திரவியங்களின் விலையின் உச்ச பயனை அடைய முடிந்திருக்க வில்லை. அத்துடன் கடன் சுமைகளும் எமது தொழிலாளர்களை தனியார் வியாபாரிகளிடம் மண்டியிடச் செய்தன. மேலும் கால ஓட்டத்தில் எமது கிராமமும் பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கிக் காணப்பட்டது. இவையனைத்தையும் கருத்திற்கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தொழிலாளர்கள் தமது ஊழியத்திற்கு ஏற்ப முழுப்பயனையும் அடைவதற்கு கடற்றொழிலாளர் சங்கம் மூலம் மட்டுமே இஸ்திரமான செயற்பாட்டை செயற்படுத்த முடியும் என மக்கள் நம்பினர். இதனால் 2011-03-20ல் புதிய நிர்வாக தெரிவு இடம்பெற்றது. இக் கூட்டத்தில் கிராம வளர்ச்சி நலனுக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுபவர்களை முக்கிய பதவிகளை பொறுப்பேற்குமாறு கேட்டுக் கொண்டதற்கு இணங்க தலைவராக அமரர் அ. கி. ஜெயசீலன், உப தலைவராக யா. ஜேசுதாசன் செயலாளராக திரு. எ. லூயிஸ்றாஜன் பொருளாளராக ப.எட்மன் மைக்கல், ஆகியோருடன் நிர்வாக உறுப்பினர்கள் அ.அன்ரனி நியூமன் பி.அல்போன், ச.லூயிஸ்வாஸ், அ.எட்வேட் போல், ச.அன்ரன்ரவீந்திரன், பொ.ஜெயதாஸ், கணக்காளர்களாக சு.யோண்கென்னடி, அ.அகஸ்ரின் கொள்வனவாளர் திரு. ச.ஜெயசீலன், ஆகியோர் தாமாகவே முன்வந்து பதவிகளை ஏற்றனர்.

முக்கிய நோக்கமாக 'நவீன பொருளாதார உலகின் ஒழுங்குகளுக்கு அமைய கடல்வளங்களை பாதுகாத்து மீனவ தொழிலை விருத்தி செய்தல்' என்பதும் குறிக்கோளாக "நீடித்து நிலைத்த அபிவிருத்தியூடாக தொழிலாளருக்கு மேம்பட்ட சேவையை வழங்குவதும் அங்கத்தவர்கள் உச்ச பயனை அடையும் வகையில் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்தலும்" என்ற விருது வாக்கிற்கிணங்க 2011-09-29 ல் தொழிலாளர்களது அனைத்து கடலுணவுப் பொருட்களையும் கொள்வனவு செய்து விற்பனை செய்ய தொடங்கியது. இச் செயற்பாட்டினையும் ஆக்கத்திறனையும் வெளிப்படைத் தன்மையையும் கூட்டுறவின் வெற்றியின் செயற்றிட்டங்களையும் நேரில் பார்வையிட்ட அரசசார்பற்ற நிறுவனங்களான ZOA, ILO என்பன உதவிகளைச் செய்வதற்கு முன்வந்தன. அதனடிப்படையில் ZOA நிறுவனம் ஒரு மில்லியன் பணத்தொகையினை வழங்கி வெளி வியாரிகளிடம் தொழிலாளர் பெற்ற கடனை செலுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்கியது. இதன் பயனாக தொழிலாளர்கள் ஒன்றுபட்டு உழைக்க வழிகோலியது. இதனைத் தொடர்ந்து தொழிலாளரிடமிருந்து கொள்வனவு செய்யும் நீலக்கால் நண்டினை விற்பனை செய்வதற்காக TSF நிறுவனத்துடன் இணைந்து கொள்வனவு விற்பனை செய்யும் செயற்பாட்டினை தொடங்கியபோது நாச்சிக்குடா சந்தையில் நண்டின் விலையில் பாரிய மாற்றங்கள் காணப்பட்டன.

எம்மிடமிருந்து கொள்வனவு செய்யும் நண்டுகளை அவித்தெடுத்து இலுப்பக்கடவையில் வைத்து பதனிடும் வேலையை மேற்படி நிறுவனம் செய்த போது 25-30 வரையிலான எமது பெண்கள் அங்கு சென்று வேலை செய்தனர். அதனை தொடர்ந்து ILO நிறுவனம் எமது பகுதியில் 150-200 வரையான பெண்கள் வேலை செய்யும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக 120'x45' அடி விஸ்திரணம் கொண்ட நண்டு உடைக்கும் தொழிற்சாலை அமைத்தனர். இவ்வாறான செயற்பாடுகள் ஊடாக 2010,2011,2012 ஆகிய ஆண்டுகளில் வட மாகாண ரீதியில் சிறந்த சங்கங்களுக்கான தெரிவில் தொடர்ந்து முதலிடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன் பயனாக கூட்டுறவுத் திணைக்களம் ஊடாக வழங்கப்பட்ட ஒரு மில்லியன் தொகையினூடாவும் தொழிலாளர்களின் பங்களிப்பூடாகவும் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு நிருவாக தெரிவிற்காக கோரியபோது அதே நிருவாகம் திறம்பட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்பட்டதன் காரணமாக இந்நிருவாகமே நடைமுறையில் செயற்படுமாறு தொழிலாளரால் கேட்டுகொள்ளப்பட்டது. இவ்வேளையில் ச. டெல்வினஸ் பணியாளராக நியமிக்கப்பட்டு செயலாளராகவும் செயற்பட்டுள்ளார். இவரே இன்றுவரை பணியாளராக செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2015 ஆம் ஆண்டு நிருவாக மாற்றம் இடம் பெற்றது. தலைவராக திரு ப.எட்மன் மைக்கல் உப தலைவராக திரு டோ.பிரதீபன் செயலாளர் திரு ச.பற்றிக்நிரஞ்சன், உப செயலாளர் லக்ஸ்மன் பொருளாளர் திரு. அ.கொண்சலஸ், நிருவாக உறுப்பினர்களாக சி.தணிக்கிளாஸ், பீ. றூபன், டே. பர்னாந்து, றோ. மாசில்லாமணி ஆகியோர் நோக்கங்கள் குறிக்கோள்களுக்கு இணங்க செயற்பட்டனர். இக்காலத்தில் கடல் விவசாயங்களான பாசிவளர்ப்பு, மீன் வளர்ப்பு கடலட்டை வளர்ப்பு செயற்பாடுகள் ஊக்கப்படுத்தப்பட்டு வந்தன. அத்துடன் IOM நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் கடலட்டை பண்ணை ஆரம்பித்து ஆலயகட்டுமான பணிக்கென நிதியுதவிகளையும் செய்துவந்துள்ளனர். இக்காலப் பகுதியில் சுகந் நிறுவனத்துடனும் ஒப்பந்த அடிப்படையிலான கடலட்டை வளர்ப்பு இரணைதீவு இடையாற்றுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தொழிலாளரை ஊக்கப்படுத்தும் நோக்கோடு பருவகால சுற்றுலாக்களையும் மேற்கொண்டு வந்துள்ளனர். இச் செயற்பாடானது இன்றும் நடைமுறையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

2018 நிருவாக மாற்றத்தின் போது தலைவராக திரு ப.எட்மன் மைக்கல் உப தலைவர் திரு யா.றோபட் பெர்னான்டோ, செயலாளர் திரு எ.லூயிஸ் றாஜன், பொருளாளர் திரு அ.கொண்சலஸ், நிர்வாக உறுப்பினர்களாக ச.பொனிப்வாஸ், சி.சவேரியான் அ.லக்ஸ்மன், அ.சூசைநாதன், மெ.றூபனா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து எடுக்கப்பட்ட மேம்பாட்டு திட்டங்களுக்கு முன்னின்று உழைத்ததுடன் சங்க கட்டுமான பணிகளையும் இரணைதீவிற்கான UNDP செயற்றிட்டமாகிய குடிநீர் மற்றும் துறைமுக அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் செய்து வந்துள்ளனர். சங்க சொத்துக்களான பெரியவள்ளம், வெளியிணைப்பு இயந்திரம். இயந்திர படகு போன்றவற்றையும் கொள்வனவு செய்துள்ளனர். தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு நிர்வாக மாற்றத்தின் போது தலைவராக திரு சு.யோண்கென்னடி, உப தலைவராக சூ.செல்வரட்ணம், செயலாளராக கி.றெறன்ஸ் பொருளாளராக அ.நோயல், நிர்வாக உறுப்பினர்களாக டோ.ஞானப்பிரகாசம், அ.அந்தோனி, அ.எட்வேட்போல், யோண் லீனஸ், ஆ.அன்ரனி ஆகியோர் தெரிவு செய்யப்பட்னர். இதுவரையில் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வந்த அனைத்து நடவடிக்கைகளையும் திறம்பட இன்றுவரை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இக்காலத்தில் சுகந்தன் நிறுவனத்தினருடனான அட்டை பண்ணை ஒப்பந்தத்தை மேலும் புதுப்பித்து ஆலய கட்டுமான பணிக்கு பெருந்தொகை நிதியை வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக ஸ்திரமான நிலையோடு சங்கம் இன்று தொடர்ந்து வீறுநடை போட்டு வருகின்றது.

தொகுப்பு

**திரு. ப. எ. மைக்கல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரணைதீவு இரணைமாதா நகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க அங்கத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரணைமாதா நகர் க. தொ. கூ. சங்க நிர்வாக உறுப்பினர்கள்



இரணைமாதா நகர் க. தொ. கூ. சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/இரணைதீவு றோ. க. த. க. பாடசாலை வரலாறு

"செல்வங்களுள் சிறந்தது கல்வியாகும்" என்ற மகுட வாக்கியத்திற்கு அமைய, தொன்று தொட்டு பழமைக்கு பெயர்போன வரலாற்றையும் பரந்து விரிந்த எழிலையும் கொண்டமைந்தது இரணைதீவு ஆகும். இக் கிராமமானது கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலகத்திற்குட்பட்ட தலை மன்னாருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான கடல்வழி கேந்திர மத்தியநிலையமாக அமைந்த கிராமமாகும். இக் கிராமத்தில் பல நூற்றாண்டுகளுக்கு மேலாக மேற்கத்திய ஆட்சியாளர்கள் மூலம் பாடசாலை நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது. இங்கு காணப்பட்ட கல்வி முறைகளாக திண்ணைப்பாடசாலை, மறைப்பாடசாலை, அரச பாடசாலை என பாடசாலை முறைகள் காலத்திற்கு காலம் கல்வி முறைகள் பின்பற்றப்பட்டு வந்துள்ளது. அந்தவகையில் ஆரம்பகாலத்தில் எமதுகிராமத்தில் இருந்த திண்ணைப் பாடசாலைபற்றி ஆராய்கையில் வீடுகள் தோறும் மாணவர்களுக்கு வாசிப்பு, கணிதம் போன்ற பாடங்களை கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. செபங்கள் சொல்லிக் கொடுத்தல் போன்றனவும் இடம்பெற்றுள்ளன. பின்பு வந்த காலங்களில் மறைப் பாடசாலையாக எமது கிராமத்திற்கு வருகைதந்த மேற்கத்தைய குருமணிகள், ஆலயத்திற்கு அருகில் பாடசாலை அமைத்து அங்கு கணிதம், தமிழ், விஞ்ஞானம், சமயம் போன்ற பாடங்களை மாணவர்களுக்குக் கற்பித்ததோடு சிறிய கட்டடங்களையும் கட்டி பாடசாலைகளை நடத்தி நிருவகித்தும் வந்துள்ளனர்.

அந்தவகையில் எமது பாடசாலையின் முதல் அதிபராக 1930 களில் அமரர் திரு.ஆரோக்கியம் அவர்களும் நிரந்தர கட்டிடம் அமைத்தும் வழிநடத்தி வந்துள்ளார். தொடர்ந்து எமது மண்ணின் மைந்தன் 1957 களில் அமரர் திரு.ம.செபமாலை அவர்களும் தொடர்ந்து திரு. மருசலீன் அவர்களும் சிறிஸ்கந்தராசா போன்றோரும் அதிபர்களாக கடமையாற்றி வந்துள்ளனர். 1957 களிலேயே எமது பாடசாலை அரச பாடசாலையாக மாற்றப்பட்டது. இக்காலப்பகுதியில் 1-5 வரையான ஆரம்பப் பாடசாலையாகவே இருந்து வந்துள்ளது. பிற்காலத்தில் 1965ம் ஆண்டு ஏற்பட்ட சூறாவளி காரணமாக பாடசாலை முழுமையாக சேதமடைந்தது. தொடர்ந்து 60'×20' அளவு கொண்ட நிரந்தரக் கட்டடம் மீளப் புனரமைப்புச் செய்யப்பட்டது. 1974-1978 காலப்பகுதிகளில் வெளிமாவட்ட ஆசிரியர்கள் எமது பாடசாலைக்கு வருகை தர ஆரம்பித்தனர். பின்னர் அருட்தந்தை கொன்சால்வே அடிகள் காலப் பகுதியில் சமய பணியோடு கல்விப் பணிக்கு வித்திட 100'×20' நிரந்தரகட்டடம் திறக்கப்பட்டு 1981ம் ஆண்டு 1-9 வரையான பாடசாலையாக வளர்ந்தது. இந்த வேளையில் பாடசாலையில் 170 மாணவர்களும் 11 ஆசிரியர்களும் இருந்தனர். இதனைத் தொடர்ந்து பாடசாலை அதிபராக அருட்சகோதரி லூயிஸ், அருட்சகோதரி கொஸ்கா ஆகியோர் கடமை புரிந்ததோடு 1983ம் ஆண்டு தரம் 11 வரையாக பாடசாலை உயர்வடைந்து க.பொ.த பரீட்சைக்குதோற்றி 2 மாணவர்கள் சித்தியடைந்ததும் குறிப்பிடத்தக்கது. தொடர்ந்து வணபிதா தேவராசா காலப்பகுதியாகும். இக்காலப்பகுதிகளில் பொதுவிளையாட்டு மைதானமும் அமைக்கப்பட்டு இல்ல மெய்வல்லுனர் திறனாய்வுபோட்டியும் நடாத்தப்பட்டு கோட்டம் மாவட்டமட்ட போட்டிகளில் மாணவர்களை அழைத்துச் சென்று பங்குபெற வைத்ததும் வெற்றிபெறச் செய்ததும் குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றி தமிழ் மொழித்தினப்போட்டி, ஆங்கிலதினப் போட்டிகளிலும் மாணவர் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து 1985ம் ஆண்டு காலப்பகுதியில் திரு. மு. எமிலியாம்பிள்ளை அதிபராக பொறுப்பெடுத்துக் கொண்டார். இவருடைய காலத்தில் 270 மாணவர்களும் 13 ஆசிரியர்களும் பௌதீக வளங்களுடன் பாடசாலை இயங்கியது. தொடர்ந்து 1992 இல் போர்ச் சூழல் காரணமாக நாச்சிக்குடா பகுதியில் எமது கிராம மக்கள் இடம்பெயர வேண்டிய நிலைஏற்பட்டு அங்கேயே குடியமைத்து வாழத்தொடங்கினர். சிறுகாலம் முழங்காவில் மகாவித்தியாலயத்தோடு இணைந்து இயங்கினாலும் எமது தனித்துவம் கருதி 1993இல் அயல் கிராமமாகிய அன்புபுரம் பகுதியில் பாடசாலை தற்காலிக கட்டடங்களுடன் இயங்கியது. பின்பு எமது கிராமமக்களாகிய பங்கிராசா, செ. சந்தியா, பி.பிரகாசம் ஆகியோர் காணிகள் அன்பளிப்பு செய்ய தற்போதைய இடத்தில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மாணவர்கள் கல்வியில் தொடர்ந்து தமது திறமைகளை வெளிப்படுத்திய வண்ணம் இருந்தனர். 300 மாணவர்களுக்குமேல் அக்காலப்பகுதியில் இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து அமரர் திரு.அ.கி.ஜெயசீலன் அவர்கள் அதிபராக பொறுப் பெடுத்துக் கொண்டார். இவருடைய காலமாகிய 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 100' × 25' அளவு கொண்ட மாடிக்கட்டடம் ஒன்றும் 2014ம் ஆண்டு கொய்க்கா செயற்திட்டத்தில் 160' x 25' அளவிலான நிரந்தர வகுப்பறை கட்டடமும், 60' × 60' விடுதிகளும், குடிநீர் வசதி தொட்டியும், மலசலகூடங்களும் எமது பாடசாலைக்கு வந்தது. இவரது காலத்திலேயே இடப்பெயர்வுக்குபின் க.பொ.த சாதாரண தரத்தில் மாணவர்கள் சித்தியடையத் தொடங்கியதும், புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி வெட்டுப்புள்ளிக்குமேல் இரு மாணவர்கள் பெற்றுக் கொண்டதும் குறிப்பிடத்தக்கனவாகும்.

தொடர்ந்து நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழல் உக்கிரமடைய இடம் பெயர்ந்து சென்று மக்கள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டனர். தொடர்ந்து 2016ம் ஆண்டு அ.றொபேட் கென்னடி அவர்கள் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பெடுத்து கொண்டார். காலச்சக்கரம் உருண்டோட பாடசாலையின் கல்வி வளர்ச்சியும் மெல்லமெல்ல வளர ஆரம்பித்தது. தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் க.பொ.த.சா. தர பரீட்சையில் மாணவர்கள் சித்தியடைந்து பாடசாலைக்கு பெருமை தேடித்தந்த வண்ணம் உள்ளனர். அத்துடன் விளையாட்டு, கலை போன்றவற்றிலும் சாதித்து வருகின்றனர். மேலும் கொய்க்கா திட்டத்தின் மூலமாக பாடசாலையில் பௌதீக வளங்களான 100'x30' அடி கொண்ட மேல்மாடி கட்டடமும் அத்துடன் விஞ்ஞான ஆய்வுகூடம், நூலகம், தகவல் தொழில்நுட்ப கூடம் மற்றும் ஒன்று கூடல் மண்டபம் போன்றன கிடைக்கப்பெற்றன. மேலும் எமது கல்வி வலயத்தில் தற்பொழுது சிறந்த பாடசாலையாக உருவெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்பொழுது எமது பாடசாலையில் 350 க்கு மேற்பட்ட மாணவர்களுடன் 30 க்கு மேற்பட்ட ஆசிரிய குழாமோடும் மிகவும் ஸ்திரமான முறையிலும் இயங்கி வருகின்றது.

தொகுப்பு

**திரு. அமிர்தநாதன் றொபெட் கெனடி**

அதிபர், கிளி/இரணைதீவு றோ.க.த.க பாடசாலை, இரணைமாதா நகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவு, இரணைமாதா நகர் சென். மேரிஸ் விளையாட்டு கழகத்தின் வரலாறுகளும், சாதனைகளும்

எமது சென். மேரிஸ் விளையாட்டு கழகமானது ஆரம்பத்தில் உருவாக்கப் படுவதற்கு முன்பு மூன்று சனசமூக நிலையத்தின் அடிப்படையில் புனித செபஸ்தியார், புனித சூசையப்பர், புனித தேவா என்ற பெயரிலே எமது இரணைதீவு கிராம இளம் யுவதிகள் நடைமுறைப்படுத்தி வந்தனர். ஆரம்ப காலத்தில் எமது இளைஞர் யுவதிகள் எமது கிராம பெரியவர்களின் வழிநடத்தலில் வெளிமாவட்டங்களுக்கும், பூநகரி பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட விளையாட்டுக்கள், உதைபந்து, கரப்பந்து போன்ற விளையாட்டுக்களில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி வாகை சூடி கிராமத்திற்கு பெருமை சேர்த்தனர்.

பின்னரான காலத்தில் எமது இரணைதீவு றோ. க. த. க. பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்களை தெரிவு செய்து அருட்தந்தை தேவராஜா, அருட்தந்தை கொன்சால்வே அவர்களின் வழிகாட்டலில் வெளிமாவட்டங்களில் பிரபல்யமான பாடசாலைகளான மன்/புனித சவேரியார் கல்லூரி, யாழ்/புனித சம்பத்திரிசியார் கல்லூரி, திருமலை புனித சூசையப்பர் கல்லூரிகளில் ஆண் பெண் மாணவர்களை கல்வி கற்பதற்கு ஒழுங்கு செய்தனர். இம்மாணவர்கள் அப்பாடசாலைகளில் கல்வி கற்ற காலத்தில் கல்வி, விளையாட்டுக்களில் நல்ல பயிற்சிகளை பெற்று தமது திறமை மூலமாக பாடசாலையில் உள்ள அணிகளில் இடம்பிடித்து மாவட்டம், தேசியம் வரை சென்று சாதனைகளை பெற்று பாடசாலையில் திறமையான மாணவர்களாக திகழ்ந்தனர். இம்மாணவர்கள் குறிப்பிட்ட ஆண்டில் தமது உயர்தரப்படிப்புகளை முடித்து பாடசாலையை விட்டு எமது சமூகத்திற்கு மீண்டும் வருகைதந்தனர்.

இவர்களின் வருகைக்கு பின்னர் எமது கிராமத்தில் இருந்து இயங்கி வந்த சனசமூக நிலையங்களுடன் பெரியவர்களுடனும் கலந்துரையாடி பூரண சம்மதத்துடன் சென். மேரிஸ் விளையாட்டு கழகத்தை அங்குரார்ப்பணம் செய்தனர். வெளிமாவட்டங்களில் கல்வி கற்று முடித்து வந்த வீரர்கள் எமது கிராமத்து வீரர்களுக்கான பயிற்சிகளையும், விளையாட்டு நுட்பங்களையும் வழங்கி கழகத்தை புத்துணர்வுடன் வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு சென்றனர். இம்மாற்றத்தின் விளைவாக எமது கிராமத்தின் பல சவால்களை உடைத்தெறிந்து ஒரே குழுவாக எதிர் வீரர்களை திணறடிக்கும் அணியாக உருவெடுத்தனர். மேலும் எமது வீரர்கள் போட்டியில் பங்குபற்றுவதற்காக பயிற்சிகளை மேற்கொள்ளும்போது எதிரணி வெற்றியைத் தந்து சென்ற வரலாறுகளும் உண்டு. இக்காலப்பகுதியில் எம்முடன் பயணித்த மூத்த வீரர்களான அ.மரிய செல்வம், செ.மரிய செல்வக்குமார், சந்தியா பயில்வான், சே. சக்கரியாஸ். சே. மரியதாஸ், மோ. பிரான்சிஸ், வீ. பீற்றர், கிறிஸ்ரியான், டேவிட், செபமாலை போன்றோரை எம்மால் மறக்கமுடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பெரியவர்களின் ஆலோசனையின்படி எமது அன்னையின் திருவிழாவை முன்னிட்டு மாபெரும் உதைபந்தாட்டத்தை நடாத்துவதற்கு தீர்மானித்தபோது புனித செபமாலை மாதா கடற்றொழில் கூ. சங்க நிதி பங்களிப்பில் நடத்துவதற்கு தீர்மானித்தோம். இப்போட்டிகளுக்கான ஒழுங்கமைப்புகளையும் நல்ல திட்டங்களையும் நாம் உருவாக்கினோம். முன்பு நடத்திய போட்டிகளில் சரியான விதிமுறைகளையும் நல்ல மத்தியஸ்தர் குழாமையும் தெரிவு செய்து சிறப்பானதொரு போட்டியை வைத்து முடித்தனர். அத்துடன் எமது திருவிழாவிற்காக கடல் கடந்து வந்து கலந்து கொண்ட கழகங்களுக்கான இரவு பகல் உணவை வழங்கிய பெருமை எமது கிராம மக்களுக்கே சேரும். அது மட்டுமன்றி முதன் முதலாகத் திருவிழாவிற்காக நடத்திய இப்போட்டியில் எமது கழகம் வெற்றி பெற்று சாதனை படைத்தது. மேலும் எமது வீரர்களின் எண்ணிக்கை கூடுதலாக இருந்ததால் போட்டிகளுக்கு வீரர்களை தெரிவுசெய்யும் போது பல பிரச்சனைகள் இருப்பதால் இரண்டு அணிகளை உருவாக்கினோம். எமது மக்கள் புனித செபமாலை அன்னையின் திருவிழாவிற்கு அனைவரின் நிதி பங்களிப்புடன் மிகவும் சிறப்பாக கொண்டாடப்படுவதுபோல் எமது கழகம் வெளியில் சென்று விளையாட்டில் பங்குபெற தமது நிதி பங்களிப்பை தரத்தவறவில்லை.

எனவே எமது கழகத்திற்கு பல இரசிகர்கள் இன்றும் இருக்கின்றனர். எமது கழக விளையாட்டு வீரர்கள் தலைவரின் கட்டளைகளை மதித்து நடந்து நடுவரின் சாதக பாதக எந்த முடிவானாலும் அதை ஏற்றுக்கொண்டு செயற்படும் பக்குவம் கொண்டவர்கள். அதை இன்றும் கடைப்பிடிப்பவர்களாக இருக்கின்றார்கள். எனவே எம்மோடு கைகோர்த்து பயணிப்பதற்கு சகல விதத்திலும் ஒத்துழைத்த எமது கிராம மக்கள், பொது அமைப்புக்கள் அனைவருக்கும் நன்றி.

## விளையாட்டில் நாம் சாதித்தவை

1. 1984 ஆம் ஆண்டு உருத்திரபுரம் கழகம் நடத்திய உதைபந்தாட்ட போட்டியில் உருத்திரபுர விளையாட்டுக் கழகத்தை வென்று கேடயம் எடுத்ததுடன் பாதணியை (Boots) கிளிநொச்சி மாவட்டத்திற்கு அறிமுகமாக்கிய பெருமை உண்டு

2. முதன் முதல் எமது திருவிழாவிற்கான உதைபந்தாட்ட போட்டியில் விளையாட்டு நடத்திய பெருமையும் சர்வதேச சட்டத்திற்கு ஏற்ப மத்தியஸ்தர்களைக் கொண்டு நடத்திய பெருமை எமக்குண்டு.

3. ஜெகமீட்பர் பெருநாளுக்கு நடாத்திய விளையாட்டின் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்து கிண்ணம் பெற்றமை.

4. விக்ரர் ஞாபகார்த்த போட்டியில் சென். மேரிஸ் நாவாந்துறை நடாத்திய பிரமாண்டமான போட்டியில் இறுதிப்போட்டிக்கு முதன் முதலாக எமது விளையாட்டுக் கழகம் A பிரிவு B பிரிவு மோதி வெற்றிக் கிண்ணங்களை பெற்றது பெருமைக்குரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. முழங்காவில் கலையரங்கம் புதிதாக அமைப்பதற்கு பூநகரி மக்களின் பங்களிப்பில் அமைக்கப்பட்டு திறப்பதற்காக நடத்தப்பட்ட போட்டியில் நாச்சிக்குடா செண். மேரிஸ் கழகத்திற்குடனான போட்டியில் எமது வீரர்கள்அடித்த கோல்களினை நாடக வடிவில் இறுதிபோட்டியில் அரங்கேற்றியது அனைவரையும் வியக்கவைத்தது .

6. தேவன்பிட்டி தமது ஆலய திருவிழாவை ஒட்டிநடத்திய போட்டியில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டு கழகத்துக்குடனான இறுதிப்போட்டியில் பங்குபற்றி வெற்றிக்கிண்ணம் பெற்றது.

7.விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டு கழகமும் செபராசா வியாபாரியுடன் இணைந்துநடத்திய உதைபந்தாட்ட போட்டியில்மன்னார் தீவில் இருந்து பங்குபற்றிய கழகங்கள் உள்ளடங்கலாக இறுதிப்போட்டியில் பள்ளிமுனை செண். லூசியா அணியுடன் மோதிய போது அங்கிருந்த ரசிகர்கள் செண். லூசியா பல கோல்போட்டு நாம் அவமானத் தோல்வி பெறுவோம் என எதிர்பார்த்தனர். ஆனால் நாம் இவற்றை தகர்ப்பதற்காக நல்ல விளையாட்டு வியூகங்களை அமைத்து விளையாடியபோது எமது விளையாட்டு திறமையை பார்த்து அங்கிருந்த ரசிகர்கள் வியந்துபோயினர். இரு அணிகளும் தலா ஒரு கோல்போட்டு ஆட்டம் விறுவிறுப்பாக அமைய இறுதி நேரத்தில் செண். லூசியா மேலும் ஒரு கோலை போட்டு வெற்றிபெற்றது. பின்னர் செண். லூசியா கழகம் வெற்றிபெற்ற கேடயத்தை எமக்கு தந்து பெருமைப்படுத்தியது இன்றும் மறக்க முடியாது.

8. பண்டிவிரிச்சானின் ராதாரவி ஞாபகார்த்தமாக இடம்பெற்ற உதைபந்தாட்ட போட்டியிலும் இறுதிப்போட்டியிலும் வெற்றிபெற்று கிண்ணத்தை சுவீகரித்தோம்.

9. முத்துக்கள் மூன்று ஞாபகார்த்த தற்கால நடப்பு உதைபந்தாட்ட போட்டிகளில் முதல் ஆரம்பித்த போட்டியில் முதல் வெற்றிக்கிண்ணத்தை பெற்றதோடு தொடர்ச்சியாக மூன்று தடவைகள் கிண்ணத்தை சுவீகரித்தது. எமது கிராமத்துக்கு பெருமையாகும் தற்கால இளம் வீரர்களும் இந்த தொடரில் இன்றும் சாதனைகளை புரிந்து வருகிறார்கள்.

10. சுற்றுலா போட்டியாக பிரபல்யமான யாழ் முஸ்லீம் விளையாட்டு கழகத்துடன் விளையாடி பாராட்டுக்கள் பெற்றதுடன் குருநகர் செண். றோக் விளையாட்டுக்கழகத்துடனும் விளையாடி வெற்றி பெற்றோம். இவ்விளை யாட்டுக்களில் எமது திறமைகளை அவதானித்த முன்னாள் மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரியான திரு. குணரட்ணம்சேர் அவர்கள் கொழும்பில் நடைபெற்ற தேசியமட்ட உதைபந்தாட்ட போட்டியில் எமது கழகத்தை சேர்ந்த அமரர் அ.கி.ஜெயசீலன் அமரர் அ.அருமைநாயகம் மற்றும் சே.ஸ்டனிஸ்லாஸ் டோ. பிரான்சிஸ் சேவியர், சூ. செல்வரட்ணம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டு விளையாடி பல சாதனைகள் புரிந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*11.* விக்ரர் கேடயத்திற்கான மாவட்ட ரீதியிலான மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் மன்னார் மாவட்ட தெரிவு அணியில் சூ. செல்வரட்ணம். அ. றொபேட் கென்னடி ஆகியோர் அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்று விளையாடி ஏழு அடி உயரமான கேடயத்தை பெற்றுக்கொடுத்தது குறிப்பிடத்தக்கது.

*12.* முல்லைத்தீவு – அளம்பில் அருட்தந்தை ஜெயரஞ்சன் தந்தைக்காக நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டியில் எமது கழகத்தின் இளம் வீரர்கள் பங்குபற்றி இறுதிபோட்டியில் வெற்றிபெற்று வெற்றிக் கேடயத்தை கிராமத்துக்கு கொண்டு வந்தனர்.

*13.* புதுக்குடியிருப்பு இரணைப்பாலை விளையாட்டு கழகம் நடாத்திய வடமாகாணம் தழுவிய போட்டியில் எம் விளையாட்டு கழக வீரர்கள் பல ரசிகர்களையும்இரணைப்பாலைமக்களையும்கவரக்கூடியவகையில்விளையாட்டுத் தந்திரங்களையும் ஒழுக்கங்களையும் வெளிப்படுத்தி இறுதிப்போட்டியில் தண்ட உதை மூலம் இரண்டாம் இடம் பெற்று கிராமத்துக்கு பெருமை சேர்த்தனர்.

*14.* கிளிநொச்சி இராணுவ படையால் நடாத்தப்பட்ட வடமாகாணம் தழுவிய போட்டியில் இறுதிப்போட்டிக்கு தெரிவாகி வெற்றி பெற்று வெற்றிக் கேடயத்தைக் கொண்டுவந்தனர்.

*15.* இவை மட்டுமல்லாது இன்றைய காலங்களில் எமது இளம் வீரர்கள் தேசிய மட்ட மெய்வல்லுனர் போட்டிகளிலும் பங்குபற்றி சாதனைகள் புரிந்து வருகின்றார்கள். குறிப்பாக பெ.லூயிஸ் லக்ஸ்மன், எ.கருணா லோரன்ஸ்,ரூ. டயஸ் கிசான், யே.சதிஸ்குமார், கி.கிளிஎடிசன், ஜோ.சுதாகரன், பி.றோயல் பிரதீப் ஆகியோரும் ஆவர்.

*16.* எமது இளைஞர் அணி தேசிய ரீதியிலும் உதைபந்தாட்ட போட்டியிலும் இளைஞர் வாண்மைத்துவம் போட்டிகளிலும் கலந்துகொண்டு கிராமத்துக்கு பெருமை தேடித்தந்திருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது.

தொகுப்பு
**திரு. சூ. செல்வரட்ணம்**
ஆசிரியர், சமாதான நீதவான்
இரணைமாதா நகர்,
இரணைதீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் விசுவாச வாழ்வும், அன்னையின் ஆலயமும்

'என் நெஞ்சே ஆண்டவரைப் போற்றிடு' (தி.பா. 146)

கடலும் கடல் சார்ந்த நெய்தல் நிலமாகிய எமது கிராமம் கடல் அன்னையின் கரத்தில் தவழும் கடல் வளங்கள் நிறைந்த அழகிய கிராமம். இயற்கை அழகும் அமைதியும் பார்ப்போருக்கு எளிமையான தோற்றமும் அனைவராலும் விரும்பப்படுகின்ற எமது கிராமம் இரணைமாதா நகர் கிராமம். இறைநம்பிக்கையும் விசுவாசமும் தளராத உள்ளம் கொண்ட செபமாலை அன்னையின் அன்பு பிள்ளைகள் எம் மக்கள். ஒரே இனம், ஒரே மதம் என்ற அன்பான கட்டுப்பாட்டின் கீழ் வாழ்ந்து வருகின்ற எம் கிராம மக்கள். நாம் என்னதான் கேட்டாலும் அன்னை நமக்கு இல்லை என்று சொல்வதில்லை. கேட்கும் அனைத்தையும் நம் அன்னை எமக்கு அருளி வருகின்றார்.

விசுவாச வாழ்விலே மூழ்கிய எம் மக்கள் அன்னைக்கு ஒரு ஆலயம் அமைத்து அவளை ஒரு அழகான இடத்தில் அமரவைத்து அழகு பார்க்க வேண்டும் என்பது எல்லோரின் மனதிலும் எழுந்தது. எம்மக்கள் நாட்டின் அசாதாரண சூழ்நிலையால் 1992 எமது பூர்வீக தீவான இரணைதீவு எனும் அழகிய கிராமத்தில் இருந்து இரணைமாதா நகர் என்னும் அழகிய கிராமத்திற்கு இடம்பெயர்ந்து வந்து சிறிய ஆலயம் அமைத்து அன்னையின் பாதுகாப்பில் வாழ்ந்து வந்தனர். அதன் பிற்பாடு 2003ல் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளாரின் தலைமையில் எமது புது ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டினார். நாட்டின் அசாதாரண சூழ்நிலை மற்றும் மக்களின் வறுமை நிலை காரணமாக எமது ஆலய வேலைப்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை. பங்குத் தந்தைகளின் மாற்றங்கள் மற்றும் புதிய விதிமுறைகள், புதிய ஆலோசனைகள் எம் ஆலயத்தைத் தொடர்ந்து கட்ட முடியவில்லை. ஆனால் எமது மக்களின் விடாமுயற்சியும் தளராத விசுவாசமும் அன்னையின் அரவணைப்பும் எம்மைக் கைவிடவில்லை. எம் மக்களின் தாராள மனம்தான் எம் ஆலயத்தைக் கட்டிமுடிக்க உதவி செய்தது.

எம் மக்கள் விசுவாசத்திலும் ஆன்மீக வாழ்க்கையிலும் சற்றும் குறைந்தவர்கள் இல்லை என்பதற்கு ஆலயம் மட்டும் சாட்சி இல்லை. மாறாக எமது அழகிய கிராமத்தில் இருந்து ஏராளமான குருக்கள், கன்னியர்கள், அருட்சகோதரர்கள் மற்றும் குருமட மாணவர்கள் தங்களது வாழ்வை அர்ப்பணித்து கடவுளுக்காக சேவை செய்ய முன்வந்துள்ளனர். இதற்கு எம் கிராமத்தில் விசுவாச வாழ்வும், அன்னையின் அரவணைப்புமே காரணமாகும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை. ஆலயம் எவ்வளவு பெரிதாகக் கட்டப்பட்டிருக்கிறதோ அதே போன்று எமது கிராமத்தில் நிறைய தேவ அழைத்தல்கள் பெருக வேண்டும் என்று அனைவரும் அன்னையிடம் உருக்கமாக வேண்டுவோம். ஒரு மாணவன், மாணவி குருமடத்திற்குப் போய் தன்னைக் கடவுளின் பணிக்கு ஆயத்தம் செய்வது மிகவும் எளிதான விடயமல்ல. நிறைய கஸ்ரங்களைப் படவேண்டியும் நிறைய தடைகளைத் தாண்டியும் இந்த இலக்கை எட்ட வேண்டியுள்ளது. நமக்கு நம் ஊருக்கு ஒரு குரு, அருட்சகோதரி கிடைப்பது மிகப்பெரிய வரப்பிரசாதம். பெற்றோர்களின் செபங்கள் மட்டும் போதாது. மாறாக கிராம மக்களின் ஒத்துழைப்பும் அவர்களின் செபங்களுமே அவர்களை திடப்படுத்தி அவர்களின் பணியை முன்னெடுக்கச் செய்கின்றது. எங்களுக்காக செபியுங்கள், நமது கிராமத்தில் மேலும் நிறைய தேவ அழைத்தல்கள் பெருக அன்னையிடம் மன்றாடுங்கள்.

**ஸ்ரனிஸ்லாஸ் தியோனிஸ்லாஸ்**
குருமட மாணவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கலைகளும், பண்பாடுகளும்

ஒரு பூர்வீக இனம் தன்னை அடையாளப் படுத்திக்கொள்ள மொழி, கலை, பண்பாடு என்பன முதன்மை பெறுகின்றது. தமிழினத்தின் தலையாய அடையாளங்களில் கலையே இன்றியமையாதது. பண்டைய காலத்தில் எல்லோருக்கும் விளங்கும் வகையில் தகவல்களை கலை மூலமே வெளிப்படுத்தி வந்துள்ளனர். பல வரலாறுகள் பல நூற்றாண்டுகள் கடந்தும் இன்றும் வாழ கலையே தொன்மையான ஊடகமாகும். தமிழ்நாட்டின் பண்டைய மன்னர்களான சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிக்காலத்தில் தான் சமயநெறியை வலுப்படுத்த கலையை மென்மேலும் வளர்தெடுத்தார்கள். இதுவே தமிழரிடத்தில் கலை இலக்கிய நயம் இரத்தத்தோடு ஊறிப்பெருக்கெடுத்து காணப்படுகின்றது.

தமிழ்நாட்டு மன்னர்களின் இலங்கைக்கான படையெடுப்புகளில் தீவுப்பகுதிகள் பெரும் செல்வாக்கு செலுத்தியது. வீரர்கள் ஓய்வெடுத்து செல்லவும் தீவைப் பயன்படுத்தியுள்ளனர் நெடுந்தீவு, இரணைதீவு போன்ற தீவுகளில் மன்னர்களுக்கான குதிரை வளர்ப்பும் இடம்பெற்று வந்திருக்கின்றது. இதனால்தான் எமது தீவு குதிரைத்தீவு (பேரீத்தீவு) என்றும் அழைக்கப்பட்டிருகின்றது. இன்றும் குதிரை வளர்த்த இடத்தை குதிரை முனங்கு என அழைப்பதுண்டு.

பாண்டிய இராச்சியத்தின் பரம்பரைச் சொத்தான குருகுலப்பரவரின் மீன்கொடியானது, திருப்பவனிகளிலும் கலை நிகழ்வுகளிலும் வீடுகள், வள்ளங்கள், தோணிகள், கல்லறைகள் போன்றவற்றிலும் பொறிக்கப்பட்டும் வந்திருக்கின்றது. மன்னர்களின் படையெடுப்புக்களினாலும் சாதி மதம் என்கின்ற கொடுங்கோண்மையாலும் காலத்திற்கு காலம் மனித இனம் அழிக்கப்பட்டாலும் கலை என்பது ஒவ்வொரு தனிமனிதனிடத்திலிருந்தும் உடல் உள வாய்மொழி மூலமாகவும் அடுத்த சந்ததிக்கு கடத்தப்பட்டு வருவதோடு எவராலும் ஒதுக்கி விட முடியாத பொது ஊடகமாகும். இதுவே உண்மை.

எமது கலை பொக்கிசமான நாட்டுக்கூத்து, கப்பல்பாட்டு, கரகாட்டம், செம்பு நடனம் என்பனவும் பலநூறு வருடம் பின்பற்றப் பட்டு வரும் கத்தோலிக்க கலைச் சொத்தான பாடுகளின் வியாகுலப்பிரசங்கமும் ஒப்பாரிப்பாடலும் இன்றும் எம்வாழ்வில் பின்னிப்பிணைந்துள்ளது. எமது கிராமம் உள்ளடங்கிய பூநகரி பிரதேசமானது போர்த்துக்கேயர் காலம் தொடங்கி ஒல்லாந்தர் காலம், ஆங்கிலேயர் காலம் வரை கலை வளர்ச்சியில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது என்பதற்கு சான்றுகள் அதிகம் உள்ளன. அத்தோடு எமது தீவானது தமிழ்நாட்டிற்கு மிக அண்மையில் இருப்பதால் மக்கள் கடற்பயணத்தை அதிகம் மேற்கொண்டார்கள். இதனால் கலைஞர்கள் அங்கு சென்று இசைக்கருவிகளையும், கூத்துக்களையும் கற்றுக் கொண்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரணைதீவின் ஆரம்பகாலப்பகுதியிலே அண்ணாவிமார்களாக இருந்த அமரர்களான வைத்தியான், வைத்தி சின்னப்பு, மருசலீன், சந்தியா, (புலவர்) செபமாலை, எசேக்கியேல், சக்கரியாஸ், செ.சந்தியா ஆகியோர்களால் கோழியாத், ஞானசவுந்தரி, செபஸ்தியார், இம்மானுவேல், நல்ல தங்காள், அரிச்சந்திர மயானகாண்டம், திருப்பாடுகளின் காட்சி, நகைச்சுவை சமூக நாடகங்கள் போன்றனவும் அரங்கேற்றப்பட்டு வந்திருக்கின்றன. பின்னரான காலப்பகுதியில் சமூக நாடகங்கள் எமது பாடசாலை மாணவர்கள் மூலம் தமிழ் மொழித்தினப் போட்டிகளிலும் பங்குபற்ற வைத்ததும் குறிப்பிடத்தக்கது. எமது சந்ததியின் அடுத்த கிராமமான இரணைமாதா நகரிலும் அன்று தொட்டு இன்று வரை கலைக்கு பஞ்சமில்லை என்றே கூறமுடியும். பாடும்மீன் கலை இலக்கிய மன்றம் 1995 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றாலும் 2012 ஆம் ஆண்டே சட்டரீதியாக பதிவு செய்யப்பட்டது. நல்ல குரல்வளம் மிக்க மக்களைக் கொண்ட கிராமமாக இருப்பது இறைவன் கொடுத்த கொடையாகும் என்றே கூறலாம்.

1995 ஆம் ஆண்டு தொடக்கம் 2008 ஆம் ஆண்டுவரை எமது கலையானது தமிழினத்தின் விடுதலை காணும் நோக்கத்திலே தெருக்கூத்து,மேடைநாடகம், சமூக வாழ்வியல் நாட்டிய நாடகமென பல வடிவங்களில் அரங்கேற்றப்பட்டு வந்திருக்கின்றன. 2011ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியிலேயே தேசியம் மாகாணம் மாவட்டம், பிரதேசம் என கத்தோலிக்க போட்டி நிகழ்வு உள்ளடங்கலாக மாணவர்கள் இளையோர்கள் முதியவர்கள் என பல பிரிவுகளாகவும், பாடல், இசை, தாளம், நாடகம், நடனம் போன்றவற்றில் பங்குபற்றி பரிசில்கள் பதக்கங்கள் கேடயங்கள் சான்றிதழ்கள் பலநூறு பெறப்பட்டிருக்கின்றது. இவ்வாறாக கலையோடும், பண்பாட்டோடும் ஒழுகிய கிராமமாக தொன்றுதொட்டு இன்றுவரை பயணித்துக் கொண்டிருக்கிறது.

தொகுப்பு
**திரு. மகேந்திரராசா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரியாவின் சேனை அனுபவமும் செயற்பாடும்

அனைத்துலக மட்டத்தில் மட்டுமன்றி நமது நாட்டிலும் எம் சிறிய கிராமத்திலும் காலத்தின் தேவையை நிறைவு செய்ய இறைவன் கொடுத்த பெரிய கொடை மரியாயின் சேனையாகும். அப்போஸ்தல பணியை வலியுறுத்துவதில், மக்களின் விசுவாச வாழ்வில் இறையரசை கட்டியெழுப்புவதில் பொதுநிலையினரின் காத்திரமான பங்களிப்பை மரியாயின் சேனை ஆற்றி வந்துள்ளது என்பதில் ஐயம் இல்லை.

மரியாயின் சேனை முதன் முதலாக எம் பங்கில் [இரணைதீவில்] 1994 தை 22 அருட்தந்தை ஹென்றி மோரோ அவர்களால் இயக்கி வைக்கப்பட்டுள்ளது. அன்றிலிருந்து எமது முதியோர்கள், பெரியவர்கள் சேனையில் சேர்ந்து பங்குத்தந்தை, அருட்சகோதரிகள் ஆகியோரின் வழிநடத்தலில் பணியாற்றினார்கள். மரியாயின் சேனையார், திருவருட்சாதனங்களுக்கு ஆயத்தப்படுத்துதல், குடும்ப ஒழுக்கங்கள், பிள்ளைகளின் படிப்பு, இளையோர் வாழ்வில் அக்கறை, குடிபோதை உள்ளவர்களை குடியிலிருந்து மாற்றி அமைத்தல் ஆகிய பணிகளையும், நோயினால் வருந்துவோரை ஆறுதல் படுத்தியும் வயோதிபரை கண்காணித்தும் உதவிசெய்தும் குருவின் இருகைகளாக செயற்பட்டு வந்துள்ளனர்.

சேனையார் அயல் கிராமங்களுக்கு கடலால் பயணம் செய்து பல பணிகளை செய்தும் அங்கு சேனைகள் உருவாக்கியும் திருப்பலி காண மக்களைத் தூண்டியும், விசேட விதமாக குடும்ப தரிசிப்பை பங்குக் குருவின் ஆலோசனையுடன் சென்று தரிசித்து தம் பணிகளை வெகு சிரத்தையுடனும் பிரமாணிக்கத்துடனும் செய்தனர். அதாவது எமக்கு ஆசிரியர்களின் பற்றாக்குறை இருந்தும் அதை பொருட்படுத்தாமல் தங்களுக்கு தெரிந்த வாழ்க்கை அனுபவத்தின் மூலம் அஞ்சலினா செல்வராணி, சுவானால், ரோசலின், மரியை, வெரோனிக்கா ஆகியோர் பிள்ளைகளுக்கும், இளையோருக்கும் மறைக்கல்வி வகுப்புகள் நடத்தி அவர்களை விசுவாசத்தில் வளர்த்து விட்டவர்களாக செயற்பட்டுள்ளனர்.

அத்துடன் திருப்பலியில் முழுமையாக பங்குபற்றவும், குடும்பங்களில் செபமாலை சொல்லும் பழக்கத்தையும் ஊக்கப்படுத்தினர்.

எமது கிராமத்தில் சேனையாளராக இருந்தவர்கள் கடலால் சென்று வலைப்பாடு, பூநகரி, தேவன்பிட்டி வரை தம் பணியை வெகு சிறப்பாகவும் முன்மாதிரியாகவும் பிரமாணிக்கத்துடன் செய்துள்ளனர். கிராமங்களில் பிரசீடியங்களையும் உருவாக்கி உள்ளனர் என்பதில் பெரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். எனவே மரியாயின்சேனையினர் போர்க் காலத்திலும் தம் பணிகளை செய்வதில் அக்கறையாய் இருந்துள்ளனர். போர்க் காலங்களில் சேனையர் சிதறி இருந்தாலும் தம் செபவாழ்வின் மூலம் மக்களை ஒன்றுபடுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மரியாயின் சேனை அங்கத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







மரியாயின் சேனை அங்கத்தவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாடுகளில் பங்கு பற்றவும் துன்ப நேரங்களில் ஒன்றுகூடி ஆறுதல் கூறியும் அவர்களுக்கு உதவி செய்தனர். எனவே எம் பங்கில் சேனையர் மூலம் எம் மக்களின் உறவுகள் ஒவ்வொருவரும் சிதறிப்போகாதபடி விசுவாசத்தில் வளர்க்கப்பட உதவி வருகின்றனர்.

இடப்பெயர்வுகள், போர் முழக்கங்கள் ஆகியவற்றால் நாங்கள் அலைக் கழிக்கப்பட்டாலும் எம் பணிவாழ்வின் மகத்துவத்தை நாம் இழக்கவில்லை. இரணைதீவில் இருந்து இடம்பெயர்வுகளை சந்தித்து திரும்பவும் தம் பிள்ளைகளை தம் இறக்கைகளுக்குள் வைத்து காத்துவரும் எம் தாய் செபமாலை மாதாவின் உதவியுடன் எம் பணிவாழ்வை செய்வதற்கு ஆற்றலைப் பெற்றுவருகின்றோம்.

தற்போதும் அயல் பிறமத வீடுகள், அயல் கிராம நோயாளர்கள், மரண வீடுகளில் வழிபாடுகள், வயோதிப, சிறுவர் இல்லங்களை தரிசித்து உதவிகள் செய்து வைத்தியசாலைகளில் நோயாளர்களை தரிசித்து ஆறுதல்படுத்தி, கத்தோலிக்கர்கள் என்றால் அருட்சகோதரிகள் மூலம் திவ்விய நற்கருணை வழங்கவும், அயல் பங்கின் ஆலய திருவிழாக்களில் பங்கு பற்றி அவர்களை விசுவாசத்தில் ஊக்கப்படுத்தியும், வலு இழந்தவர்களை தரிசித்து உதவிகள் செய்தும் படுக்கையில் இருக்கும் நோயாளர்களை தரிசித்து செபித்து உதவிகள் செய்தும், பிரமாணிக்கமுள்ள விசுவாச வாழ்வு வாழ்வதற்கு எம் சேனையின் பணி வாழ்வு மிகவும் முக்கியம் என்பதை உணரும் வகையில் நாம் செயல்பட்டு வருகிறோம். எனவே எம் வாழ்வு மலர மரியன்னையின் சீடத்திகளாக வாழ இறை இயேசுவின் அருளை மரியா மூலம் பெற்று பணிவாழ்வை சிறப்பு மிக்கதாக்க செயற்படுவோமாக.

தொகுப்பு

**ச. மாசில்லா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவு பூர்வீக நில மீட்புப் போராட்டமும் மீள்குடியேற்ற சவால்களும்

1992ல் இரணைதீவிலிருந்து இடம் பெயர்ந்து தற்போதைய இணைமாதாநகர் பகுதியில் காடுகளை வெட்டி தற்காலிக கொட்டில்கள் அமைத்து வாழத்தொடங்கினர். இக்காலத்தில் மக்களின் வாழ்வாதார தொழிலான மீன்பிடி முற்றுமுழுதாக பாதிப்படைந்தது. அத்துடன் உணவு, சுகாதாரம், கல்வி, சமய – சமூக – பண்பாட்டு அம்சங்களும் முழுமையாக சவாலுக்குட்பட்டது. 2009ம் ஆண்டு இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தைத் தொடர்ந்து பல இடப்பெயர்வுகளுக்குள்ளான மக்கள் முள்ளிவாய்க்கால் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் பல முகாம்களில் தங்கி தங்களது நாளாந்த வாழ்வைக் கடக்க வேண்டிய அவல நிலைக்குட்பட்டனர்.

2007ம் ஆண்டிற்கு முன் இரணைதீவு மக்கள் தமது வாழ்வாதார தொழிலாக கடற்றொழிலை இரணைதீவுக் கடலில் மேற்கொள்ள சுதந்திரம் கிடைத்தது. 2013ம் ஆண்டிற்கு பின் இரணைதீவிற்கு தவக்காலத்தின் முதலாம் வாரத்தில் வரும் வெள்ளிக்கிழமை ஒரு நாள் அனுமதியுடன் சென்று வழிபாடு செய்வதற்காக மக்கள் சென்று வந்த பின்னர், முழுமையாக 16.02.2018ல் அனுமதி மறுக்கப்பட்டது. இந்நிலையில் இரணைமாதாநகரில் உள்ள பொது அமைப்புக்கள், குறிப்பாக மத்திய அரசாங்க அமைச்சுக்கள் மாகாண அமைச்சுக்கள், மாவட்ட பிரதேச செயலாளர்கள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடம் தமது பூர்வீக நிலமான இரணைதீவை விடுவிக்க கோரிக்கைகளை முன்வைத்தனர். அத்துடன் யாழ் ஆயர், கிளி/மறைக்கோட்ட முதல்வர், பங்குத்தந்தை ஆகியோருக்கும் மீனவ அமைப்புக்கள், மனித உரிமை ஆணைக்குழு, அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

2016ம் ஆண்டில் மக்களின் தேவையை அறிந்து கொண்ட அரச சார்பற்ற அமைப்புக்களான தேசிய மீனவர் ஒத்துழைப்பு அமைப்பு, மன்னார் சமூக பொருளாதார அமைப்பு ஆகியவை இணைந்து இரணைதீவில் மீள் குடியேற்றம் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை மேற்கொண்டதுடன் கள ஆய்வுகளையும் மக்களுக்கு தெளிவுபடுத்தி போராட்டத்திற்கான ஆர்வத்தை பெண் தலைமைத்துவ குடும்ப பெண்கள், கடற்றொழில் மீனவசங்கம் மூலம் வாழ்வாதார தொழிலான கடற்றொழில் செய்யும் சமூகத்தினருக்கும் ஏற்படுத்தினர். இதில் இரணைதீவில் மக்கள் மீள் குடியேற்றம் செய்வதற்கான பின்வரும் நியாயமான காரணங்கள் முன்வைக்கப்பட்டது.

- பூர்விக நிலத்திலுள்ள தேவாலயத்தில் வழிபாடுகளை மேற்கொள்ளவும் அதனை அண்டிய பகுதிகளை சுத்தம் செய்யவும்.
- தற்காலிக கொட்டகை அமைத்து வாழ்வாதார தொழிலை மேற்கொள்ளவும்.
- கால்நடைகளை பாராமரிக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ இரணைமாதாநகரில் இருந்து நாளாந்தம் இரணைதீவு சென்று கடற்றொழில் செய்வதால் ஏற்படும் எரிபொருள் செலவுகளை குறைப்பதற்கும்

➢ வெளியூர் கடற்றொழிலாளர்களின் கடற்றொழில் நடவடிக்கையால் எமது கடல்வளம் சூறையாடப்படுவதை தடுப்பதற்கும்

➢ தென்னை செய்கை பாராமரிப்பும், மீள் நடுகையும் மேற்கொள்ளவும் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

மேற்குறிப்பிடப்பட்ட கோரிக்கைகள் ஐரோப்பிய ஒன்றியம் மூலம் 12.10.2016ல் அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பதிலளிக்கும் வகையில் 17.10.2016ல் மீள்குடியேற்ற அமைச்சுக்கு கடிதம் மூலம் மக்களை மீள்குடியேற்றம் செய்வதற்காக கோரிக்கையை அனுப்பிவைத்தது. இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொண்ட போதும் இரணைதீவு மீள்குடியேற்றம் தொடர்பான சாதகமான பதில் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இதனால் விசனமடைந்த மக்கள் 01.05.2017ல் உலக தொழிலாளர் தினத்தில் இரணைமாதாநகர் கடற்கரையில் இரணைதீவை மீட்பதற்கான போராட்டத்தை மு. மரியசீலி, கி. எலிசபேத், ட. இமாகுலேட் மரிய குலோடில்டா, ச. மரிய தேவி, வே. காணிக்கைமலர், ச. வேதநாயகம் ஆகியோருடன் எம் கிராம மக்களும் இணைந்து ஆரம்பித்தனர். போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு பொது அமைப்புக்கள், மதகுருமார்கள், அருட்சகோதரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ் ஆயர், மாகாண சபை உறுப்பினர்கள், ஆகியோர் வருகைதந்து பூரண ஆதரவு வழங்கினார்கள். போரட்ட செயற்பாடுகள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டது.

➢ 08.03.2017ல் பூநகரி பிரதேச செயலாளரிடம் மகஜர் கையளிப்பு.

➢ 29.05.2017ல் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு.

➢ 23.06.2017ல் A32 வீதி மறியல் போராட்டம்.

➢ 29.06.2017 அன்று 05.05.2017ல் பாராளுமன்றத்தில் கௌரவசிவஞானம் சிறிதரன்அவர்களால் சமர்பிக்கப்பட்ட பிரேரணைக்கு அமைவாக, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரூவான் விஜயவர்த்தன அவர்கள் இரணைதீவு மக்களுடன் இரணைமாதாநகர் கடற்கரையில் செபமாலைமாதா தேவாலயத்திலும் பங்குத்தந்தையின் தலைமையில் பொதுமக்கள் சந்திப்பு இடம்பெற்றது.

➢ 10.08.2017ல் தலைநகர் கொழும்பில் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தமையால் 09.08.2017ல் ஜனாதிபதியின் மேலதிக செயலாளரினால் பாதுகாப்பு செயலாளருக்கு இரணைதீவுமக்களின் மீள்குடியேற்றம் தொடர்பான கடிதம் அனுப்பிவைக்கப்பட்டது.

➢ 06.09.2017ல் முழங்காவில் கடற்படை முகாமில் பாதுகாப்பு அமைச்சர், மீள்குடியேற்ற அமைச்சர், பாராளுமன்றஉறுப்பினர்கள்,பங்குத்தந்தை கடற்படை அதிகாரிகளுக்கும் இரணைதீவு நில விடுவிப்பு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ 28.02.2018ல் தேசிய மீனவ ஒத்துழைப்பு அமைப்பு, சமூக பொருளாதார மேம்பாட்டு நிறுவன அனுசரணையில் இரணைதீவு மீள்குடியேற்றம் தொடர்பான மகஜர்களை மனிதஉரிமை ஆணைக்குழு, ஐரோப்பிய ஒன்றியம், சுவிஸ் தூதரகம் ,அமெரிக்க தூதரகம், மீள்குடியேற்ற அமைச்சு,பாதுகாப்பு அமைச்சுக்கும் மகஜர் கையளிக்கப்பட்டது.

➢ 05.03.2018 தொடக்கம் 09.03.2018 வரை ஜெனிவாவில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் மாநாட்டில் இரணைதீவு விடுவிப்பு தொடர்பாக கிராம மக்கள் சார்பாக திருமதி அன்ரன் ஜெயசீலன் அற்புதராணி அவர்கள் கலந்துகொண்டு எமது போராட்டம் தொடர்பாக விளக்கமளித்தமை எமது வெற்றிக்கு வலுச்சேர்த்தது.

➢ 24.04.2018ல்ஒருவருடநிறைவைமுன்னிட்டு358ம்நாள்காலைதேவாலயத்தில் திருப்பலியின் பின்னர் மக்கள் ஊர்வலமாக கடற்கரை சென்று 50 படகுகளில் கண்டனப் பேரணியாக வெள்ளைக் கொடியுடன் இரணைதீவுக் கரையை அடைந்தனர். கடற்படையினர் தடை எதுவும் ஏற்படுத்தவில்லை.

➢ 27.04.2018ல் 26 ஆண்டுகளின் பின்னர் சொந்தமண்ணில் கோயிலுக்கு அருகில் ஒன்றாக சமைத்து உணவு உண்டு இரணைதீவில் தங்கி போராட்டத்தை தொடர்ந்தனர்

➢ 01.05.2018ல் மேதின நாளில் இரணைதீவில் மேதினம் பொது மக்களால் கொண்டாடப்பட்டது.

➢ 07.05.2018 இரணைதீவில் தங்கி போராடி வரும் மக்களுக்கான தேவைகளை பூர்த்திசெய்வதற்காக பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் பூநகரி, கரைச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலர் வருகைதந்து மக்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருட்களை வழங்கிவைத்தனர்.

➢ 15.05.2018ல் இரணைதீவு மக்கள் தங்களது காணிகளில் மீள்குடியேற அமைச்சு அனுமதியை வழங்கியது. இந்நிகழ்வில் மீள் குடியேற்ற அமைச்சின் மேலதிக செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், கடற்படைத் தளபதி, கிளிநொச்சிமாவட்ட அரச அதிபர், பூநகரி பிரதேச செயலாளர், மாகாணசபை உறுப்பினர், பூநகரி பிரதேச சபை இரணைதீவு வட்டார கௌரவ உறுப்பினர்களான மு.எமிலியாம்பிள்ளை, டோ.பிரதீபன் ஆகியோருடன் அயல் பங்குத் தந்தையர்களும் கலந்து கொண்டார்கள். இந்த அறிவிப்பால் மக்கள் ஆனந்தம் அடைந்தனர். அனைவரும் ஒருமித்து மரியன்னைக்கு புகழ்பாடல் பாடி கோயில் மணி ஒலிக்க ஆனந்தகண்ணீர் மல்க ஒருவரை ஒருவர் கட்டியணைத்து போரட்ட வெற்றிகளை கொண்டாடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைதீவு புதைகுழி தீவா?

இத்தலைப்பை கேட்கும் போதே ஒருவித சலசலப்பை ஏற்படுத்தும் உணர்வை தோற்றுவிக்கின்றதல்லவா? இப்படித்தான் அன்று இருந்தது. குறிப்பாக உலகமே கொரோனா என்னும் கொடிய நோய்க்குள் சிக்குண்டு இன்னும் அதன் வடுக்கள் தொடர்ந்த வண்ணம் இருக்கின்ற வேளை, எமது நாட்டையும் அது விட்டுவைக்கவில்லை. அதன் தாக்கத்திற்கு அஞ்சி மக்கள் தங்கள் சுய பாதுகாப்பைத் தேடி வீடுகளில் முடங்கி இருக்கின்ற வேளையில் திடீரென்று தலையில் அடி விழுந்தாற் போல் இரணைதீவில் கொரோனாவால் மரணித்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதற்காக புதைகுழி வெட்டுவதற்கான இடம் தெரிவு செய்வதற்கான ஆயத்த வேலைப்பாடுகள் இடம் பெறுவதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்துகொண்டோம்.

ஏற்கனவே இழந்த சொந்த மண்ணை போராடி வலிந்து குடியேறிய இடமல்லவா. எமது மக்கள் சக்தியைக் கண்டு உலகமே வியக்கவைக்க சொந்த மண்மீட்பு போராட்டம் நிறைவுக்கு வந்த சிலகாலங்களே ஆகியிருந்தன. சமூக வலைத்தளங்களில் செய்தி கசிந்த அடுத்த கணங்களிலேயே இரவோடு இரவாக புதைகுழி வெட்டப்பட தெரிவு செய்யப்படவிருந்த இடத்திற்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டும் என்ற முனைப்போடு 03.03.2021 அன்று இரவு 11.40 மணிக்கு மக்கள் அனைவரையும் ஒன்று கூட்டி கலந்துரையாடப்பட்டது. அடுத்த நாள் எமது படகுகளை ஆயத்தம் செய்து எமது கடற்றொழிலாளர் சங்கத்தின் உதவியுடன் மக்களை திரட்டி அடுத்த போராட்டத்திற்கு தயாராகினர். புதைகுழி வெட்டப்பட்ட இடத்திற்கு அருகில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை ஆரம்பித்து ஊடக நண்பர்களின் உதவியுடன் தொடர்ந்து எதிர்ப்பு அலை விடுத்தவண்ணம் இருந்தனர்.

நாட்டின் கொரோனா காரணமாக யாரும் ஒன்று கூடுவதை விரும்பாத நிலையிலும் அன்னையின் அரவணைப்பு கூடவே எம்மோடு இருந்து வழிநடத்தியது. பங்குத்தந்தையும் மக்களோடு மக்களாக இரணைதீவில் தங்கியிருந்து மக்களின் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்தி நல்வழிப்படுத்தினார். உணவுத் தேவைகளையும் ஏனைய தேவைகளையும் எமது பொது அமைப்புக்கள் மிகவும் சிறப்பாக செய்தார்கள்.

எதிர்ப்பு போராட்டம் வெற்றியளித்ததுடன் கொரோனா காரணமாக இறந்த உடல்கள் அடக்கம் செய்யும் முடிவு மாற்றமடைந்து வேறு பகுதிக்கு மாற்றப்பட்டது என்ற செய்தி மக்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியது. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்பது போல இரண்டாவது போராட்டமும் எமக்கு வெற்றியே தந்தது. அன்னைக்கே புகழ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கிராம மாணவரே பள்ளிப்பருவத்தை முறையாகத் திட்டமிடுங்கள்

*வாழ்க்கையைச் செப்பனிடுவதற்கான*
*ஆயத்தப் பருவமே பள்ளிப்பருவம்*
*பள்ளி வாழ்வில் வெற்றி பெறுவோர்*
*மிகுதி வாழ்வில் வாகை சூடுவர்*
*அறிவும் பண்பும் நட்பும் நம்பிக்கையும்*
*ஒழுங்கும் ஒழுக்கமும் தருமிடமே பள்ளி*

இவ்வாறு பள்ளிப்பருவம் பற்றிய நம்பிக்கை தரும் வாசகங்கள் உள்ளன. பள்ளிப்பருவம் ஒரு மாணவனுக்கு எந்தளவிற்கு முக்கியத்துவம் என்பதை மேற்படி வாசகங்கள் உணர்த்தி நிற்கின்றன.

பள்ளிப்பருவம் என்பது எல்லா மாணவர்களிற்கும் முழுமையாகக் கிடைத்து விடுவதில்லை. பள்ளிகள் தொலைவில் இருத்தல். வீட்டுப் பொருளாதார நிலைமைகள், வீட்டுக்காக வேலை செய்ய வேண்டி இருத்தல், படிப்பில் நாட்டமின்மை, மருத்துவக் காரணங்கள் போன்றவற்றால் சில மாணவர்கள் பள்ளிப்பருவத்தை பாதியிலேயே நிறைவு செய்து கொள்கின்றனர்.

இந்தப் பருவத்தில் மாணவர்களுக்கு கிடைக்கும் ஒவ்வொரு மணித்துளிகளையும் தங்களை மேன்மையானவர்களாக செதுக்கிக் கொள்வதற்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பள்ளிப் பருவத்திலேயே வாழ்வு பற்றிய இலக்கினை வகுத்துக்கொள்ள வேண்டும். அந்த இலக்கினை அடைவதற்கான தெளிவான சிந்தனைகளும் தெளிவான திட்டங்களையும் ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும். கிடைக்கும் எல்லா வசதிகளையும் வாய்ப்புக்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

தரம் 1-13 வரை கற்கும் போது உடல் ரீதியாக, அறிவு ரீதியாக, மனவெழுச்சி ரீதியாக, பண்பு ரீதியாக, ஆளுமை ரீதியாக மாணவர்கள் வளர்சியடைகின்றார்கள். பள்ளிப்பருவத்திற்கு அப்பால் தனி மனித வாழ்வு, குடும்ப வாழ்வு, தொழில் வாழ்வு, சமூக வாழ்வு என்பவற்றிற்குத் தேவையான தகுதிகளையும் திறமைகளையும் பள்ளிப் பருவத்திலேயே வளர்த்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும். பள்ளிப் பருவத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் அறிவும், தகுதியும், திறனும், நம்பிக்கையும், ஆற்றலும், ஆளுமையும், ஒழுங்கும் ஒழுக்கமும், தூய்மையும், உன்னதமும் கொண்ட நல்ல தனி மனிதனாக உருவாக முடியும்.

பள்ளிப் பருவத்தில் சகபாடிகளுடன் இடைத்தொடர்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் குடும்ப வாழ்வில் குடும்ப உறுப்பினர்களுடன் ஒற்றுமையுடனும் மகிழ்ச்சியுடனும் கூடி வாழக்கூடிய எல்லா மனப்பாங்கும், திறன்களும் ஏற்படும். சமூகமான தொடர்பாடல், பகிர்ந்து கொள்ளுதல், மதித்தல், வெற்றிக்காக பரஸ்பரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவுதல் போன்ற திறன் மனப்பாங்குகளை பள்ளிப் பருவத்திலே விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

பாதுகாப்பான அந்தஸ்தை பெற்றுத்தருகின்ற நிறைவான ஊதியத்தை வழங்குகின்ற தொழில் ஒன்றைத் தேடி கொள்வதற்கான திறன்களை பள்ளிப் பருவத்தில் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

பரந்து விரிந்த சமூகத்தில் ஒரு சிறந்த அங்கத்தவனாக வாழ்வதற்குத் தேவையான சமூக விதிகள், சமூக பழக்கவழக்கங்கள், சமூக நியமங்கள் என்பவற்றை அனுசரித்துச் செல்லும் மனப்பாங்கினையும் திறனையும் பள்ளிப்பருவத்தில் விருத்தி செய்து கொள்ளல் வேண்டும். பள்ளிப்பருவ மாணவர்களின் பணிகளாக பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

- அக்கறையும் ஊக்கமும் கொண்ட கற்றல்
- விளையாட்டும் ஓய்வும்
- நட்பை மேம்படுத்தல்
- தொழிலுக்கான கல்வியும் பயிற்சியும்
- சமூக நியதிகளை மதித்தல்

இவற்றை நிதானத்துடன் கடைப்பிடிப்பதன் மூலம் பள்ளிப்பருவத்தை பயனுறுதிமிக்கதாக மாற்றிக்கொள்ள முடியும்.

நேரத்தை வீணடிக்கும் நபர்களையும் பழக்கங்களையும் செயல்களையும் படிப்படியாகக் குறைத்துக் கொள்ளல் வேண்டும். நல்ல வழிகாட்டிகளைத் தெரிவு செய்து அவர்களைப் பின்பற்றுதல் சிறப்பானது. திரும்பக்கிடைக்காத நேரத்தை மீட்க முடியாத தீய பழக்கங்களிற்குள் தொலைத்து விடுவது தோல்வியையே கொடுக்கும். நிறைந்த அன்பு தரும் உங்கள் அம்மா, உங்களுக்கு வசதியும் பாதுகாப்பையும் தரும் அப்பா, அறிவை ஊட்டும் நல் ஆசான், சுயநலமில்லாத தூய பழக்கமுள்ள நண்பன் ஆகியோரை நம்புவதுடன் அவர்களின் அறிவுரைகள், ஆலோசனைகளைப் பின்பற்றுதல் வேண்டும். நட்புக்காகத் தீமைகளை உள்வாங்குவது ஆபத்தானது என்பதை புரிந்து கொண்டு எச்சரிக்கையுணர்வுடன் நட்பைப் பரிசீலித்துக் கொள்ளுதல் வேண்டும்.

பள்ளிப் பருவத்தை முறையாகப் பயன்படுத்துவதன் மூலம் சிறந்த தனிமனிதனாக, சிறந்த குடும்ப உறுப்பினராக, சிறந்த தொழிலாளராக, சிறந்த குடும்ப சமூக உறுப்பினராக எதிர்காலத்தில் மிளிர முடியும் என்பதை புரிந்து கொண்டு பள்ளிப்பருவத்தினை பயனுறுதிமிக்கதாகவும் மகிழ்ச்சியானதாகவும் அமைத்துக்கொள்ள வேண்டும்.

**திருமதி செ. அருள் நந்தன் அமலகௌரி**

ஆசிரியர், கிளி/இரணைதீவு றோ.க.த.க பாடசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மவரின் விசுவாச வாழ்வும் அன்னையின் அருட்கொடையும்...

'தாய்க்கு அன்பு வற்றிப்போகுமோ தனது பிள்ளை அவள் மறப்பாளோ'

மாறா அன்பும் அளவில்லாத நேசமுமே எல்லையற்ற, பெறமுடியாது என்று ஏங்குகின்ற பல கொடைகளை பெற அடிப்படையாக அமைகின்றது. அன்னை மரியாள் என்கின்ற வித்து கிறிஸ்தவம் என்ற விருட்சம் உலகம் முழுவதும் வியாபித்திருக்க காரணம் என்றால் மிகையாகாது. இந்த அன்பில் தித்தித்து திளைத்ததில் எமது இலங்கைத்தீவும் விதிவிலக்கல்ல. இரணைதீவும் விதிவிலக்கல்ல. அன்னையின் அன்பின் அருள் மழையில் நனைந்து நன்மை பெறுகின்றோம்.

கடலோடிகளுக்கும் அன்னைக்கும் பல ஒற்றுமை உண்டு. அதனால்தான் தங்களின் பாதுகாவலியாக கொண்டுள்ளனர். இதனால் அன்னையின் ஏராளமான அருட்கொடைகளில் இவர்களுக்கு பெரும்பங்குண்டு என்பது நிதர்சனம். இதனால் தான் எம்மவர்களின் பாதுகாவலியாக மனங்களில் குடிகொண்டுள்ளாள் புனித செபமாலைத் தாயவள். காலை கண்விழித்ததுமுதல் இரவு உறங்கும்வரை எம்மவர் கடலோடு போராடி உடல், உள சோர்வுற்றாலும் மூன்று நேரம் தாயவளின் இல்லம் நாடி அடைக்கலமடைந்து புத்துயிர் பெறுவது நாளாந்த செயலாகும்..

கடல்சூழ் நிலமாம் இரணைதீவு. இதன் அழகும் வனப்பும் பார்ப்போருக்கு கண்கவர் சித்திரம் போன்று அமைந்திருக்கும். இயற்கை தந்த அழகைப்போன்றே அதன் சீற்றமும் மிகக் கொடுமையானது. காலத்திற்கு காலம் வரும் இயற்கையின் சீற்றங்களையெல்லாம் தனது மகனிடம் ஒப்புவித்து இரும்புக்கரம் கொண்டு 'கோழி தன்குஞ்சுகளை இறக்கைகளில் மறைத்து காப்பது போல' இருக்கும். அன்னையின் பாதுகாப்பும் உடனிருப்பும் தலைமுறை தலைமுறையாக இருந்து வருகின்றமை இன்று நம் கண்ணூடாக காண்பதற்கு வானுயர உயர்ந்திருக்கும் இவ்வாலயமே சான்று. எமைச்சுற்றியுள்ள கடலவர் அனைவருக்கும் இனம், மதம், சாதி, மொழி கடந்து கலங்கரை விளக்காக அமைந்தது எமது அடைக்கல தீவுதான். எம்மவர் ஊடாக தனது அருட்கொடைகளையும் பாதுகாப்பையும் அவர்களுக்கும் வழங்கி நின்றாள் விண்ணக அரசி.

அன்னையின் இல்லத்தில் அமர்ந்து செபமாலை தியானம் செய்து கேட்கும் அனைத்தும் அருட்கொடையாக மகனிடத்தில் பரிந்துபேசி வாரிவழங்குவாள். எத்தனை அன்னையரின் உள்ளம் மகிழும்படி குழந்தை பாக்கியத்தை அருளியவள். எத்தனை கற்பகால வேதனைக்கு அன்னையாய் அருகிருந்தவள். இவ்வாறாக அன்னைகளுக்கெல்லாம் அன்னையாக விளங்குகின்றாள். செபமாலை தினம் ஓதி இறைவனின் திருவுளத்தை நிறைவேற்ற பணித்தாய். தினமும் குடும்ப செபமாலை ஒப்புக்கொடுப்பவர்களுக்கு திருமகனிடம் பரிந்துரை செய்பவளாய் ஆன்மீகத்திலும் கல்வியிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க ஞானஒளி ஊட்டி நிற்கின்றமையானது எம்மத்தியில் இன்று கண்ணூடாக பார்க்கும் வண்ணம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத்தீவை இனவெறி விழுங்கி மனிதர்கள் மிருகங்களாக மாறியிருந்த காலங்களில் முக்காலத்தையும் அறிந்தவளான அன்னை தனது திட்டத்தை தனது ஊழியர்களாலேயே நடைமுறை படுத்தினாள். பாட்டன் பூட்டன் வாழ்ந்த மண். இன்ப துன்பங்களை அருகிருந்து பகிர்ந்து வாழ்ந்த உறவுகள், எம் வாழ்க்கை சுவடுகள் பசுமையான நினைவுளாய் போக மீண்டும் திரும்புவோம் என்ற எண்ணத்தோடு தமது படகுகளில் உயிர்தப்பிக்க மறுகரை சேர துணைநின்றாள் அன்னை. அன்று தெரிந்திருக்கவில்லை தமிழினமே ஒட்டுமொத்தமாக ஊரைவிட்டு பிரிந்து செல்ல நேரிடும் என்று. போரின் மேகம் எமைச் சூழ்ந்த போதிலும் பொருளாதார தடை வறுமையை ஊக்குவித்த போதிலும் இழப்புக்களும் அதன் சோர்வுகளும் எமை அழுத்திய போதிலும் செபமாலை எனும் ஆயுதத்தை தனதாக்கி குடும்ப செபமாலையை தினம் செய்த எம்மவர் வீழ்கின்ற போதெல்லாம் அவர்களை திடப்படுத்தி முன்னேற புடமிட்ட கதை பல உண்டு.

போரும் பொருளாதார தடையும் தாண்டவமாடிய நேரமது. ஊருக்குள் வெடியோசை கேட்டால் அடைக்கலம் தேடி ஓடுமிடம் ஆலயம். அவ்வாலயத்தை நல்ல முறையில் நிரந்தர கட்டடமாக அமைக்க மக்களின் மனம் ஒருமனப்பட்டதும் இறைதிட்டம் என்பது கண்கூடு. உண்பதற்கே தொழில்செல்ல தடை ஆனால் ஆலயத்திற்கு அத்திவாரமிடல் நடக்க முடியாத காரியம் என பார்ப்போர் எல்லோரின் எள்ளிநகையாடல். ஆனால் அன்னையின் ஊழியரின் ஊக்கமும் எம்மவரின் விடாமுயற்சியும் அவளின் பரிந்துரையும் வழிநடத்தலும் ஒவ்வொரு வடிவங்களாக படிக்கற்களாக மாறியமை உள்ளம் நெகிழும் சம்பவமாகும்.

இடப்பெயர்வும் அன்னையின் வழிநடத்தலும் இஸ்ராயேல் மக்களோடு இறைதந்தை மோசேயை அனுப்பி வழிநடத்தியது போல, பல இன்னல்கள், துன்பங்கள், இழப்புக்கள் எமைத்தாக்கிய வேளையில் அவளின் உடனிருப்பு உணர்ந்தவர்கள் இன்றும் சாட்சியங்களாக எம்மத்தியில் உள்ளனர். அவளின் அரவணைப்பில் ஒப்பீட்டளவில் குறைந்தபட்ச இழப்போடு ஊர் திரும்பினோம் என்பது யாவரும் அறிந்த உண்மை. 'அவருக்கு அஞ்சி நடப்போருக்கு அவரது மீட்பு அண்மையில் உள்ளது என்பது உறுதி. நம்நாட்டில் அவரது மாட்சி குடிகொள்ளும் பேரன்பும் உண்மையும் ஒன்றை ஒன்று சந்திக்கும். *(தி:பா :85-9-10)*

கடந்து வந்த பாதைகள் கரடுமுரடானாலும் வலிகளும் வேதனைகளும் இருந்தாலும் தாயின் இல்லம் திரும்பி அவளின் அடைக்கலம் நாடி அமைதி பெற்று புதியதோர் வாழ்க்கை நிலைக்குள் வாழத்தொடங்கினார்கள். வேற்றிடங்களில் வாழும் நாட்கள் ஆயிரமாயினும் உம் கோயில் முற்றங்களில் தங்கும் ஒரு நாளே மேலானது என்ற திருப்பாடல் மூலம் எங்களிடையே நிறைவேறியது போன்ற எண்ணம் தோன்றுகின்றது.

அருட்கொடைகளின் தாயானவள் தனது மகனிடம் பரிந்து பேசி தனக்கான வரப்பிரசாதங்களை படிப்படியாக அள்ளித் தந்தாள். ஔவையாரின் குடியுயர கோன் உயர்வான்...... என்ற வாக்கிற்கிணங்க அன்னையின் ஆலயம் உயர மக்களின் வாழ்க்கை முறையும் உயரம் பெறும். ஆலயம் உயர விடாமுயற்சியும் விசுவாசவாழ்வும் தினமும் செபமாலையும் மன்றாட்டும் வானுயர எட்டியது போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றப்பாடு மக்களிடையே பலவகையான மாற்றங்கள், எண்ணங்கள் ஆலயம் நோக்கிப்பாய கிடைப்பவற்றை மெதுவாகக் கட்டுவோம் என்ற எண்ணத்திற்கு அன்னை அருள் வழங்குகிறாள்.


ஆலயமுயர ஆன்மீகமுயரும், கல்வி உயரும், பொருளாதாரம் உயரும் இவை மூன்றும் உயர சமூகம் உயரும். கற்றவனுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதற்கிணங்க சிறந்த கல்விச் சமூகமாக உயருவோம் என்பதில் ஐயமில்லை. படிப்படியாக ஒவ்வொரு மாற்றம். 'பத்திலொரு பங்கை காணிக்கை இட்டவரல்லர். மாறாக தனக்கென்று ஒரு ரூபாயை காணிக்கையாக இட்டவரே சிறந்தவராவார்' என்ற யேசுவின் திருவாக்கிற்கமைய ஒவ்வொரு கல்லாக 20 வருடமாக மெதுவாக செதுக்கப்பட்டதே இவ் ஆலயம். ஒவ்வொரு ஊர் மகனின் ஒரு ரூபாய்க்கான வியர்வைத்துளியே இவ்வாலயத்தைக் கட்டி முடிப்பதில் சிறப்பு. நான் உங்களுக்கு கோதுமையும் திராட்சை இரசமும் எண்ணெயும் தருவேன் நீங்களும் நிறைவு பெறுவீர்கள். இனிமேல் வேற்றினத்தார் நடுவில் உங்களை நிந்தைக்கு ஆளாக்க மாட்டேன் என்ற இறைவார்த்தைப் பகுதி எம்மில் நிறைவேறியது போன்ற தோற்றப்பாடாகின்றது. எனவே அன்னை மேல் கொண்ட அன்பும் இறை விசுவாசவாழ்வும் குறைவுபடாத சமூகமாக தலைமுறைக்குத் தலைமுறை இதைக் கட்டத்திச் செல்பவராகவும் வழிநடத்தப்படவும் எம் அன்னை கூட இருந்து வழிநடத்துவாளாக. தினமும் செபமாலை ஓதுவோம். அவள்வழி நடப்போம்.

மரியே வாழ்க

**தொகுப்பு : அ.அன்ரனி நியூமன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புனித செபமாலை அன்னை ஆலயம்

### ஆலய கட்டுமான வரவுசெலவு அறிக்கை

| விபரம் | வரவு | விபரம் | செலவு |
|---|---|---|---|
| மக்கள் அன்பளிப்பு - கூட்டு | 38,72,189.00 | ஆலய வரைபடம் | 1,32,000.00 |
| மக்கள் அன்பளிப்பு- காசு | 66,38,000.00 | சொத்துக்கள்- தளபாடம் | 2,18,500.00 |
| மக்கள் அன்பளிப்பு-பொருட்கள் | 11,71,540.00 | சொத்துக்கள் -இயந்திரம் | 18,70,000.00 |
| மக்கள் அன்பளிப்பு-கட்டட நிதி | 78,67,729.00 | சொத்துக்கள்- கூடுகள்,சொரூபங்கள் | 38,45,000.00 |
| மக்கள் அன்பளிப்பு- மனிதவலு | 69,50,000.00 | சொத்துக்கள்-மணி | 11,25,000.00 |
| கடற்றொழலாளர் கூட்டுறவுச்சங்கம் 10/= | 1,53,98,264.00 | சொத்துக்கள்-இலத்திரனியல் சாதனங்கள் | 13,60,000.00 |
| கடற்றொழலாளர் கூட்டுறவுச்சங்கம் - அட்டைப்பண்ணை | 3,37,11,546.00 | சீமெந்து | 55,55,000.00 |
| கடற்றொழலாளர் கூட்டுறவுச்சங்கம் அட்டைப்பண்ணையாளர் | 53,02,040.00 | கருங்கல்,சல்லி | 16,98,950.00 |
| ஆலய பக்தி சபைகள் | 4,07,870.00 | அரிகல்,செங்கல் | 3,89,020.00 |
| மாதாந்த ஊழியர் | 1,01,550.00 | மணல் | 28,09,700.00 |
| இரணைதீவு வரவு | 16,00,000.00 | கம்பி வகைகள் | 22,60,860.00 |
| ஆயர் இல்லம் | 12,00,000.00 | சீற், சீற்வேலை,மரம் | 80,29,110.00 |
| அரச மற்றும் அரச சார்பற்ற நிதி | 55,51,000.00 | ஓட்டு வேலை-ரஸ் | 22,11,234.00 |
| தேர்பவனி வேலை அன்பளிப்பு | 12,00,000.00 | வயரிங் | 29,00,900.00 |
| வெளிநாட்டு உறவுகள் | 5,50,000.00 | கதவு யன்னல் மரவேலை | 59,04,000.00 |
| பங்கைச் சாராத உறவுகள் | 7,49,700.00 | பெயின்டின் பெயிட் வேலை | 53,49,660.00 |
| ஏனைய வரவு | 2,37,750.00 | மேசன் கூலி | 1,98,99,290.00 |
| வங்கி வட்டி | 66,041.04 | சாரத்தடிப் பலகை | 5,89,900.00 |
| | | டோம் | 36,80,000.00 |
| | | கண்ணாடி வேலை | 9,05,000.00 |
| | | தராசோ வேலை | 31,00,000.00 |
| | | ஏற்றுக் கூலி | 4,70,710.00 |
| | | தேர்பவனி | 8,36,800.00 |
| | | பங்குப்பணிமனை | 43,87,000.00 |
| | | மதில் வேலை | 13,52,000.00 |
| | | மனிதவலு | 69,50,000.00 |
| | | அட்டைப் பண்ணை | 43,80,127.00 |
| | | எழுது பொருட்கள் | 22,606.00 |
| | | பிரயாணம் | 46,617.00 |
| | | ஏனைய பொருட்கள் | 1,71,130.00 |
| | | வங்கிச் செலவு | 20,041.04 |
| | | | 105064 |
| | | | |
| | 9,25,75,219.04 | | 9,25,75,219.04 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலயம் - 01

| இல | பெயர் விபரம் |
|---|---|
| 1. | தேவன்மேரிஜோசப் |
| 2. | செபமாலை ஜெயக்குமார் |
| 3. | யேசுதாசன் அல்போன்ஸ் |
| 4. | ஜோன்பிள்ளை ஜோனஸ்ஜீவன் |
| 5. | யாக்கோப்பு தேவராசா |
| 6. | செ.அன்ரன் ஜெயக்குமார் |
| 7. | பொனிற்றஸ் யூலியஸ் |
| 8. | சிறில் தேவதாஸ் |
| 9. | யாகப்பர் யசிந்தா |
| 10. | யேசுதாசன் யேசுரூபன் |
| 11. | பிரகாசம் அன்ரனி மெண்டீஸ் |
| 12. | யாக்கோப்பு யேசுதாசன் |
| 13. | சந்தியா யேசுதாசன் |
| 14. | சாமிநாதன் ஆசிநாதன் |
| 15. | பொனிப்பாஸ் ஜெயதாஸ் |
| 16. | கமிலப்பு சகாயநாதன் |
| 17. | மரியதாஸ் சிலுவைராசா |
| 18. | அல்வின் தொம்மை |
| 19. | கி.கொலின் |
| 20. | கா.சாள்ஸ் |
| 21. | ஜெயக்குமார் ஜெயராஜ் |
| 22. | சு.சாள்ஸ் கருணைசீலன் |
| 23. | நிர்மல் பெனனாண்டோ |
| 24. | யேசுதாசன் ஜெயந்திரன் |
| 25. | றொகான் சத்தியராஜ் |
| 26. | மகேந்திரன் யூட்சன் றோச் |
| 27. | பிரகாசம் அமல நிறைஞ்சன் |
| 28. | சந்தியோக பிகிராடோ |
| 29. | அன்ரன் பெர்னான்டோ |
| 30. | வினோஜன் |
| 31. | ஜெயந்திர றாஜ் |
| 32. | றெஜின் குட்டி |
| 33. | யூட்டன் |

## வலயம் - 02

| இல | பெயர் விபரம் |
|---|---|
| 1. | பீற்றர் கமல்குமார் |
| 2. | தேவன் பற்றிக்கிற் பொலிற் |
| 3. | தவராசா கௌரீஸ்வரன் |
| 4. | சாமிநாதன் அமலதாஸ் |
| 5. | சிங்கராயப்பு ஜெகநாதன் |
| 6. | மரியான் மரியதாஸ் |
| 7. | பாஸ்கரன் கிறிஸ்தோப்பர் |
| 8. | பி.எட்மன் கனியூட் |
| 9. | வீரசிங்கம் சுரேஸ் |
| 10. | சின்னப்பு பிரகாசம் |
| 11. | பென்சமின் ஜெயன் |
| 12. | சந்திரகுமார் சிவலிங்கம் |
| 13. | காளிமுத்து பிரதீப் |
| 14. | பென்சமின் ஜெயக்குமார் |
| 15. | பென்சமின் ஜெறோம் |
| 16. | பத்திரேஸ் தேவராசா |
| 17. | பென்சமின் ஜெயதாஸ் |
| 18. | செபமாலை ஞானசீலன் |
| 19. | தோமஸ் இருதய சார்லஸ் |
| 20. | சவேரியான் பற்றிக் நிறஞ்சன் |
| 21. | கிருஸ்ணபிள்ளை மகேந்திரராசா |
| 22. | ஞானசீலன் பிறேமன் |
| 23. | மத்தியாஸ் மரியான் பிள்ளை |
| 24. | யோசேப் இராஜேஸ்வரன் |
| 25. | கஸ்மீர் மனோகரசீலன் |
| 26. | நாசறிஸ் அகிலன் |
| 27. | கிறிஸ்ரியான் இருதயநேசன் |
| 28. | பத்திநாதன் எட்மன் கில்பட் |
| 29. | றம்பண்டா ஜோன்சன் |
| 30. | மரியநாயகம் காணிக்கை ராஜன் |
| 31. | கபரியேல் கெலேனியஸ் |
| 32. | அந்தோனி சிங்கராயப்பு |
| 33. | சந்தியா சகாயம் |
| 34. | நிஷாந்தன் மரியறோகினி |
| 35. | அல்வின் தொம்மை |
| 36. | ஞானசீலன் பொனிப்பாஸ் |
| 37. | பிரகாசம் பெர்னான்டோ |
| 38. | ஜெனா ஜென்சி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. சூசை செலஸ்ரின் பிகிறாடோ
40. செபமாலை பெஞ்சமின்
41. நீக்கிலான் மரியநாயகம்
42. இருதயநேசன் சகாயறாணி
43. சந்தியா சகாயம்
44. அந்தோனியம்மா
45. யேசுதாசன் மாகிறேட்
46. மரியதாஸ் றோஸ்மேரி
47. சக்கரியாஸ் றீத்தம்மா
48. செபமாலை பத்திரேஸ்
49. வில்பம் லூத்துநாயகி
50. சந்தியா பிரான்சிஸ்

26. ஜெ.ஜெனிஸ்ரன்
27. செ.பெனடிற்
28. தே.எட்மன் றொக்சன்
29. வி.அனுசன்
30. ஜெகதாஸ் அன்ரிபியூஸ்
31. போறஸ் பூமணி
32. சவின் கார்மேலா
33. தானியேல் அல்வினம்மா
34. கபிரியேல் தோமஸ்
35. அந்தோனி சத்தியநாதன்
36. டோமினிக்
37. சி.பாஸ்கோன்

## வலயம் - 03

**இல பெயர் விபரம்**

1. ஜேம்ஸ் அன்பரசன்
2. சவின் பொணிவ்வாஸ்
3. தேவசகாயம் தேவகின்சிலி
4. யாக்கோபு றோபேட் பெர்ணான்டோ
5. பீற்றர் பர்ணபாஸ்
6. வி. சுரேஸ்குமார்
7. அல்வின் ஜெயபாலன்
8. ஞா.இரஞ்சன்
9. தா.ஜெகநாதன்
10. கபிரியேல் அலெக்ஸாண்டர்
11. சுப்பிரமணியம் றூபன்
12. றோசரியான் சவேரியான்
13. இராயப்பு யோகராணி
14. திருநாவுக்கரசு ஜசோதன்
15. மத்தியாஸ் லூயிஸ்பாலன்
16. சத்தியநாதன் அன்ரன்ரவீந்திரன்
17. பிரான்சிஸ் அல்போன்
18. சந்தியா அந்தோனிப்பிள்ளை
19. யாக்கோபு ராஜ்குமார்
20. ஈசாக் யோன்பிள்ளை
21. திரவியம் மகேந்திரன்
22. சுரேன்
23. அந்தோனி பியன்வெனு நோயல்
24. பாஸ்கரன் பிறேமன்ராஜ்
25. ச.ஜெகதாஸ்

## வலயம் - 04

**இல பெயர் விபரம்**

1. செபமாலை இருதயநேசன்
2. சவின் லூயிஸ்வாஸ்
3. சத்தியசீலன் தயாணந்தன்
4. அந்தோனிமுத்து கிறிஸ்ரியான்
5. எக்கிறாஸ் யேசுராசா
6. மக்கிமஸ் மைக்கல்
7. சந்தியா சன்னிக்கிலா
8. அ. லக்மன்
9. பர்னாந்து சற்குணநேசன்
10. அல்பிறட் ஜிம்மிக்காட்டர்
11. வேதநாயகம் டேமியன்
12. தோமஸ் இருதயசதீஸ்
13. சின்னப்பு பாஸ்கரன்
14. எக்கிறாஸ் கருணா லோறன்ஸ்
15. பாஸ்கரன் றோமன் றாஜ்
16. அ. அன்ரன் உதயக்குமார்.
17. யோ.கிளமென்ற் யோசப்
18. ச.யூலியம்மா
19. யோ. சுதாகரன்
20. சி.யோன்மரியசீலன்
21. ஜே.ஜெயராஸஜன்
22. கி.கிளமென்ற்
23. தே.கின்சிலி
24. ம.யோர்ஜ்
25. அ.சந்தியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. பா. அன்பழகன்
27. டோ. லூயிஸ்டெசி
28. தே.லக்மன்பெரேரா
29. பி.அமல நிறைஞ்சன்
30. சந்தியா அல்பிறட்
31. ச.திரவியம்
32. கீதபொன்கலன் ஆகத்தம்மா
33. ஸ்ரீபன் நற்றிசம்மா
34. மா.பெனடிக்ற்
35. மரிய செல்வக்குமார் றோஸ்மணி
36. ம.செபமாலை

## வலயம் - 05

**இல பெயர் விபரம்**

1. முடியப்பு மரியஜெயசீலி
2. சிறில் சவேரியான்
3. சந்தியா வேதநாயகம்
4. தமியான் சத்தியசீலன்
5. யஸ்ரின் யாகப்பர்
6. செ.மரியசெல்வக்குமார்
7. எ.செபஸ்ரியாம்பிள்ளை
8. அ.சூசைநாதன்
9. வை.பங்கிராசா
10. எ.அன்ரனிகமிலேஸ்
11. ச.அகஸ்ரின்
12. செ.புஸ்பராசா
13. செ.லோறன்ஸ்
14. பெ.யோனாஸ் டொறிங்டன்
15. சூ.கிறிஸ்து றாஜன்
16. செ.சகாயம்பிள்ளை
17. ம.அகஸ்ரின்
18. ம. எட்மன் பெர்னான்டோ
19. ப. எட்மன் நெல்சன்
20. ச. டெல்வினஸ்
21. பி. றெக்சன்
22. செ.திலிபன்
23. நி. கமிலஸ்
24. ம. யேசுதாசன்
25. ச. லதீஸ்
26. U. அன்ரனி

27. ஜே. ஜெனிஸ்ரன்
28. ம. சிசிலியம்மா
29. வி. விஜயரகு
30. ஏரோனி மரியம்மா
31. வி. மரிஸ்ரெலா
32. சி. பத்திநாதர்
33. ம. சிசிலியம்மா
34. ம. அருள்வாசகம்

## வலயம் - 06

**இல பெயர் விபரம்**

1. டோறஸ் பிரதீபன்
2. டோ. யேசுநேசன்
3. றோ. றோசகான் சூரி
4. செ. பீற்றர்
5. ட. றேமன்
6. ச. ஜான்சன்
7. நீ. பிறேமன்
8. அ. கிளரன்ஸ்
9. கு. நேசன்
10. ச.சகாயம்
11. வே. கோபிகாந்தன்
12. பி. அலோசியஸ் றோய்
13. கி. எலிசபேத்
14. அ. நிர்மலன்
15. ச. தயானந்தன்
16. அ. யேசுதாசன்
17. ஜெ. சுதர்சன்
18. சா. ரவிச்சந்திரன்
19. செல்வராசா
20. வை. மதீபன்
21. சூ. செல்வரட்ணம்
22. சூ. ஜெயரட்ணம்
23. சு. செபஸ்ரியான்பிள்ளை
24. டோ. சுகாயம்
25. டோ. சேவியர்
26. பாலசூரி
27. யோன் லீனஸ்
28. அ.அடைக்கலம்
29. அ. றொபட் கெனடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30. சு. யோன் கென்னடி
31. ப. மைக்கல்
32. அ. நியூட்டன்
33. ஜெ. ரெறன்ஸ்
34. சூ. குணரட்னம்
35. செ. கிளாறட்
36. அ. பர்ணாந்து
37. நீ. றஞ்சன்
38. அ. மேரிஅனா
39. ச. அலோசியஸ்வாஸ்
40. ச.அருள்தேவி
41. அ. அகஸ்ரின்
42. அ. கிளிஎடிசன்
43. றெ சலமோன் வாஸ்
44. பி. றோயஸ்
45. ம. குருசுமுத்து
46. லோறேன்வாஸ்

## வலயம் - 07

**இல பெயர் விபரம்**

1. ஞானமுத்து இருதயநேசன்
2. அந்தோனி ஜெபநேசன்
3. மோசஸ் பிரான்சிஸ்
4. எக்கிறாஸ் லூயிஸ் றாஜன்
5. சிறில் எட்வேட் நிக்சன்
6. சந்தியா புவனேந்திரன்
7. அந்தோனி கிளாசன்
8. சத்தியசீலன் ஞானானந்தன்
9. அந்தோனி ஜெறோம் வாஸ்
10. சந்தியா எல்வின் யோசவ்
11. புஸ்பநாதன் பால ரகு
12. வலன்ரைன் மிக்கேல் தார்சியஸ்
13. டேனிஸ் வேதநாயகம்
14. சின்னப்பு அருமைநாயகம்
15. றேமுந்து டக்கிளஸ் சத்தியசீலன்
16. யேசுதாசன் றேமுந்தம்மா
17. றோசரியான் மாசிலாமணி
18. அந்தோனி நற்குணபாலன்
19. சந்திரமோகன் மரிய கொறற்றி
20. டேனிஸ் பர்ணாந்து
21. தேவசகாயம் பெஸ்ரன் பெரேரா
22. செல்வநாயகம் அருள் நந்தன்
23. அருள்நேசன் பிப்பினப்பர்
24. பிரகாசம் டிக்சன் பெர்ணாண்டோ
25. பிரகாசம் காணிக்கைராசா
26. லே. செபஸ்ரியாம்பிள்ளை
27. ஞானசீலன் அன்பழகன்
28. ஜேம்ஸ் ஞானனந்தன்
29. யேசுதாசன் றூபன்சன்
30. காணிக்கைராசா ஜோய்
31. செபமாலை வலன்ரைன்
32. மத்தியாஸ் லேயோன்பிள்ளை
33. திருஞானம் இரத்தினம்
34. சந்தியா வில்பிறட்
35. சின்னப்பு செல்வேஸ்திரி
36. தேவசகாயம் மரிய பொலின்
37. பவுல்ராசா விசிறித்தம்மா
38. சின்னப்பு அருள்பிரகாசம்
39. செபஸ்ரி அந்தோனி
40. நீக்கிலான் விமலதாஸ்
41. றேமுந்தம்மா
42. செ. யோண்பிள்ளை

## வலயம் - 08

**இல பெயர் விபரம்**

1. யா. அன்ரனி
2. பெ. லூயிஸ் லக்ஸ்மன்
3. ஜே. தயானந்தன்
4. செ. ஜேம்ஸ்
5. சி. மரியதாஸ்
6. அ. கொண்சாலஸ்
7. கீ. அன்ரன் சேவியர்
8. அ. நியூமன் குருஸ்
9. பா. ராகுலன்
10. அ. அருள்தாஸ்
11. சி. தனிக்கிளாஸ்
12. ப. எட்மன் கில்லறி
13. கு. இருதயநாதன்
14. றே. அன்ரன் ஜெயசீலன்
15. அ. அன்ரனி நியூமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. க. பஸ்ரியன் குருஸ்
17. அ. பெனடிக்ற்
18. பா. அன்ரன் யோசவ்
19. ச. ஜெயசீலன்
20. பா. ஜெயசிங்கன்
21. பி. செபஸ்ரியான்பிள்ளை
22. செ. சவிரிமுத்து
23. பீ. றூபன்
24. வெ. எட்வேட் கெனடி
25. வி. டொலறோஸ் மேரி
26. ஜே. இராஜ்குமார்
27. கு. யேசுதாசன்
28. செ. ஜெயராசா
29. வி. அன்பரசி
30. இ. அன்பு
31. பூ. ஜோனாஸ் பவுஸ்ரின்
32. டோ. பற்றிக் ஞானப்பிரகாசம்
33. அ. எட்வேட் போல்
34. ஜே. கருணானந்தன்
35. செ. மரிய றூபன்
36. லதீஸ்வரன்
37. வி. பத்திநாதன்
38. அருட்செல்வன்
39. தொ. அல்வின்
40. பாக்கியம்
41. சத்தியசீலன்
42. அஜித்
43. பா. ராஜ்குட்டி பிறேமன்ராஜ்
44. ம. சலோமன் வாஸ்
45. செ. பாக்கியம்
46. கு. அந்தோனி

## மேலதிக அன்பளிப்புச் செய்தவர்கள்

1. யா. யேசுதாசன்
2. றே. கருணைசீலன்
3. பி. மென்டீஸ்
4. யோ. ஜோனாஸ் ஜீவன்
5. கி. சதாநாயகி
6. சி. ஜெகநாதன்
7. ம. மரியான்
8. மகேந்திரராசா
9. கி. பற்றிக் நெல்சன்
10. ஞா. பிறேமன்
11. பீ. பர்ணவாஸ்
12. அ. ஜெயபாலன்
13. ச. பொனிவாஸ்
14. அ. பியன்வெனு நோயல்
15. இ. யோகராணி
16. ந. கின்சிலி
17. அ. ஜிம்மிகாட்டர்
18. அ. அன்ரன் உதயகுமார்
19. சி. யோண் மரியசீலன்
20. தோ. இருதய நாதன்
21. அ. ஜீவன்
22. அ. சந்தியா
23. அ. சற்குண நேசன்
24. செ. இருதய நேசன்
25. த. சத்தியசீலன்
26. சூ.குணரட்ணம்
27. ச. தயாளன்
28. ச. அலோசியஸ்வாஸ்
29. டோ. யேசுநேசன்
30. அ.அகஸ்ரின்
31. பெ. அலெக்ஸ் சாந்தி
32. ஜே. சுதர்சன்
33. சூ. ஜெயரட்ணம்
34. லோ. லோறேன்வாஸ்
35. செ. சந்தியா
36. அ. நிர்மலன்
37. ச. ரவிச்சந்திரன்
38. பி. அலோசியர்
39. செ. பாலசூரி
40. அ. றொபட் கென்னடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

41. றோ. சூரி
42. டோ. பிரதீபன்
43. சு. ஜோன் கென்னடி
44. பு. எட்மன் மைக்கல்
45. அ. அன்ரனி நியூட்டன்
46. கி. ரெறன்ஸ்
47. அ. யேசுதாசன்
48. யோ. யோண் லீனஸ்
49. யோ. மேரி ஆனா
50. றோ. மாசிலாமணி
51. அ. கிளாசன்
52. ஞா. அன்பழகன்
53. சி. நிக்சன்
54. 54. அ. விசிறிற்றம்மா
55. 55. டே. பறுனாந்து
56. 55. டே. தேவநாயகம்
57. 56. ஜே. தயானந்தன்
58. 57. யோ. ஞானப்பிரகாசம்
59. 58. அ. எட்வேட் போல்
60. 59. ச. ஜெயசீலன்
61. 60. க. பஸ்தியான் குருஸ்
62. 61. அ. அருள்தாஸ்
63. 62. றே. அன்ரன் ஜெயசீலன்
64. 63. ச. தனிக்கிளாஸ்

## வரவு விபரம்

### வெளிநாட்டு உறவுகள்

1. திரு.டேவிற் தோமஸ்
2. திரு. இருதநாதன் தோமஸ்
3. திருமதி மரியஸ்ரெலா (ஜெஸ்மி)
4. திரு. வ. அருள்தாஸ்

### பங்கைச் சாராதோர்

1. அ. சகாயநாதன்
2. அ.அமலராஜன்
3. ஆ.அகஸ்ரின்

### ஏனையோர்

1. திரு. நெப்போலியன்
2. திரு. வசந்தன்
3. திரு.ரகு
4. திரு. சூரி
5. திரு.ராசு

### அரச அரச சார்பற்ற நிறுவனங்கள்

1. கிறிஸ்தவ கலாசார அமைச்சு
2. தப்ரபேன் சீபூட் நிறுவனம்
3. சுகந்தன் கடலட்டை ஏற்றுமதி நிறுவனம்
4. சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்...

புனித செபமாலை மாதா ஆலய திறப்பு விழாவை முன்னிட்டு வெளிவந்து கைகளில் தவழும் இம்மலரின் வாசம் எங்கும் மணம் வீச தேவ அன்னை துணை புரிவாளாக, மேலும் இம்மலர் எமது ஆலயதிறப்பு விழாவில் வெளியிட எண்ணி மிகக்குறுகிய காலத்திற்குள் பல ஆசிச் செய்திகளையும் வாழ்த்துச் செய்திகளையும் வரலாற்றுக் கட்டுரைகளையும் ஆக்கங்களையும் வழங்கிய அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

மேலும் இம்மலரினை தரவேற்றம் செய்வதற்கு இரவு பகல் பாராது உழைத்த எமது உறவுகளுக்கு எமது சிறப்பான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடுத்து இம்மலர் வெளிவருவதில் மிகுந்த ஆர்வமாக உழைத்த மலர் வெளியீட்டுக் குழுவினர், பங்குமக்கள் மற்றும் பங்குத்தந்தை ஆகிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள். இன்னும் வடிவமைப்பு, அச்சுப்பதிப்பு வேலைகளில் உதவி புரிந்த பண்டத்தரிப்பு J. S. அச்சகத்தினருக்கும், புகைப்படப் பிடிப்பாளர்கள் குழுவுக்கும் எமது சிறப்பான நன்றிகள்.

அத்தோடு நிதி உதவிகளை வழங்கிய பங்குத் திருச்சபைக்கும், Presentation Brothers, Ireland ஆகியோருக்கும் எமது விசேட நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் இந்நூல் வெளிவர உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நன்றி

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
இரணைதீவு, பூநகரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org